இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 173 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 04 வியாழக்கிழமை 18.05.2017

## கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஐ.நா. செயலருக்கு அவசர கடிதம்

>> 26

## ஆறாத வடு....



படம்: அமரதாஸ்

# முள்ளிவாய்க்காலில் இன்று பெருந்துயர் நினைவேந்தல்

## காலை 9.30 மணியிலிருந்து 3 நிமிடங்கள் அகவணக்கம் செலுத்துமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்காலில் மூச்சடங்கிப் போன தேசத்து உறவுகளுக்காக தமிழர் தாயகப் பிரதேசங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படவுள்ளன. பெருந்துயர் நடந்தேறிய முள்ளிவாய்க்கால் மண்ணில் முதன்மை நிகழ்வு வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

எம்மின விடிவுக்காக மூச்சடங்கிப் போனவர்களுக்காகவும், கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட மக்களுக்காகவும் இன்று காலை 9.30 மணியிலிருந்து 3 நிமிடங்கள் அகவணக்கம் இடம்பெறவுள்ளது. தமிழர் தேசம் எங்கும் சமநேரத்தில், சகலரும் தங்கள் கடமைகளை விடுத்து, வாகனங்களில் செல்வோர் அதனை ஓரமாக நிறுத்தி, அவசர சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் சேவைகளையும் இந்த மூன்று நிமிடங்கள்

>> 27

## 3 மாவட்டங்களில் நேற்று நினைவேந்தல்



>> 26

## லொஸ் ஏஞ்சல்ஸில் முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை

### கொசோவோ பிரதிநிதி நிகழ்த்துவார்



கொழும்பு, மே 18

தமிழினப் படுகொலையை நினைவேந்தும் மே18 தமிழீழத் தேசிய துக்க நாளில் நாடு கடந்த தமிழீழ அரசு, அமெரிக்காவில் முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரைக்கு ஏற்பாடு செய்துள்ளது.

>> 28

## முல்லை. பயணத்தை கைவிட்டார் மைத்திரி

யாழ்ப்பாணம், மே 18

அரச தலைவர் மைத் திரிபால சிறிசேனவின் முல்லைத்தீவுப் பயணம் கைவிடப் பட்டதாக, முல்லைத்தீவு மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. அரச தலைவரின் பயணத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியிருந்த நிலையில், அது கைவிடப்பட்டது. வறுமை ஒழிப்புத் தேசிய

>> 04

## நினைவேந்தல் நிகழ்வை நடத்த அருட்தந்தைக்கு நீதிமன்று தடை

### முல்லைப் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று



நினைவேந்தல் நடத்தத் தயாரான இடம்

>> 04

## சைக்கிளில் பயணித்த இளைஞர் பேருந்து மோதிப் பரிதாபச் சாவு

### ஊர்காவற்றுறையில் நேற்றுக் காலை சம்பவம்



யாழ்ப்பாணம் மே 18

ஊர்காவற்றுறை பாலைக்காட்டுச் சந்தியில் நேற்றுக் காலை பேருந்தும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் 18 வயது

>> 29

காணாமற்போனோர் விவகாரம்

## மைத்திரி - விக்கி சந்திப்பில் உறுதியான பதில் இல்லை

கொழும்பு, மே 18

காணாமற்போனோர் விவகாரத்துக்கு உறுதியான பதில் எதுவும் அரச தலைவரால் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு நேற்று வழங்கப்படவில்லை. வடக்கு மாகாணத்தின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பில் முதலமைச்சரால் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கு வழமையான உறுதி மொழிகளே அரச தலைவரால் நேற்றும் வழங்கப்பட்டன.

>> 29

## மனோ கணேசனுடன் நேற்று நேரில் முரண்பட்ட ஞானசாரர்

### சிங்களவரின் தயவினால்தான் தமிழர் நாட்டில் வாழ்கிறார்களாம்



கொழும்பு, மே 18

இது சிங்கள பௌத்த நாடு. சிங்களவர் நாட்டுக்குச் சொந்தக்காரர்கள். ஏனையோர் வெளியிலிருந்து வந்தோர்.

>> 25

## கூரிய ஆயுதத்தால் கழுத்தில் தாக்கப்பட்டு பெண் கொலை

### சிறுப்பிட்டி மத்தியில் கொடூரம்

யாழ்ப்பாணம் மே 18

வீடு புகுந்த இனந்தெரியாதோரால் கூரிய ஆயுதத்தால் கழுத்தில் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட நிலையில் பெண் ஒருவர் உடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தக் கோரச் சம்பவம் யாழ்ப்பாணம், சிறுப் பிட்டி மத்தி,

>> 29

## கல்லுண்டாயில் இறைச்சிக் கழிவுகளை கொட்டி வந்தவர் நேற்றிரவு சிக்கினார்

### யாழ். மாநகர சபை ஊழியர்களின் முயற்சியில்



யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு டிமிக்கி விட்டு நீண்ட நாட்களாக கல்லுண்டாய் வெளியில் மாட்டு எலும்புகளைக் கொட்டிவந்த படி வாகனம் நேற்றையதினம் இரவு கையும் மெய்யுமாக மடக்கிப்பிடிப்பட்டது.

>> 29

## இரும்புக் கம்பியால் தலையில் தாக்கி இளைஞர் கொலை

### வவுனியாவில் சகோதரர்கள் கைது

வவுனியா, ம 18

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதால் இரும்புக் கம்பியால் தலையில் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த இளைஞர் சிகிச்சை பயனளிக்காது

>> 28

# காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டத்தை உடனே செயற்படுத்துங்கள்

*அரசை மீண்டும் வலியுறுத்துகிறது கூட்டமைப்பு*

யாழ்ப்பாணம், மே 18

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்த பின்னர்தான் அதனை நடைமுறைப்படுத்துவோம் என்று அரச தலைவர் சொல்லிக் கொண்டிருக்கின்றார். திருத்தத்தை எவ்வேளையிலும் செய்யலாம். சட்டத்தை உடனே நடைமுறைப்படுத்துங்கள் என்று அரச தலைவருக்கு, நாம் பலமுறை இடித்துரைத்துள்ளோம். இப்போதும் அதற்கான பகிரங்கக் கோரிக்கையைநாம்விடுக்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

போரின்போது காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை உடனடியாக அரசு தெரிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியும், காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டு எட்டு மாதங்கள் கடந்தும் அதனை நடைமுறைப்படுத்த அரசு இன்னமும் நடவடிக்கை எடுக்காது அசமந்தப் போக்கில் செயற்படுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டியும் அரச தலைவர், தலைமை அமைச்சர், அயலுறவுத்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்குக் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் ஒன்றியத்தினர் நேற்று மனுக் கையளித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இல்லாத காரணத்தால் அவர் சார்பில் அந்த மனுவை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பெற்றுக் கொண்டார்.



இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்,

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவும் சட்டம் கடந்த ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றில் நிறைவேற் றப்பட்டது. இந்தச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் சட்டத்தில் உள்ள பல குறைபாடுகளை நிவர்த்தி செய்து சட்டத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. வாக்கெடுப்பின்றிச் சட்டம் அனைத்துத் தரப்பின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டும் இன்றுவரை சட்டம் நடைமுறைக்குக்கொண்டு வரப்படாமை துரதிர்ஷ்டவசமானது. இந்தச் சட்டத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரும்படி பலதடவைகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரைச் சந்தித்து வலியுறுத்தியிருந்தார். எனினும், காணாமற்போனோர் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டியுள்ளது. அதன்பின்னர்தான் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவோம் என்று எங்களுக்கு வாக்குறுதியளித்திருந்தார்.

ஆனால், கூட்டமைப்பின் நிலைப்பாடானது சட்டத்தில் எவ்வேளையிலும் திருத்தங்களை மேற்கொள்ளலாம். திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதற்காகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருக்கமுடியாது. இதனைத் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளோம். இந்தச் சட்டம் எந்த அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற நடைமுறையை அரச தலைவர் இன்னமும் தீர்மானிக்கவில்லை. தலைமை அமைச்சர் இந்த விடயத்தைப் பொறுப்பேற்பதாகச் சில மாதங்களுக்கு முன்னர் எங்களிடம் கூறியிருந்தார். ஆனால், அவரும் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

திருத்தங்கள் மேற்கொள்ளும் வரை பொறுத்திருக்கவேண்டிய அவசியம் கிடையாது. சட்ட வரைவு நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டிருப்பின் அந்தச் சட்டத்தை நிர்வகிப்பது எவர் என்று அரச தலைவர் உடனடியாக வர்த்தமானியில் பிரசுரிக்கவேண்டும். உடனடியாக காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் அரசுக்குப் பகிரங்கக் கோரிக்கை விடுக்கின்றோம்- என்றார்.(த-5)

## காணாமற்போனோர் குறித்து பதில் கூறாவிடின் அரசு மீதான மக்களின் நம்பிக்கை உடையும்

*காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் ஒன்றியம் எச்சரிக்கை*

யாழ்ப்பாணம், மே 18

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உடனடியாக உரிய பதிலை அளிக்காதவிடத்து இந்த அரசு மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை உடைந்து போய்விடும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காணாமற்போனோர் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு பதிலை அரசு வழங்கவேண்டும் எனக் கோரியும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கான மனு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் ஒன்றியத்தால் கையளிக்கப்பட்டது.

இதன்போது இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் ஒன்றியத் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டு எட்டு மாதங்கள் கடந்துள்ளன. மகிந்த அணியின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த அரசுக்கு இருந்த முதுகெலும்பின் அடிப்படையில் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அனைத்துச் சிவில் அமைப்புகளும் இதற்கு வரவேற்பளித்திருந்தன. நாங்கள் எதிர்பார்த்த அனைத்தும் அதில் இல்லாவிடினும் உறவுகள் எதிர்பார்த்திருந்த சில விடயங்களை அதில் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

எட்டு மாதங்கள் கடந்தும் சட்டம் நடைமுறைக்கு வரவில்லை. பன்னாட்டு விசாரணையைக் கோருகின்றனர், நீதியை நிலைநாட்டுவதில் அரசு மீது நம்பிக்கை இல்லை என்ற வாதங்கள் மேலோங்கியுள்ளன. அரசு நிறைவேற்றியுள்ள இந்தச் சட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பில் உண்மை வெளிக்கொண்டு வரப்படுமாயின் இந்த அரசு மீது மக்கள் நம்பிக்கை கொள்வர். இதனை சுலபமாக அரச தலைவரால் செய்யமுடியும்.

ஜூலை மாதம் 5ஆம் திகதி நாங்கள் காணாமற்போனோர் உறவுகளைக் கொழும்புக்கு அழைத்து வருவோம். அப்போது அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நேரடியாக இந்த விடயம் தொடர்பில் நேரில் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும்.

அரசு மீது நாங்கள் நம்பிக்கை வைக்கத் தொடர்ந்தும் தயாராகவே உள்ளோம். இதற்கு உரிய பதிலை அரசு வழங்கி நல்லிணக்கத்தின் அடுத்த கட்டத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும். இல்லாவிடின் இந்த அரசு மீதான மக்கள் நம்பிக்கை உடைந்து போய்விடும் - என்றார். (த-5)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று தனியான நினைவேந்தல்

*கோரிக்கைக்கு விக்கி இணங்க மறுத்ததால்*

யாழ்ப்பாணம், மே 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கையை, தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும், வடக்கு மாகாண முதலமைச் சருமான சி.வி. விக்னேஸ் வரன் ஏற்றுக்கொள்ளாத நிலையில், அந்தக் கட்சி முன்னரே தெரிவித்தவாறு தனியான நினைவேந்தல் நிகழ்வை ஒழுங்குபடுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலரால் மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பின் 8ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் இரண்டு இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரையில் மாணிக்கபுரம் வாவிக் கரையில் (வாகரை வைத்தியசாலைக்கு அண்மையில் மட்டு. - திருகோணமலை வீதியில்) காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

வடக்கு மாகாணத்தில் முள்ளிவாய்க் கால் கிழக்குக் கடற்கரையில் (ஏ32 வீதியில் 46ஆவது கிலோ மீற்றர் கல்லிலிருந்து புனித சின்னப்பர் ஆலய வீதி) பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.

தாயக மண்ணில் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளைக் கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை எமக்குள்ளது. இறந்தவர்களது ஆத்ம சாந்திக்காக முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எம் உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியான வழியில் அனைவரையும் கடைப்பிடிக்குமாறு அந்தப் பத்திரிகை அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஒழுங்குபடுத்துவது பொருத்தமானது அல்ல எனவும், அதனைத் தமிழ் மக்கள் பேரவை பொறுப்பேற்று நடத்தவேண்டும். அவ்வாறு செய்யப்படாவிட்டால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக நினைவேந்தலை மேற்கொள்ளும் என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்திருந்தது. இதன் பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் விடுத்த அறிக்கையில், கட்சிபேதமின்றி அனைவரும் ஓரணியில் திரண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந் தலை நடத்த முன்வரவேண் டும் என்று கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஆபத்தான ஆயுதங்களுடன் பயணித்த ஐந்து பேர் கைது

*முச்சக்கர வண்டியும் மீட்பு*

சாவகச்சேரி மே. 18

தீங்கு விளைவிக்கக்கூடிய ஆயுதங்களுடன் பயணித்த முச்சக்கர வண்டியைக் கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியதுடன் அதில் பயணித்த சாரதி உட்பட ஐவரையும் கைது செய்தனர்.

இவர்களைச் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது ஐவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை.

கடந்த திங்கட்கிழமை மாலை கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மீசாலைபுத்தூர் சந்தியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்ட முச்சக்கர வண்டியைப் பொலிஸார் சோதனையிட்டனர். இதன்போது தீங்கு விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் இருப்பதைக் கண்டு முச்சக்கர வண்டியையும் அதில் பயணித்த 5 பேரையும் கைது செய்தனர்..

இந்த ஐந்து பேரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை ஐவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(த-9)

## கிளிநொச்சியில் இன்று நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் கிளிநொச்சியில் இன்று நடைபெறவுள்ளன. கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு, இன்று மாலை 4 மணிக்குக் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-5)

## முள்ளிவாய்க்கால் நினைவாக இன்று காசியில் வழிபாடு

*இந்திய - இலங்கை அன்பர்கள் பங்கேற்பர்*

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் உயிர் நீத்தோரின் முத்திப்பேறு வேண்டிப் பூசை வழிபாடுகள் இந்தியாவில் காசியிலும் சென்னை மயிலாப்பூரிலும் நடைபெறவுள்ளன.

இலங்கைச் சிவசேனைத் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன், இந்திய இலங்கை நட்புறவுக் கழகத் தலைவர் கவிஞர் காசி ஆனந்தன், சிவத்திரு கபிலனார் அடிகளார் மற்றும் தமிழ்நாடு இந்து மக்கள் கட்சித் தலைவர் சிவத்திரு அர்ச்சு னர், சம்பத்து கட்சிச் செயலாளர் இராம இரவிக் குமார் ஆகியோர் தலைமையில் இந்த வழி பாடுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடியார்களும் சிவத் தொண்டர்களும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காசிக் கங்கைக் கரையிலும், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீச்சரர் திருக்கோயில் குளத்திலும் நீத்தார் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# இனவாதச் செயலான மே 18 நினைவேந்தலை தடுக்கவேண்டும் அரசு

## ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கோரிக்கை

கொழும்பு, மே 18

போரில் கொல்லப்பட்ட புலிகளை நினைவு கூருவதற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜி லிங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேச விரோத இனவாத நிகழ்வுகள் அனைத்தையும் அரசு தடை செய்யவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டை மாத்திரமன்றித் தமது சொந்த மக்களையே அழித்துக்கொண்டிருந்த புலிகளை நாம் இல்லாதொழித்து இந்த நாட்டுக்கு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். ஆனால், சில தமிழ்ப் பேரினவாதிகள் இந்தச் சுதந்திரத்தைப் பிழையாகப் பயன்படுத்துவதற்கு முற்படுகின்ற னர்.



தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் போன்றவர்கள் உயிரிழந்த புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுப்பதற்கும் அவர்களைத் தியாகிகளாக அப்பாவிகளாகக் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்ட மே 18 ஆம் திகதியன்று (இன்று) புலிகளை நினைவு கூருவதற்கு சிவாஜிலிங்கம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

இது ஒரு தேச விரோத இனவாதச் செயலாகும். இதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இலங்கைப் படையினர் கொன்றது புலிகளை அல்ல அப்பாவித் தமிழர்களை என்றொரு பொய்யான செய்தியை இவர்கள் பன்னாட்டுக்குக் கூறப் போகின்றனர்.

இது படையினருக்கு எதிரான போர்க் குற்றச் சாட்டை வலுப்படுத்த உதவும். படையினருக்கு எதிரான போர்க் குற்றச் சாட் டை அரசு நிரா கரிப்பது உண்மையென்றால் சிவாஜிலிங்கத்தின் நிகழ்வை அரசு உடன் நிறுத்த வேண்டும்.

புலிகளின் உயிரிழப்பை நினைவு கூரும் இவர்கள் புலிகளால் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூராதது ஏன்? அவர்கள் அந்த மக்களை நினைவு கூர முன்வருவார்களா? நல்லிணக்கம் என்ற போர்வையில் தமிழ்ப் பேரினவாதிகள் செய்யும் இவ்வாறான செயல்களையெல்லாம் அரசு பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது. இதற்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (த-3)

# ஞானசார தேரரை அடக்கத் தவறின் விபரீத விளைவுகள்

## எச்சரிக்கிறார் அஸ்வர்



கொழும்பு, மே 18

ஞானசார தேரரின் கொட்டத்தை அடக்குவதற்கு இந்த அரசு உடன் நடவடிக்கை எடுக்கத் தவறினால் எதிர்காலத்தில் பெரும் விளைவுகள் ஏற்படும் என்று முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது நாட்டில் இன்று அட்டகாசம் தலைக்கு மேல் சென்றுள்ளது. ஞானசார தேரர் பொலனறுவையில் வல்ல அல்லாஹ்வையும், அல்குர் ஆனையும் தூசித்து கடும் மோசமாகப் பேசியுள்ளார். ஞானசார தேரரின் கொட்டத்தை அடக்குவதற்கு இந்த அரசு உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்..

தோப்பூரில் பரம்பரையாக வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் காணிகளில் உள்ள கொட்டகைகளைக் காவி உடை அணிந்தவர்களும், கடும் போக்காளர்களும் சென்று உடைத்து அப்புறப் படுத்தும் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

இப்போது நடைபெறும் விடயங்களைப் பார்க்கும்போது இஸ்லாத்துக்கு விரோதமான குரல் எங்கே இருக்கின்றது? முஸ்லிம் விரோதமானவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? இந்த அரசிலேதான் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்பது நடைபெறும் விடயங்களில் இருந்து தெரியவருகின்றது. முஸ்லிம்களுக்கு இவ்விதமாக துன்பங்கள் நடந்தும் அவர்கள் பொறுமையாக இருப்பதையிட்டு நன்றி பாராட்ட வேண்டும். ஆனால் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு.

இப்படியான அட்டகாசங்கள், முஸ்லிம் விரோத சக்திகளை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் தாமதம் ஏற்பட்டால் ஏற்படும் விபரீதங்களுக்கு இந்த அரசும் அரசிலுள்ள முஸ்லிம் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தான் வகை சொல்லவேண்டும்என்றுள்ளது. (த-4)



# தலதா மாளிகைக்கு மேல் பறந்ததாலேயே இந்திய ஹெலி பழுது

## உள்ளூர்வாசிகள் கூறுகின்றனராம்

கொழும்பு, மே 18

கண்டியில் தலதா மாளிகைக்கு மேலாக விமானங்கள் பறக்கத் தடை செய்யப்பட்ட பகுதிக்கு மேல் பறந்ததால் தான், இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பயணத்துக்காகக் கொண்டு வரப்பட்ட உலங்குவானூர்திகளில் ஒன்று பழுதடைந்ததாக உள்ளூர் வாசிகள் கூறுவதாகக் கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பயணத்துக்காக கொண்டு வரப்பட்ட உலங்குவானூர்தி கண்டி அஸ்கிரிய மைதானத்தில் பழுதடைந்தது. நேற்று முன்தினம் காலை அது திருத்தப்பட்ட பின்னர் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றது.

கண்டி தலதா மாளிகையில் கடந்த திங்கட்கிழமை இரவு இந்தியக் குழுவினர் வழிபாடு நடத்தியதையடுத்தே, உலங்குவானூர்தி பறக்கும் நிலையை அடைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் இருந்து வந்த தொழில்நுட்பக் குழுவினர் உலங்குவானூர்தியின் இயந்திரத்தில் புதிய உதிரிப்பாகங்களைப் பொருத்தித் திருத்தியமைத்தபோதும், அது பறக்க மறுத்துவிட்டது. இதையடுத்து தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடு செய்து ஆசி பெறுமாறு இந்திய அதிகாரிகளுக்கு இலங்கை அதிகாரிகள் ஆலோசனை கூறினர்.

இதையடுத்து கடந்த திங்கட் கிழமை இரவு இந்திய உலங்கு வானூர்தியின் விமானிகள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடு நடத்தி ஆசி பெற்றனர். இதையடுத்தே உலங்குவானூர்தி பறக்கத் தொடங்கியதாக கூறப்படுகிறது.

அதேவேளை, விமா னங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்ட தலதா மாளிகைக்கு மேலாக இந்த உலங்குவானூர்தி, மோடியின் வருகைக்கு முந்திய ஒத்திகையின்போது பறந்ததால் தான் பழுதடைந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, விமானங்கள் பறக்கத் தடைவிதிக்கப்பட்ட பகுதிக்கு மேலாக இந்திய விமானங்கள் பறந்து தடையை மீறியதாக எந்த அதிகாரபூர்வத் தகவலும் வெளியிடப்படவில்லை. கண்டி வான்பரப்புக்கு மேலாக இந்திய உலங்குவானூர்திகள் பறந்ததை மக்கள் கண்டுள்ளனர். ஆனால் அவர்கள் தடையை மீறியிருக்க வாய்ப்பில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த-5)

# சிறுமி மீது பாலியல் துர்நடத்தை; இளைஞனுக்கு ஒத்திவைத்த சிறை

வவுனியா, மே 18

7 வயதுச் சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றத்துக்கு 19 வயது இளைஞனுக்கு 7 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டணை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. குற்றவாளி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் உத்தரவிட்டார்.

2013ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த உங்குராசா உதயசந்திரன் பாடசாலைக்கு முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்ற சிறுமி மீது பாலியல் துர்நடத்தை மேற்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அவர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் மீதான சுருக்கமுறையற்ற விசாரணை முல்லைத்தீவு நீதிவான் மன்றில் இடம்பெற்று அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது.

இளைஞனுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் கடந்த ஒக்டோபர் 25ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் இடம்பெற்று வந்தது. வழக்குத் தீர்ப்புக்காக நேற்று நியமிக்கப்பட்டிருந்தது.

7 வயதுச் சிறுமியை பாலியல் துர்நடத்தைக்குட்படுத்தினார் என்ற எதிரி மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் மன்றினால் நிரூபிக்கப்படுகிறது என்று மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார். "குற்றவாளிக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அந்தத் தண்டனை 7 வருடங்கள் ஒத்திவைக்கப்படுகிறது. குற்றவாளி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும். வழங்கத் தவறினால் குற்றவாளி ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். குற்றவாளி தண்டமாக 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் அவர் ஒரு மாத கால சிறைத் தண்டணையை அனுபவிக்க வேண்டும்" என்று தண்டணைத் தீர்ப்பை அறிவித்தார் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன். வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்கினேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். (வ)

# அனுமன் பாலமே மோடியின் திட்டம்

## அதை அவர் மறைமுகமாக கூறினார் என்கிறார் வீரவன்ச

கொழும்பு, மே 18

இலங்கை இந்திய நாடுகளை இணைக்கும் அனுமன் பாலம் விரைவில் நிர்மாணிக்கப்படும் என்ற செய்தியை இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி மறைமுகமாக் கூறிவிட்டுச் சென்றுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

மோடி இலங்கை வந்து சென்றதன் பின்னரான நிலமை தொடர்பில் கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி வெசாக் தினத்துக்கு முன்னதாகவே இலங்கைக்கு வருவார் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால், முடிவு மாற்றப்பட்டு வெசாக் தினத்தைக் கொண்டாட வந்துவிட்டார். அப்படி வருகிறவர்களை எதிர்ப்பது எமது நாட்டுக் கலாசாரம் இல்லை. அதனால் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டி எதிர்க்கும் தீர்மானத்தை நாம் கைவிட்டோம். இருந்தாலும் அவர் இங்கு வந்து தெரிவித்த கருத்துக்கள் பாரதூரமானவையாகும். இந்த நாடு இந்தியாவின் ஒரு மாநிலம் என்று நினைத்துக் கொண்டுதான் அவர் உரையாற்றினார்.

ஹற்றனில் அவர் ஆற்றிய உரையானது நான்தான் இந்த நாட்டின் சொந்தக்காரன். இந்த நாட்டின் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் எனது கைக்கூலிகள் என்று கூறுவது போலவே அமைந்திருந்தது.

எட்கா ஒப்பந்தம் மூலம் இந்தியர்களை இலங்கையில் வேலைக்கு அமர்த்துவதற்கும் இலங்கைஇந்திய நாடுகளை இணைக்கும் அனுமன் பாலத்தை நிர்மாணிப்பதற்கும் இரு நாடுகளும் தீர்மானித்துவிட்டன என்பதையும், விரைவில் அவை நடைமுறைக்கு வரும் என்பதையும் அவரது செயற்பாடுகள் உணர்த்துகின்றன.

திருகோணமலைத் துறைமுகம், எண்ணெய்த் தாங்கிகள் மாத்திரமன்றி நாட்டின் பல முக்கிய வளங்களையெல்லாம் இந்தியா கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதைத் தடுப்பதாக இருந்தால் எமது ஆட்சியால் மாத்திரமே முடியும். விரைவில் எமது ஆட்சி மலரும். எமது நாட்டின் வளங்களையெல்லாம் நாம் மீளப் பெறுவோம் என்றார். (த-53)

## சிலாவத்துறையில் அமைந்துள்ள

# கடற்படை முகாமை அகற்றுமாறு கோரி மக்கள் போராட்டம்



மன்னார், மே 18

சிலாவத்துறைக் கடற்படை முகாமை அகற்றுமாறு கோரியும், முகாமுக்கான காணி அளவீட்டை நிறுத்த வலியுறுத்தியும் நேற்றுப் புதன்கிழமை காலை பிரதேச மக்கள் மற்றும் வர்த்தகர்கள் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:

சிலாவத்துறைக் கடற்படை முகாம் அமைந்துள்ள காணி மக்களுக்குச் சொந்தமானது. அதில் கடற்படையினர் அத்துமீறி முகாமை அமைத்துள்ளனர். இந்தக் காணிகளை அவர்கள் உடனடியாக விடுவிக்க வேண்டும். அத்துடன் நில அளவைத் திணைக்களம் காணி அளவீடு செய்யும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும். இது குறித்துப் பல முறை அரசியல்வாதிகளிடம் வலியுறுத்தியபோதும் இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லைஎன்றனர்.

மக்களின் எதிர்ப்பை அடுத்து நில அளவீட்டைக் கைவிட்டு அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். (த-56)

## யாழ்ப்பாணச் சிறைச்சாலை வளாகத்துக்கு முன்பாக

# மனித எச்சங்கள் மீட்பு மூடி மறைக்கப்பட்டதா?



யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம் சிறைச்சாலை வளாகத்துக்கு முன்பாக இடம்பெறும் விடுதிக் கட்டுமானத்தில் அத்திபாரத்துக்காக நிலம் தோண்டப்பட்டபோது எலும்புக்கூடுகள் பல வெளிவந்துள்ளன. அவை மனித எலும்புக்கூடுகள் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் அவை தொடர்பில் எந்த விசாரணை களும் இடம்பெறவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை வளாகத்தின் முன்பாக பொலிஸாருக்கான விடுதிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படுகிறது. அதற்கான பணிகள் கடந்த ஒரு மாதமாக இடம்பெறுகின்றன. சில வாரங்களுக்கு முன்னர் அத்திபாரம் போடுவதற்காக நிலம் தோண்டப்பட்டது. அதன்போதும் நான்கு எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பிலோ அல்லது அவற்றுடன் காணப்பட்ட தடயப்பொருள்களையோ உரிய முறைப்படி பொலிஸாருக்கோ அல்லது நீதிமன்றுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை. அந்த இடத்தில் இருந்து மனித எச்சங்கள் வாகனங்கள் மூலமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்புறப்படுத்துவதற்கு முன்னர் அந்தப் பகுதியில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களால் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதும், எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அந்த இடத்திலிருந்து எலும்புக்கூடுகள் அகற்றப்பட்டுள்ளன என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேபோன்று சிறைச்சாலையின் பின்புறத்தில் அண்மையில் ஓர் சிறிய கட்டடம் கட்டுவதற்காக தோண்டப்பட்ட குழிகளில் இருந்தும் 6 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

அவையும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பகுதியிலும் கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

"குறித்த கட்டுமானப் பணி கொழும்பு அரசினால் தனியார் நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது. எலும்புக்கூடு மீட்கப்பட்டமை தொடர்பில் எந்தவித அறிவிப்பும் எனக்குத் தரப்படவில்லை. கேள்விப்படவும் இல்லை" என்று யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் சி.பெரேரா தெரிவித்தார்.

குறித்த பகுதியானது கடந்த 1996 முதல் 2002 வரையில் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம் என்று கூறப்பட்டது. (வ-4, 101)

## புங்குடுதீவு மாணவி கொலை:

# பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதா?

### மே 31 இல் விசாரணை

யாழ்ப்பாணம், மே 18

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் பொலிஸ் உத்தி யோகத்தருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பாக அந்த வழக்கின் சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு மீதான விசாரணை எதிர்வரும் 31ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. அதன்போது 10 சந்தேகநபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களை கைது செய்த அப்போதைய ஊர்காவற்றுறை பொலிஸ் உத் தியோகத்தருக்கு கொலை மிரட்டல் விடுத்தமை தொடர்பான குற்றச்சாட்டு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொலை மிரட்டல் விடுத்த மாணவி கொலை வழக்கின் முதலாவது சந்தேகநபர்மன்றில்முற்படுத்தப்பட்டார். தொடர்ந்து கொலை மிரட்டல் வழக்கையும் நீதிவான் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-37)

# தாக்குதலுக்குள்ளான கணினித் தொகுதி வழமைக்கு திரும்பியது

சைபர் தாக்குதலுக்கு உள்ளான காலி பிரதேச செயலாளர் அலுவலக கணினித் தொகுதி, வழமைக்கு திரும்பியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அரச பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கணினி, தரவுகளை திங்கட்கிழமை புதுப்பிக்கும் போதே இந்த சைபர் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை தெரியவந்தது.

தாக்குதலில் சிக்கியிருந்த அந்த செயலகத்தின் கணினித் தொகுதி நேற்றுமுன்தினம் மாலை வழமைக்கு திரும்பியுள்ளது. இந்தக் கணினித் தொகுதியும், பூகோள சைபர் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம் என்று அஞ்சப் படுகிறது. ரஷ்யக் கணினிகள், சீனாவிலுள்ள பாடசாலைகளின் கணினிகள் மற்றும் இந்தோனேஷியாவிலுள்ள வைத்தியசாலைகளின் கணினிகள் தாக்குதல்களுக்கு உள்ளாகின என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ற-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### நினைவேந்தல்...

முல்லைத்தீவு, மே 18

முள்ளிவாய்க்கால் கிழக்கு கத்தோலிக்க தேவாலயத்துக்கு அண்மையில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு முல்லைத்தீவு நீதிவான் மன்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு சின்னப்பர் கத்தோலிக்க இல்லத்தில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நினைவு தினம் ஒவ்வொரு வருடமும் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இந்த வருடம் அந்த மக்களுக்கான நினைவுக்கல் நடுகை செய்யப்பட்டு நிகழ்வு இடம்பெற இருந்தது. நினைவுக்கல் நடுகை செய்யப்படுவது தொடர்பாக நேற்று முன்தினம் இரவு ஏற்பாட்டாளரான அருட்தந்தை எழில்ராஜன் முல்லைத்தீவுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இதன் பின்னர் நேற்றைய தினம் குறித்த நினைவேந்தல் நிகழ்வுக்கு முல்லைத்தீவு நீதிவான் மன்று தடை உத்தரவு பிறப்பித்தது.

முல்லைத்தீவு, முள்ளிவாய்க கால் கிழக்கு சின்னப்பர் கத்தோலிக்க இல்லத்தில் அருட்தந்தை எழில்ராஜன் தலைமையில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை உத்தரவு கோரி முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் ஏ அறிக்கையை நேற்று முன்வைத்த னர்.

"அணைக்கப்பட்ட ஏ அறிக்கையையும் சமர்ப்பணத்தையும் மன்று கருத்திற்கொண்டு, குறித்த இடத்தில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் தேசிய பாதுகாப்புக்கும், அமைதிக்கும் பங்கம் ஏற்படக்கூடும் என்று மன்று கருதி, அதன் அடிப்படையில் முள்ளிவாய்க்கால் கிழக்கு சின்னப்பர் கத்தோலிக்க இல்லத்துக்கு அண்மையில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும், தேசிய பாதுகாப்புக்கும், அமைதிக்கும் பங்கம் ஏற்படக் கூடிய வகையில் எந்த ஒரு நிகழ்வையும் நடத்தக் கூடாது என பாதிரியார் இராஜேந்தின் எழில்ராஜன் என்பவர் உட்பட ஏனைய அனைவருக்கும் குற்றவியல் நடைமுறைக் கோவை பிரிவு 106 இக்கு இணங்க இடைக்காலத் தடைஉத்தரவு ஒன்றை மன்று விடுக்கின்றது. இந்தக் கட்டளை 14 நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும்" என்று முல்லைத்தீவு நீதிவான் மன்றின் தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"முள்ளிவாய்க்கால் கிழக்கு கத்தோலிக்க தேவா லயத்துக்கு அண்மையில் இடத்திலே ஏற்ப்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக் கற்கள் வைத்து நினைவேந்தல் செய்வதாக கூறப்பட்டது. அதில் பொறிக்கப்பட்ட பெயர்கள் யாருடையது என்பது பற்றி எம்மால் அறிந்து கொள்ள முடியாது. இதனால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்ப்படாலாம் எனச் சந்தேகித்தே முல்லைத்தீவு பொலிஸாரால் நீதிமன்றில் இடைக்காலத் தடை உத்தரவு பெறப்பட்டது" என்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக் கான பிரதிப் பொலிஸ்மா அதிபரிபரால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் மட்டுமே நினைவேந்தல் செய்ய தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் ஏனைய பகுதிகளில் நினைவேந்தல் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-21-7)

### முல்லை...

நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வை முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளாகும். அன்றைய தினம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முல்லைத்தீவுக்கு வருகை தரக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இந்த எதிர்ப்புக்கள் தொடர்பில் அரச தலைவர் செயலகம் ஆராய்ந்திருந்தது. இந்த நிலையில், அரச தலைவரின் முல்லைத்தீவுக்கான இன்றைய பயணம் கைவிடப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (த-5-7)

# சட்ட நடைமுறைப்படியே துணைவேந்தர்நியமனம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமனத்தில் எந்த ஒரு சட்டமோ, நடைமுறையோ மீறப்படவில்லை. அவரது நியமனத்தைப் பற்றி வெளியிடப்படும் பல கருத்துக்கள் ஆரோக்கியமானவை அல்ல. எனவே நியமிக்கப்பட்ட துணைவேந்தர் தனது புதிய பணிகளில் கவனம் செலுத்த விடப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமனம் தொடர்பாகப் பல்கலைக்கழகத்துக்கு வெளியே இருந்து குழப்பம் தரும் பல கருத்துக்கள் அடுத்தடுத்து வெளியிடப்பட்டுள்ளன. பல்கலைக்கழகமானது நேர்மையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்கிச் செயற்படவேண்டுமென்பதற்காக எமது சங்கம் தொடர்ந்து பாடுபட்டு வந்துள்ளது. இந்தப் பின்னணியில் துணைவேந்தர் நியமனம் தொடர்பாகவும் சில தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு உள்ளது.

நாடாளுமன்றினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கான சட்டமே பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளுக்கான அடிப்படை வரைவு. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் பல்கலைக்கழகப் பேரவையினால் வழங்கப்படும் மூன்று பெயர்களிலிருந்து துணைவேந்தரை அரச தலைவர் நியமிப்பார் என இந்தச் சட்டம் கூறுகிறது.

இந்தச் சட்டப்பிரிவு எம்மால் ஏற்கமுடியாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் மக்கள் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்ட நாட்டின் சட்டங்கள் மீறப்பட முடியாதவை.

எமக்குச் சொந்தமாக ஒரு நிலத்தை நாங்கள் வாங்கினாலும் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களின் பிரகாரமே அந்த நிலத்தில் கட்டடங்கள் கட்டவோ, அதனுள் செயற்பாடுகளை மேற்கொள்ளவோ முடியும். பொது நன்மை கருதி இத்தகைய சட்டங்கள் மக்களின் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்டுள்ளன.

இதுபோன்றே மக்களின் ஆணையைப் பெற்ற அரசின் தலைவருக்கும், தாம் மக்கள்முன் வைத்த விஞ்ஞாபனத்தை நிறைவேற்றுவதற்காக, பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களிலிருந்து ஒருவரைத் தெரிவுசெய்யும் அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது.

எனினும் பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட மூவரில் ஒருவரையே அரச தலைவர் துணைவேந்தராக நியமிக்கலாம். இதன்மூலம் ஒரு அதிகார சமநிலை பேணப்படுகிறது.

வளர்ந்த நாடுகளில்கூட இத்தகைய உயர்பதவி நியமனங்களில் புலனாய்வு அறிக்கைகளும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுவது வழமையான ஒன்று. இந்தப் புலனாய்வு ஒருவரின் அரசியல் பின்னணியை மட்டும்தான் கருத்தில் எடுக்கும் என்று கூறமுடியாது. தான் வகித்த பதவிகளில் அவர் அதிகாரங்களைப் பயன்படுத்திய முறைமைகளையும் அது உள்ளடக்கும். இது தொடர்பாக பின்வரும் விடயங்களை மக்கள் முன் கொண்டுவர எமது சங்கம் விரும்புகிறது.

கடந்த காலங்களில் இரண்டு தடவைகள் பேரவையின் வாக்கு எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தைப் பெற்றவர் அரச தலைவரால் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சந்தர்ப்பங்களில் இப்போது செய்வது போன்ற குழப்பங்களை ஏற்படுத்த எவரும் முனையவில்லை.

சில சந்தர்ப்பங்களில் பதவியிலிருந்த துணைவேந்தரின் பதவிக்காலம் முடிந்த பின்னும் புதிய துணைவேந்தர் நியமனம் தாமதமாகியுள்ளது.

நிர்வாக அனுபவத்தைப் பொறுத்தமட்டில் பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட மூவருமே துறைத் தலைவர், பீடாதிபதி என்னும் இரண்டு பதவிகளையும் வகித்திருக்கிறார்கள். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பல நியமன முறைகேடுகளையும், ஒரு அரசியல் கட்சியின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் பல முக்கிய தேர்தல்களின் வாக்கு நிர்ணயத்தையும், அந்த அலுவலகத்தில் சட்டவிரோதமாக நடத்தப்பட்ட பேரவை முன்கூட்டங்கள் பற்றியும் எமது சங்கம் அறிக்கைகளின் மூலம் வெளிக்கொணர்ந்து போராடியது. இப்போது குழப்பம் தரும் கருத்துக்களை வெளியிடுபவர்கள் அந்த நேரத்தில் அவற்றை விசாரிப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அத்துடன் இந்த அநீதிகளுக்கு எதிராகப் போராடிய எமது சங்கத்திற்கு எந்த ஆதரவையும் வெளிப்படுத்தவில்லை.

எனவே தற்போதைய துணைவேந்தர் நியமனத்தைப் பற்றி வெளிவிடப்படும் பல கருத்துக்கள் ஆரோக்கியமானவை அல்ல. துணைவேந்தர் நியமனத்தில் எந்த ஒரு சட்டமோ, நடைமுறையோ மீறப்படவில்லை. எனவே நியமிக்கப்பட்ட துணைவேந்தர் தனது புதிய பணிகளில் கவனம் செலுத்த விடப்பட வேண்டும். அவரது பணிகளில் தவறு ஏற்படும்போது அதனைச் சுட்டிக்காட்டலாம் என்று எமது சங்கம் கருதுகிறதுஎன்றுள்ளது. (த-4)

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி, மே 18
மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்று நிலையத் தலைவர் வ.நாகலிங்கம் அறிவித்தார்.

கூட்டத்துக்கு விருந்தினராக சாவகச்சேரி நகரசபையின் சனசமூக அபிவிருத்தி அலுவலர் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

## சிறார்களின் விளையாட்டு விழா

சாவகச்சேரி, மே 18
சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தென்னிந்தியத் திருச்சபை யின் சாவகச்சேரி ஆலய போதகர் அருட்பணி நே.து.ஜெயநேசன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு தலைமை விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் இ.கோகிலனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சிறுவர் கட்டாயக் கல்வி ஆலோசனைக் கூட்டம்

அச்சுவேலி, மே 18
கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் சிறுவர்களுக்கான கட்டாயக் கல்வி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி என்.சிவநேசன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் சிறுவர் உரிமை மற்றும் சிறுவர்களுக்கான கட்டாயக் கல்வி தொடர்பான உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

## பொது இடத்தில் பீடி புகைத்ததால் மூவர் செலுத்தினர் ரூபா 6,000 தண்டம்

சாவகச்சேரி, மே 18
கொடிகாமம் நகரப் பகுதியில் பொது மக்களுக்கு இடையூறு விளை விக்கும் வகையில் பீடி புகைத்த மூவருக்கு தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து சாவகச்சேரி நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

பொது இடங்களில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பீடி புகைத்தனர் என்ற குற்றச்சாட்டுடன் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, மூவரையும் எச்சரிக்கை செய்தார். அவர்கள் மூவரையும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் செலுத்துமாறும் பதில் நீதிவான் உத்தரவிட்டார். (வ 9)

## யாழ்ப்பாண இளையோருக்கு தொழிற்பயிற்சி செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வேலைதேடும் இளையோருக்குத் தொழில் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புத் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மறுவாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டிலும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைப்பிலும் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் தச்சுத் தொழில், மின் இணைப்பு, மேசன், நீர்குழாய் பொருத்துதல் மற்றும் பெண்களுக்கு முதியோர், சிறுவர் பராமரிப்பு போன்றவற்றுக்கான தொழில்பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் யாழ்ப்பாண மாவட்ட இளையோர் அடையாள அட்டையுடன் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-5)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு ரூபா 30,000 தண்டம்

சாவகச்சேரி, மே 18
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரச் சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த சாவகச்சேரி நீதிவான் மன்று, மணலைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுடன் உழவு இயந்திரச் சாரதிகள் அதிகாரிகள் முன்னிலையில் பாதுகாப்புடன் மணல் ஏற்றிச் சென்றனர். இந்த வேளையில் மணல் ஏற்றும் இடத்தைப்பார்வையிட வருகை தந்திருந்த யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தலைமையிலான பொலிஸ் குழுவினர் கச்சாய் சந்தியில் நின்று மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரங்களைச் சோதனையிட்டனர்.

அந்தவேளையில் ஒரு உழவு இயந்திரத்தில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்த உழவு இயந்திரத்தைத் தடுத்து வைத்த பொலிஸார், சாரதியைக் கைது செய்தனர்.


சட்டவிரோதமாக மணல் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் வாகனச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. வாகனச் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த மன்று, அவரால் கடத்தப்பட்ட மணலைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டது.

மேலும் வாகனத்தையும் அதன் பெட்டியையும் உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் நீதிமன்று கட்டளையிட்டது. (வ-9)

## கொற்றாவத்தையில் கிளைமோர்க் குண்டு

### தனியார் காணியிலிருந்து நேற்று மாலை மீட்பு



கரணவாய் வடக்கு கொற்றாவத்தைப் பகுதியிலுள்ள தனியார் காணியில் இருந்து வெடிக்காத நிலையில் கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"அந்தப் பகுதியைச் சேர்ந்த க. இரத்தினேஸ்வரன் என்பவருக்கு சொந்தமான காணியில் இருந்தே இந்தக் குண்டு நேற்று மாலை மாலை மீட்கப் பட்டது.

குறித்த காணியை விவசாயத் தேவைக்காக உழவு செய்த போதே கிளைமோர்க் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸ் குழு கிளைமோர்க் குண்டை மீட்டது. நீதிமன்றின் அனுமதியோடு குண்டு செயலிக்கச் செய்யப்படும்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-108)

## காலாவதியான பொருள்களைக் காட்சிப்படுத்திய 7 வர்த்தகர்களிடம் ரூபா 63,000 அறவீடு

சாவகச்சேரி, மே 18
காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 7 வர்த்தகர்களுக்கு தலா 9 ஆயிரம் தண்டம் விதித்து சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அலுவலர்கள் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடத்தினர். இதன்போது காலாவதியான பொருள்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 7 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அலுவலர்கள் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில்நேற்றுவிசாரணைக்கு வந்தன. வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அனைவருக்கும் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்து மன்று உத்தரவிட்டது. (வ-9)



## கிளிநொச்சி புறநகர் பகுதியில்

# விபசாரம் நடந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீடொன்று முற்றுகை

### அங்கிருந்த 4 பெண்கள் கைது

கிளிநொச்சி, மே 18

கிளிநொச்சி புறநகர் பகுதியில் விபச்சார விடுதி என்று சந்தேகிக்கப்படும் வீடொன்று நேற்றுப் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த 4 பெண்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்சவின் வழிநடத்தலில், உதவிப் பொலிஸ் பரிசோதகர் தர்சன தலைமையிலான பொலிஸ் குழு இந்த நடவடிக்கையை முன்னெடுத்தது.

வீட்டைச் சோதனையிடுவதற்கான அனுமதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் பெறப்பட்டது. நேற்று பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட நபர் ஒருவர் அந்த வீட்டுக்குச் சென்று நிலமைகளை அவதானித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். வீட்டைப் பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் இருவர் 21 வயதுடையவர்கள், ஒருவர் 26 வயதுடையவர், வீட்டின் உரிமையாளர் 37 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம், கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தர்சன தெரிவித்தார். (ற-6)

# இலங்கைக்குச் சீன அரசு 44 பில்லியன் ரூபா உதவி

### பீஜிங்கில் உறுதியளித்தார் ஜின்பிங

கொழும்பு, மே 18



இலங்கைக்கு 2 பில்லியன் யுவான் (44 பில்லியன் ரூபா) உதவியை வழங்குவதாகச் சீன அரச தலைவர் ஜின்பிங் உறுதி அளித்துள்ளார். சீன அரச தலைவர் தலைமையிலான குழுவினருக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக் கும் இடையில் பீஜிங்கில் நேற்று முன்தினம் நடந்த இரு தரப்புப் பேச்சுக்களின்போதே இந்த உறுதி அளிக் கப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்த ஆண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்காக சீனா 400 மில்லியன் யுவான்களை வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2018 2020 காலப் பகுதியில் 2 பில்லியன் யுவான்களை இலங்கைக்கு வழங்குவதாகச் சீன அரச தலைவர் உறுதியளித்தார்.

அத்துடன், இலங்கையில் அமைதி, நல்லிணக்கம், மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா முழு ஆதரவை வழங்கும் என்றும் சீன அரச தலைவர் ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் மேலும் பலப்படுத்தப்படுவதன் முக்கியத்துவத்தையும் சீன அரச தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது இலங்கையின் அபிவிருத்திக்குச் சீனா வழங்கிவரும் உதவிகளுக்காகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தெற்காசியாவின் கடல்சார் கேந்திரமாக உருவெடுக்கும் இலங்கையின் எதிர்பார்ப்புக்குச் சீனாவின் 'ஒரு அணை ஒரு பாதைத் திட்டம்' நிச்சயம் உதவியாக இருக்கும் என்றும் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். (து-5)

# சிறுமியை துர்நடத்தைக்குட்படுத்திய வயோதிபருக்கு ஒரு வருட கடூழியம்

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

வவுனியா, மே 18

சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றத்துக்கு வயோதிபருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் 2010ஆம் ஆண்டு தனது பேத்தி முறையான 8 வயதுடைய சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் தேவநாயகம் அந்தோனிப்பிளை (வயது 72) என்ற வயோதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் மீதான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிவான் மன்றில் இடம்பெற்று சுருக்கமுறையற்ற விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது.

வயோதிபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், நேற்றைய தினம் வழக்கைத் தீர்ப்புக்காக நியமித்திருந்தார்.

"எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படுகிறது" என்று மன்று நேற்றுத் தீர்ப்பளித்தது.

"குற்றவாளிக்கு ஒரு வருடம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டும். அதனை வழங்கத் தவறினால் மேலம் 3 மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். தண்டப் பணமாக ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்" என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பை அறிவித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்கினேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். (வ)

# முஸ்லிம் கிராமத்துக்குள் அத்துமீறியோரால் பதற்றம்

அம்பாறை, மே18

திருகோணமலை தோப்பூர், செல்வநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிதேசத்தில் ஏற்பட்ட பதற்ற நிலை தொடர்பில் நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மேற்படி கிராமத்திற் குள் அத்துமீறிப் பிரவேசித்த பெரும்பான்மை இனத்தவர்கள் அங்குள்ள குடியிருப்புகளுக்குச் சென்று அடாவடித்தனம் செய்தனர் என்றும், இதனால் அங்குள்ள மக்கள் கலவரமடைந்து பள்ளிவாசலுக்கு இடம்பெயரத் தலைப்பட்டதாகவும் கூறப்படு கின்றது.

விகாரை ஒன்றின் நிர்மாணம் தொடர்பிலேயே மேற்படி முறுகல்நிலை தோன்றியதாகத் தெரியவருகிறது.

எனினும் நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த இடம் தொல்பொருள்திணைக்களத்தினுடையது என 2013ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த இடத்தில் 44 வீடுகள் இருந்தன. வாக்காளர் அட்டையில் அவர்களின் இடம் குறிக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த இடத்தில் எவ்விதமான கட்டுமானப் பணிகளும் இடம்பெற முடியாது.

அவ்வாறு கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதாக இருந்தால் தொல்பொருள்திணைக்களத்தின் அனுமதி பெறவேண்டும் என ஆளுநரால் உத்தரவு இடப்பட்டது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர் தெரிவித்தார். (து-ய)

# மீண்டும் பணிப்புறக்கணிப்பு

### பெற்றோலிய தொழிற்சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 18

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னறிவித்தலின்றி மீண்டும் ஆரம்பிக்க வேண்டி ஏற்படும் என்று பெற்றோலிய தொழிற்சங்க ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் சிலருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலை அடுத்து அன்றிரவே கைவிடப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் இணக்கம் காணப் பட்ட விடயங்களை எழுத்து மூலம் தலைமை அமைச்சரின் செயலாளர் வழங்கியதாகப் பெற்றோலியத் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் டீ.ஜே.ராஜகருணா குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்திய அரசுக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து அவதானம் செலுத்துகையில் தொழிற்சங்க ஒன்றியத்துடன் தலைமை அமைச்சர் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகள் முரண்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மறுபுறம் குறித்த இணக்கப்பாடுகள் செயற்படுத்தப்படவுள்ள கால எல்லையைக் கருத்திற் கொண்டால் விரைவில் தமது கோரிக்கைகளுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட இடமுள்ளதாகத் தெரிய வருவதாகவும், இதற்கமைய எதிர்வரும் வாரங்களில் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படாவிடில் கைவிடப்பட்ட பணிப்புறக்கணிப்பு முன் அறிவித்தல் இன்றி மீளவும் ஆரம்பிக்கப்படும் எனவும் தலைமை அமைச்சருக்குப் பெற்றோலிய தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார். (து-5)

# புளொட் முன்னாள் பொறுப்பாளருக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடக் கடூழியம்

### சட்டவிரோதமாக கைத்துப்பாக்கியை வைத்திருந்த குற்றத்துக்கு

வவுனியா, மே 18

புளொட் அமைப்பின் முன்னாள் பொறுப்பாளருக்கு 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

அனுமதியின்றிக் கைத்துப்பாக்கியைத் தனது உடமையில் வைத்திருந்த குற்றத்துக்கே அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் இயங்கிய புளொட் அமைப்பின் முகாமின் முள்னாள் பொறுப்பாளர் சிவநாதன் பிரேமநாத் (போமரன்) நெடுமாறன் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். சட்டவிரோதமாக கைத்துப்பாக்கியைத் தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வவுனியா நீதிவான் மன்றில் அவருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வவுனியா நீதிவான் மன்றில் ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்றன. சந்தேகநபர் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

வவுனியாநீதிவான்மன்றின் சுருக்கமுறையற்ற விசாரணை நிறைவடைந்து வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் பாரப்படுத்தப்பட்டது. 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11ஆம் திகதி சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தீர்ப்புக்காக நேற்று வழக்கு கூப்பிடப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், "வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டு சாட்சியங்களின் அடிப்படையில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று தீர்ப்பளித்தார். "குற்றவாளிக்கு 2 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அந்தத் தண்டனை 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. குற்றவாளி 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறினால் ஒரு மாத காலம் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும" என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்கினேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். (வ)

## டெங்கு நுளம்பு உற்பத்தியிடமாக மாறியுள்ளது கலாசார மண்டபம்

### பிரதேச மக்கள் விசனம்



வவுனியா, மே 19
வவுனியா, குடியிருப்பு கலாசார மண்டபம் உள்ள பகுதி டெங்கு நுளம்பு உற்பத்தி இடமாக மாறியுள்ளது என்று விசனம் தெரிவித்தனர் பிரதேச மக்கள்.

"கலாசார மண்டபம் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டு 6 மாதங்களாகின்றன. அது இன்னமும் சீரமைக்கப்படவில்லை. பாதுகாப்பற்ற பகுதியில் இது அமைந்துள்ளது. மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியாக இது காணப்படுகின்றது. சீரமைக்கப்படாதுள்ள கலாசார மண்டபத்தை இளைஞர்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

மதுப்பாவனை, புகை பிடித்தல் போன்ற செயற்பாடுகள் அங்கு நடக்கின்றன. இது தொடர்பாகப் பல தடவைகள் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இராணுவத்தினரிடமிருந்து பல போராட்டத்தின் மத்தியில் பெற்றெடுத்த குறித்த கலாசார மண்டபமானது எவ்வித பயன்பாடுகளும் அற்ற நிலையில் தற்போது உள்ளது. கலாசார மண்டபத்தைச் சுற்றி வேலி அமைக்கப்படவில்லை. திறந்த நிலையிலும் பாழடைந்த நிலையிலும் அது காட்சியளிக்கின்றது. மண்டபத்திற்கு அருகில் விசாலமான கிணறு ஒன்று பயன்பாடு அற்ற நிலையில் உள்ளது. தற்போது குறித்த கலாசார மண்டபத்துக்குள் கலாச்சார சீரழிவுகள் நடக்கின்றன." என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

"கலாச்சார மண்டபத்தின் முகப்பில் உள்ள சரஸ்வதி சிலையைச் சுற்றியுள்ள பகுதியில் தண்ணீர் தேங்கியுள்ளது. டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதைக் கட்டுப்படுத்தவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பாடசாலை, சிறுவர் பூங்கா, மருத்துவமனை போன்ற பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய பகுதியாக உள்ள இந்தப் பகுதியில் உள்ள கலாசார மண்டபம் சீரமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு விடப்பட்டால் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். பாடசாலையின் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும்." என்று அங்குள்ள ஆசிரியை ஒருவர் சுட்டிக்காட்டினார்.

"கலாசார மண்டபத்தைச் சீரமைப்பது தொடர்பாக வவுனியா மாவட்டச் செயலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதியே பிரச்சினையாக உள்ளது. நிதி கிடைக்கும் பட்சத்தில் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அந்தப் பகுதி சுத்தம் இன்றி காணப்படுவது தொடர்பாகவும் டெங்கு நுளம்பு பெருகுவது தொடர்பாகவும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஊழியர்களை அனுப்பி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படும்." - என்று வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ந - 5)

## மகிந்த வழியில் வடக்கு அமைச்சர் குருகுலராஜாவும் பயணிக்கிறாரா?

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பாடசாலை சமூகம் அழைத்தமை தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக வலயக் கல்விப் பணிமனையிடம் விளக்கம் கோரியுள்ளார்.

வலயக் கல்விப் பணிமனை பாடசாலை அதிபரிடம் விளக்கம் கேட்டுள்ளது. வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் காலத்தில், பாடசாலை நிகழ்வுக்கு விருந்தினர் களை அழைப்பதற்கு முன்னர், அது தொடர்பில் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையை ஒத்த செயற்பாட்டையே வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், வடக்கு மாகாண சபையும் செய்ய முற்படுகின்றதா? என்று கல்விச் சமூகத்தினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் "தொழில்நுட்ப பீடத்தின் திறப்பு விழாவுக்கு, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டு கட்டடம் திறக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை முதன்மை விருந்தினராக அழைத்தன் பின்னணி, வடக்கு மாகாண சபை மக்கள் பிரதிநிதிகள் எவரையும் அழைக்காமைக்கான காரணம் ஆகியவை தொடர்பான விளக்கத்தை பாடசாலை அதிபர் ஊடாகப் பெற்று அனுப்பி வைக்க வேண்டும்" என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு, கல்வி அமைச்சின் செயலரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"கட்டடத் திறப்பு விழா நடத்தவில்லை. சம்பிரதாயபூர்வ நிகழ்வே நடைபெற்றது. பாடசாலைச் சமூகத்தின் விருப்பின் பேரிலேயே சகல விடயங்களும் மேற்கொள்ளப்பட்டன" என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார். (ந - 5,35)

## சரணாகதி முகாம்களை மூடுவதற்கு ஆஸி.தீர்மானம்

கொழும்பு, மே 18
ஆஸ்திரேலியாவின் பபுவா நியூகினியா மாநிலத்திலுள்ள சரணாகதி முகாம்களை மூடுவதற்கு ஆஸ்திரேலிய அரசு தீர்மானம் எடுத்துள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சட்ட விரோதக் குடியேற்றவாசிகளுக்கு தொடர்ந்தும் அபயமளிக்கும் எண்ணம் இல்லாததால் இந்த முகாமை மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும், சட்டவிரோத குடியேற்றங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தொடர்ந்தும் அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் "கார்டியன் ஆஸ்திரேலியா' இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 31ஆம் திகதிமுதல் பபுவா நியூகினியா சரணாகதி முகாம் முற்றாக மூடப்படும் எனவும், "மானுஷ்' தீவிலுள்ள இந்த சரணாகதி முகாமின் ஒரு பகுதி இந்த வார இறுதியில் மூடப்படும் எனவும் "கார்டியன் ஆஸ்திரேலியா வின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந -5)

## மே 18 தொடர்பில் பேச மக்களுக்கே உரிமையுண்டு

### சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவிப்பு



கொழும்பு, மே 18
மே18 பற்றிப்பேசுவதற்கு மக்களுக்கு மாத்திரமே உரிமை இருக்கிறது. அந்த மக்களைக் காப்பாற்ற ஓடிவராத அரசியல்வாதிகள், மக்களுக்காகக் குரல் கொடுக்காதவர்கள், அன்று தங்களை மறைத்து மகிந்த அரசுக்குப் பயந்து இருந்தவர்கள் இன்று மே 18 பற்றிப் பேசுகிறார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:
பன்னாட்டுச் சமூகமும் இலங்கை அரசும் இனப்படுகொலைக்கான நீதிகிடைக்க எப்போது ஒத்துக்கொள்கின்றதோ, எமது போராட்டம் ஒருங் கிணைந்த குரலாக எப்போது ஒலிக்கின்றதோ, நாங்கள் ஒருகுடையின் கீழ் எமது மக்களுக்கான உரிமையை எப்போது பெற்றுக் கொடுக்கின்றோமோ, அன்றுதான் தமிழ் மக்களுக்கு உண்மையான மே 18.

முள்ளிவாய்க்கால் எங்கிருக்கிறது என்று தெரியாத பல அரசியல்வாதிகள் தங்களது எதிர்கால அரசியலுக்காக மாவீரர் நிகழ்வுகள், முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை நடத்துவது வேதனைக்குரிய விடயம். மேமாதம்என்பதுகறுப்புஜூலைக்கு அடுத்ததாக தமிழ் மக்களுடைய வரலாற்றில் முக்கியமானது. தமிழின அழிப்பு, இன சுத்திகரிப்பு நடந்த மாதமாகும். அந்தக் காலத்தில் கொத்துக் கொத்தாக குண்டு மழை பொழியும் போது கைகொட்டிச் சிரித்தவர்கள், வேடிக்கை பார்த்தவர்கள் ஒழிந்து கொண்டு இருந்தவர்கள் இப்போது போலியான முகத்துடன் தமிழ் இன உணர்வு நிகழ்வுகளை நடத்துவது வேதனைக்குரிய விடயம்.

சரணடைந்தவர்களை ஈவிரக்க மற்று கொலை செய்த இலங்கை அரசு ஒரு போதும் தமிழ் மக்களுக்கு விடியலைத் தரப்போவதில்லை. முள்ளிவாய்க்காலில் நிகழ்வை நடத்துவதனால் ஒன்றும் நடந்து விடப்போவதில்லை. இப்போதும் நித்தம் முன்னாள் போராளிகள் பலர் தினமும் முள்ளிவாய்க்காலைச் சந்திக்கிறார்கள்.

எம் இனத்தை அழித்தவர்களே இன்று எமது பிரதேசங்களுக்கு வந்து மன்னியுங்கள், மறப்போம். நடந்தவற்றை மறப்போம் என்று சொல்வதில் பயனில்லை.

சாட்சிகளைப் பாதுகாக்க வேண்டியவர்களான நாம் பல தவறுகளைச் செய்தவர்களாக இருக்கின்ற நிலையில், இலங்கை அரசை மாத்திரம் குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. எங்களது தவறுகளைத்திருத்தி நேர் கோட்டில் பயணித்து ஒருமித்துக் குரல்கொடுக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். வெறுமனே விளக்கேற்றுவதனால் இழப்புக்களைச் சுமந்த மக்களின் ஆத்ம சாந்தியை அடைந்துவிடமுடியாது-என்றுள்ளது. (ந-5)

*2 தமிழ் இளைஞர்கள் கடத்தல்;*

## கடற்படை அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெற அனுமதி

கொழும்பு, மே 18
இரண்டு தமிழ் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படை அதிகாரி உள்ளிட்ட 5 பேரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு இரகசியப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. முன்னர் மேற்கொண்ட விசாரணைகளின்போது, இந்த அதிகாரிகள் விசாரணைகளுக்கு மறுப்புத் தெரிவித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் ஐந்து அதிகாரிகளும் வாக்கு மூலம் வழங்க மறுப்பு தெரிவித்து வருவதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். இதையடுத்தே கொழும்பு மேலதிக நீதிவானால் இரகசியப் பொலிஸாருக்கு அனுமதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த -5)

## நுகர்வோர் விரும்பினால் மட்டுமே புதிய மின்சார கட்டண நடைமுறை

### மின் பயன்பாட்டைக் குறைக்கவே இந்தத் திட்டம்

கொழும்பு, மே 18
மின் பயன்பாட்டு நேரத்துக்கு அமைவாக மின் கட்டணத்தை அறவிடும் நடவடிக்கையை ஆரம்பிக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் புதிய செயற்றிட்டத்தை விரும்பும் நுகர்வோருக்கு மாத்திரமே இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த யோசனைக்கு அமைவாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் இந்த முறையை செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மின்சார நுகர்வோரின் மின்சாரப் பயன்பாட்டில் இரவு 10.30 முதல் காலை 5.30 வரை ஒரு அலகுக்கு 13 ரூபா, காலை 5.30 முதல் மாலை 6.30 மணி வரை ஒரு அலகுக்கு 25 ரூபா, மாலை 6.30 முதல் இரவு 10.30 வரை ஒரு அலகுக்கு 54 ரூபா எனவும் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்சாரக் கட்டண முறை அறிமுகப்படுத்தி வைப்பதன் ஊடாக மின்சார நுகர்வோரின் மின்சாரக் கட்டணம் அதிகரிப்படாதென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முறையில் நாள் ஒன்றுக்கு அதிக மின்சாரத் தேவை காணப்படுகின்ற மாலை 6.30 முதல் இரவு 10.30 மணிவரையிலான காலப் பகுதியினுள் மின்சாரப் பயன்பாட்டை குறைத்துக் கொள்வதே இதன் எதிர்பார்ப்பாகும்.

இந்தக் கட்டண முறை நுகர்வோர் விரும்பினால் மாத்திரம் தெரிவு செய்து கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## மரண அறிவித்தல்

### கண்ணையா நடராசா



தோற்றம் 22.01.1962 மறைவு 17.05.2017

கொடுக்குளாய், ஆழியவளையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணையா நடராசா நேற்று (17.05.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கண்ணையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் பாமாதேவியின் அன்புக்கணவரும்கல்யாணி, நிழந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரகலாதனின் அன்பு மாமனும் அபிஷேக், லோஜிதன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொடுக்குளாய்,**
**ஆழியவளை, உடுத்துறை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 137 2119**

## கண்ணீர் அஞ்சலி



சரவணை சேவா மன்றத்தின்
ஊடாக சரவணை வாழ்
மாணவர்களின் கல்வி
வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய
பெருந்தகை

**திருமதி தயாநிதி சண்முகநாதன்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவின் துயரில் நாமும் பங்கெடுத்து குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சரவணை சேவா மன்றம் (கனடாக்கிளை சார்பாகவும்),**
**சரவணை.**

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம், சுற்றுமதில்,நீர்த்தாங்கி, பொது மலசலகூட நிர்மாண வேலைக்காக தகமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
2 தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்**டுள்ளது.**
3. பொது நிதிச்சுற்றறிக்கை:4/2016ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது வடமாகாணத்திற்குள் தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கே கள்வியாளர்கள் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 18.05.2017 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் நிர்வாகக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 222 2233, 021 222 2234 நீடிப்பு : 111) எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 18.05.2017 முதல் 07.06.2017 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையாக கீழக் குறிப்பிடப்படும் கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
6. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 08.06.2017 திகதியன்று பி.ப 2.30மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்டமுகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 08.06.2017ந் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்
8. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்
9. Prebid Meeting 30.05.2017 காலை 10.00மணிக்கு நடைபெறும்

| கேள்வி இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/DCA/E.C.C/ SA/01/01/2017 | சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார மத்திய நிலைய நிர்மாணம் | 18.5 | 06 | C6 | 185,000.00 | 3500/- |
| JF/DCA/E.C.C/ SA/01/02/2017 | சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார மத்திய நிலைய சுற்றுமதில்,குழாய்க் கிணறு,நீர்த்தாங்கி பொது மலசலகூட நிர்மாணம் | 5.44 | 03 | C7 | 54,500.00 | 2500/- |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்


# மரத்தில் இருந்து விழுந்த மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, மே 18

பாடசாலை வளாகத்திலுள்ள கொய்யா மரத்திலிருந்து கீழே வீழ்ந்த சிறுவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

திம்புல்ல பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எதன்சைட் தோட்டத்தைச் சேர்ந்த 14 வயதுடைய சுப்பிரமணியம் மதுஸான் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

எதன்சைட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவன் நேற்று மாலை ஐந்து மணியளவில் பாடசாலை வளாகத்திலுள்ள கொய்யா மரத்தில் ஏறி பழம் பறிக்கச் சென்றுள்ளார்.

மரத்திலிருந்து தவறி வீழ்ந்த நிலையில், படுகாயமடைந்த மாணவன் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்திய சாலைக்கு மாற்றபட்டார்.

கண்டி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த மாணவன் சிகிச்சை பயனின்றி இன்று உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணையை திம்புலை பத்தனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-4)


## கடை வாடகைக்குத் தேவை

சுன்னாகம் நகர பகுதியில் தேவை.
**தொடர்பு-075 978 9223**

## தேவை

கமாடா 700 பிறின்டிங் மெசின்
இயக்குநர் தேவை (HAMADA 700)
Printing machine தகுந்த சம்பளம்
வழங்கப்படும் .
**போஸ்கோ**
610/ 7. பருத்தித்துறை வீதி,நல்லூர்,
யாழ்ப்பாணம். 021 222 0370
(நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக)

## மரண அறிவித்தல்



**திருமதி கிருஷ்ணவதனா சின்னராசா**

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணவதனா சின்னராசா (ராசாத்தி) (17.05.2017) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வநாயகி தம்பதியரின் புதல்வியும் சின்னராசாவின் அன்பு மனைவியும் செல்வராசா (துரை) அவர்களின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் ராதாகிருஷ்ணன் (ராதா), ராதாலட்சுமி (ராதை), பாலகிருஷ்ணன் (பாலன்) காலஞ்சென்ற ஆனந்தி ஆகியோரின் அன்புத் தாயும் பத்மா, செல்வராசா (பொதுமுகாமையாளர் வடமாகாண ப.தெ.வ. அபிவிருத்தி சங்கங்களின் சமாசம்), ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் முடியரசன், இன்பா, கிருஷன், அனுசன் (சென்பற்றிக் கல்லூரி), ஆரணி (யாழ். கனகரட்ணம் மகாவித்தியாலயம்), ஆருஷன், பிரணவன், ஆர்த்தி, அஞ்சலி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான துரைராஜா, அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளவும்.

**77/3, செம்மணி வீதி,**
**நாயன்மார்கட்டு. 077 445 8348**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# இனப்படுகொலையின் குறியீட்டு நாளே மே 18

## தமிழ் மக்கள் பேரவை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 18

இனப்படுகொலையின் குறீயீட்டு நாளாகவே மே 18 ஐ தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஒரு முகப்பட்டு கடைப்பிடிக்கின்றோம். இனிவரும் காலங்களில் இனப்படு கொலை நினைவேந்தல் குழுமத்தின் மூலம் நினைவாலயத்தை முள்ளிவாய்க்கால் மண்ணில் நிறுவுவதும், இனப் படுகொலைக்கான ஆவணப்படுத்தலை ஒருங்கிணைப்பதுமான விடயங்களை அனைவரும் நேர்மையுடன் ஒன்றிணைந்து கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

இலங்கை அரசு, தமிழர்கள் மீது தொடர்ச்சியாக இழைத்துவரும் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைகள் உச்சம் பெற்ற தினமே மே 18 ஆகும்.

தாயகத்தில் வாழுகின்ற மக்கள் முடிந்தவரை, மானுடப் பேரவலம் நிகழ்ந்தேறிய முள்ளிவாய்க்கால் மண்ணில்நிகழும்நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்துகொண்டு கொல்லப்பட்ட மக்களுக்கான தமது அஞ்சலிகளை தெரிவிக்க வேண்டும் கேட்டுக்கொள்கிறோம். ஏனையவர்கள் தாம் வாழும் இடங்களில் அஞ்சலி தீபமேற்றி மூன்று நிமிட மௌன அஞ்சலி செலுத்தி இந்த மண்ணில் வீழ்ந்த எம் உறவுகளை நினைவுகூருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நினைவேந்தல் நிகழ்வுகளானது, இதுவரை காலமும் இனப்படு கொலையில் கொல்லப்பட்ட மக்களுக்கு வெறுமனே அஞ்சலி செலுத்தி விளக்கேற்றும் நிகழ்வாக மட்டும் குறுக்கப்படமுடியாதது.

கொல்லப்பட்டவர்களுக்கும் தொடரும் இனப்படுகொலைக்குமான பொறுப்புக் கூறலுக்கான குரலை எந்தவித சமரசமுமின்றி முன்னெடுத்து செல்வோம் என்று உறுதி பூணவேண்டிய நாளும் இதுதான். எந்த அரசியல் உரிமைக்காக, மானுட நீதிக்காக குரல் எழுப்பி அதற்காய் கொல்லப்பட்டார்களோ அந்த அரசியல் உரிமைக்கான குரலை தொடர்ந்தும் நீதியுடன் முன்னெடுப்போம் என்று எம்மை மீள உறுதிப்படுத்தப்படவேண்டிய தினமும் இதுதான் .

இனப்படுகொலைக்கான நீதிக்கான பன்னாட்டு சுயாதீன குற்றவியல் விசாரணைப் பொறிமுறையையும் எந்த வித மாயைகளுக்குள்ளும் உட்படாது, நேர்மையுடனும், வெளிப்படைத்தன்மையுடனும், ஒற்றுமையாய் முன்னெடுத்தலும் எமது அரசியல் கோரிக்கைகளில் தெளிவுடனும் உறுதியுடனும் இருத்தலுமே இன்று எம் முன் உள்ள கட்டாய கடமைகளாகும்.

இதுவே வீழ்த்தப்பட்ட எமது உறவுகளிற்கு நாம் செய்யும் நேர்மையான அஞ்சலியாகவும் அமையும். நீதிக்கான மக்களின் குரலை வன்முறைமூலம் அடக்கிவிடலாம் என்பது அடிப்படைப்புரிதல் அற்ற வன்மம் மிகுந்த செயன்முறையாகும். மறுக்கப்பட்ட நீதியை வழங்குவது மட்டுமே அந்த மக்களின் குரலை அமைதிப்படுத்துமே தவிர, வரலாறுகளை மாற்றுவதும், சலுகைகள் மூலம் நீதிக்கான குரல்களை ஒளித்துவைக்க முயல்வதும் அல்ல. அரசானது தொடர்ச்சியாக இப்படியான ஏமாற்றும் செயன்முறைகளிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது.

நல்லாட்சி என தம்மை அழைத்துக்கொள்ளும் இந்த அரசும் அதே ஏமாற்று வழிமுறையையே தனது செல்நெறியாக வரித்துக் கொண்டுள்ளது.

இப்படியான மனோநிலை தொடர்ந்தும் இருக்கும்வரையில் இலங்கை அரசு, பன்னாட்டுத் தலையீடு இல்லாதவரைக்கும், எமக்கான நீதியை தானே முன்வந்து வழங்கும் என்று நாம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. இந்த வரலாற்று யதார்த்தத்தையும் உண்மையான கள நிலவரத்தையும் புரிந்து கொண்டு, பன்னாட்டுச் சமூகம் எமது பிரச்சினையை நேர்மையுடன் அணுக வேண்டும் எனவும் நாம் மீளவும் வலியுறுத்துகிறோம். எமது கோரிக்கைகளில் தெளிவுடனும் உறுதியுடனும் இருப்போம் எனவும் எம்மிடையேயான பேதங்கள் அனைத்தையும் இந்த இழப்புகளின் பெயரால் தாண்டி, எமது இனத்தின் நீண்டகால நலனை மட்டும் முன்னிறுத்தி நடபோம் எனவும் இந்த மண்ணில் வீழ்த்தப்பட்ட எம் உறவுகளின் நினைவுகள் மீது உறுதியெடுத்துக் கொள்வோம் - என்றுள்ளது.

(ற -5)

# தனது வெளிநாட்டுப் பயணங்களுக்கு மாகாண நிதி பயன்படவில்லையாம்

## வடக்கு முதலமைச்சர் தரும் தகவல்

யாழ்ப்பாணம், மே 18

வடக்கு முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் 5 தடவைகள் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டேன் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக, வடக்கு மாகாண முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. முதலமைச்சரின் அமைச்சுக்கு, முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அனுப்பிய பதில், முதலமைச்சரின் அமைச்சால் வழங்கப்பட்டது.

முதலமைச்சர் வழங்கிய பதிலில் தெரிவிக்கப்பட்டதாவது

கண்ணபிரான் ஞாபகார்த்தச் சொற்பொழிவு நடத்த சென்னைக்கு 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி தொடக்கம், 11 ஆம் திகதி வரையில் பயணம் மேற்கொண்டிருந்தேன். அதற்குரிய செலவுகள் பி.யு.சி.எல். என்ற நிறுவனம் பொறுப்பேற்றிருந்தது.

அதே மாதத்தில் 19 ஆம் திகதி தொடக்கம், 24 ஆம் திகதி வரையில் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டேன். (அது தொடர்பில் மேலதிக விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. )

பெட்னா அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டில் பங்குபற்றுவதற்கு அமெரிக்காவுக்கு 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி சென்றேன். அதே ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி திரும்பினேன். பயணத்துக்கான செலவு யு.எஸ்.ரி.பி.எசி. என்ற நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிரிட்டனுக்கு 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம், 28 ஆம் திகதி வரையில், கிங்ஸ்டன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட பயணத்தை மேற்கொண்டேன். செலவுகளை கிங்ஸ்டன், சரே நலன் விரும்பிகள் ஏற்றுக் கொண்டனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரையில் கனடாவின் மார்க்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு பயணம் மேற்கொண்டேன். அதற்கான செலவுகளை கனேடிய தமிழர் சமூக அமையம் ஏற்றுக் கொண்டது.

இந்தப் பயணங்களின் நுழைவிசைவு (விசா) கட்டணம் தவிர அனைத்துச் செலவுகளும் அழைத்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரம் எனக்குத் தெரியாது. மாகாண சபை நிதி எதுவும் பயணத்துக்கு பயன்படுத்தப்படவில்லை. - என்றுள்ளது.

(ற -5)

# வாக்காளர் பட்டியல் வழங்கிய கிராம அலுவலர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் மே 18

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதியில் வாக்காளர் பட்டியல் விநியோகிக்கச் சென்ற கிராம அலுவலர் மீது வீட்டு உரிமையாளர் தாக்குதல் மேற்கொண்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஈச்சமோட்டை கிராமத்தில் வாக்காளர் விண்ணப்பப் படிவங்களை தனது உதவியாளர் சகிதம் வீடு வீடாக விநியோகித்த கிராமஅலுவலர் மீது அந்தப் பகுதியில் வசிக்கும் ஒருவர் தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படுகின்றது.

குறித்த நபரின் வீட்டு வளவுக்குள் பிரவேசித்த கிராம அலுவலர் நான் கிராம அலுவலர் என கூறியதோடு சீருடையில் இலட்சணை பொறித்த வண்ணமே சென்றார் என்றும், வீட்டின் உரிமையாளர் கேள்வியின்றி வெளியே போடா என ஏகவசனத்தில் ஏசியவாறு தாக்கினார் என்றும் தாக்குதலுக்குள்ளானவருடன் 10 கிராமசேவகர்கள் இணைந்து முறைப்பாடு செய்துள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படும் நபர் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட்டுடன் சகிதம் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியிருந்தார். இரண்டு தரப்பினரும் சமாதானமாக செல்வதற்கு இணங்கியுள்ளனர் என்றும், தாக்கப்பட்ட கிராம அலுவலர் பொலிஸ் நிலையத்துக்கு சென்று தான் சமாதானமாக செல்வதாகவும் கையொப்பமிட்டு எழுத்துமூலம் கொடுத்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற -8,101,106)

# தந்தையின் இறுதி கிரியைகளில் அரசியல் கைதி

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்கு அரசியல் கைதி ஒருவரை அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக, மகசின் சிறைச் சாலையில் ஆயுள் தண்டனையை எதிர்நோக்கியுள்ள யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த விக்னேஸ்வரன் பார்த்தீபனின் தந்தை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை உயிரிழந்தார்.

அரசியல் கைதியான பார்தீபனை, இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள செய்வதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொண்டு தர வேண்டும் என்று அவரின் உறவினர்களால் கோரிக்கை விடுக்க ப்பட்டிருந்தது.

சிறைச்சாலைகள் அமைச்சர் சுவாமி நாதனுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தொடர்பு கொண்டு அவரை அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளார். பார்த்தீபன் கடந்த 21 வருடங்களாக சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

(ற -5,56)

# அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் அஞ்ச மாட்டோம்

## வடமாகாண உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆவேசம்

எருவில், மே 18

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் வல்வெட்டித்துறையில் 1974ஆம் ஆண்டு 5 பேருடன் தான் தமிழர் புதிய புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தார். விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியான தமிழர் விடுதலை இயக்கம் 1969 ஆம் ஆண்டு 7 பேருடன் வல்வெட்டித்துறையில் ஆரம்பித்தது. எங்களை பாதுகாப்பு அமைச்சர் கொச்சைப்படுத்தவோ, அச்சுறுத்தவோ வேண்டாம் எல்லாவற்றையும் நாங்கள் சந்திக்கத் தயார் இவ்வாறு வடமாகாண உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையிட்டு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் நேற்றுமுன்தினம் மாலை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, கே. கருணாகரன், துரைரட்ணம், கிருஸ்ண பிள்ளை மற்றும் வடமாகாண உறுப்பினர் சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நினைவேந்தலுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

கடந்த 1978. 83 என தொடராக இனப் படுகொலை இடம்பெற்று 2009 ஆம் ஆண்டு மிகப் பெரிய ளவில் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மே 12ஆம் திகதியில் இருந்து 18ஆம் திகதிவரை நினைவேந்தல் வாரத்தைக் கடைப்பிடிக்கின்றோம்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயரத்தின வடபகுதியில் சில அரசியல்வாதிகளும், வடமாகாண உறுப்பினர் சிவாஜி லிங்கம் 5பேருடனும் விளக்கு ஏற்றுகிறார் என்றும், புலம் பெயர்ந்த தமிழர்களின் பணத்துடன் அவர்கள் தொடர்ந்து படையினருக்கு எதிராக ஒவ்வொரு நாளும் பிரசாரம் செய்கின்றார்கள் இது கவலையளிக்கின்றது. அதற்கு பதிலடி கொடுப்போம் என்றும் தெரிவித்துள்ளார்

நாங்கள் 5 பேருடன் விளக்கு ஏற்றுவது அவர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது எங்களுக்கு வெற்றிதான். ஆகவே நாங்கள் எல்லா பதிலடியையும் எதிர்நோக்கத் தயார். தென்னிலங்கை அரசியல்வாதிகள் போல பணத்துக்காக நாங்கள் அரசியல் செய்பவர்கள் அல்லர். நாங்கள் எங்களுடைய மக்களின் உரிமைக்காக செயற்படுபவர்கள். பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயரத்தின கோடிஸ்வரன் தான். இவர் ரணிலின் மருமகன். ரணில் ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் மருமகன் என



எல்லாம் எங்களுக்குத் தெரியும். பன்னாட்டு விசாரணை மூலம் ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் அதுவரை அகிம்சை வழியில் போராடுவோம் - என்றார்.

(ற - ய)

# 1,176 போதை வில்லைகளுடன் கணினிப் பொறியியலாளர் கைது

## அவை 70 லட்சம் ரூபா பெறுமதியானவையாம்

கொழும்பு, மே 18

சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 176 போதை வில்லைகளுடன் கணினி மென்பொருள் பொறியியலாளர் ஒருவர் நுகேகொடைப் பகுதியில் கொழும்பு மதுவரித் திணைக்கள அதிகாரி களால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடை மேம்பாலத்தின் அருகில் கைது செய்யப்பட்ட இவர் நீண்ட காலமாக இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் எனவும், டுபாயிலிருந்து இணையத்தளத் தொடர்பு மூலம் இந்த வில்லைகளைத் தருவித்து வந்துள்ளார் எனவும் விசார ணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவர் போதை வில்லைகளைக் கடத்துவதற்குப் பயன்படுத்திவந்த சொகுசு ஜீப்பொன்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. (த)

# நன்கொடை கோரும் அதிபர்கள் குறித்து உடன் அறிக்கை தரவும்

## அதிகாரிகளுக்குக் கல்வி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, மே 18

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் உயர்தர வகுப்புக்கு அனுமதி கோரும் மாணவர்களிடமிருந்து பணம் மற்றும் ஏனைய நன்கொடைகளைக் கோரும் பாடசாலை அதிபர்கள் பற்றிய அறிக்கையொன்றைத் தனக்குச் சமர்ப்பிக்குமாறு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

தாங்கள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் தாங்கள் விரும்பும் பாட நெறிகள் இல்லாதபோது வேறு பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களிடமிருந்து பணம் மற்றும் ஏனைய நன்கொடைகள் அறவிடப்படுவதாக அமைச்சுக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் அது தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்தித் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வியமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலை மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நன்கொடைகளுக்கு மேலதிகமாகப் பாடசாலை அபிவிருத்தி நிதி என்ற பெயரில் பணம் அறவிடுபவர்கள் பற்றிய தகவல்களைக் கல்வியமைச்சின் செயலாளருக்கோ அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கோ அறிவிக்குமாறு கல்வியமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முறைப்பாடுகளை எழுத்து மூலமாகவோ அல்லது கல்வியமைச்சின் 1988 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அறிவிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)




# அரசமைப்பை எதிர்த்தால் இனவாதிகள் பலமடைவர்

## ஜே.வி.பி. எச்சரிக்கை



கொழும்பு, மே 18

நாம் சிறு குழுக்களாகப் பிரிந்து நின்று புதிய அரசமைப்புத் தயாரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் வடக்கில் உள்ள இனவாதிகளும் தெற்கில் உள்ள இனவாதிகளும் பலமடைந்துவிடுவார்கள் என்றுமக்கள்விடுதலைமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு தொடர்பாகக் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் பல பிரச்சினைகள் தோன்றுவதற்கும் பல பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கும் காரணம் இனவாதிகள் தான். இனவாதிகள் எல்லா இனங்களிலும் உள்ளனர். ஓர் இனத்துக்குக் கிடைக்கும் நியாயமான விடயங்களைத் தடுப்பதுதான் இவர்களின் வேலை.

இப்போது நாம் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கி இருக்கின்றோம். இந்த முயற்சியைக் குழப்பும் நடவடிக்கைகளிலும் இனவாதிகள் ஈடுபட்டுள்ளனர். நாம் பிரிந்து நின்று செயற்படும்போதுதான் இந்த இனவாதிகள் பலமடைகின்றனர்.

நாம் சிறு குழுக்களாகப் பிரிந்து நின்று புதிய அரசமைப்புத் தாயாரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் வடக்கில் உள்ள இனவாதிகளும் தெற்கில் உள்ள இனவாதிகளும் பலமடைந்து விடுவார்கள். அவர்கள் பலமடைவது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

புதிய அரசமைப்பு தொடர்பில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே நியாயமான சந்தேகங்கள் உள்ளன. அந்தச் சந்தேகங்கள் நீக்கப்படவேண்டும். அவர்களின் கேள்விகளுக்கான உரிய பதிலை எவ்வாறு அரசமைப்பில் உள்ளடக்குவது என்று பார்க்கவேண்டும். மொத்தத்தில் திருப்திகரமான ஓர் அரசமைப்பைத் தயாரித்து முடிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்-என்றார். (த-5-3)

# 8 ஆயிரம் ஹெக்ரேயர் காடுகள் இலங்கையில் வருடாந்தம் அழிப்பு

## சூழல் பாதுகாப்பு மையம் தகவல்

கொழும்பு, மே 18

இலங்கையில் அமைந்துள்ள காடுகளில் ஆண்டொன்றுக்கு 8 ஆயிரம் ஹெக்ரேயர் வரை அழிக்கப்பட்டு வருவதாக இலங்கைச் சூழல் பாதுகாப்பு மைய அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் காரணமாகப் பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று மீள்குடியேற்ற நடவடிக்கை காரணமாகவும் பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அனுராதபுரம், அம்பாந்தோட்டை, புத்தளம், அம்பாறை, மொனராகலை மாவட்டங்களில் அமைந்துள்ள காடுகள் கூடுதலான அழிவுகளை சந்தித்துள்ளன. இலங்கையில் மொத்தப் பிரதேசத்தில் தற்போது, 29.7 சதவீதக் காடுகள் மாத்திரம் காணப்படுகின்றன.

அதனை 2022 ஆம் ஆண்டு 32 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அந்த இலக்கை எட்டவேண்டுமானால் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 650 ஹெக்ரேயர் பூமியில் புதிதாகக் காடுகளை உருவாக்கவேண்டும். தற்போது கைவிடப்பட்டுள்ள அரச காணிகளை இந்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முடியும்-என்றார். (த-5)

# குடிவரவு, குடியகல்வுச் சேவையை மேம்படுத்துவது குறித்து ஆராய்வு

கொழும்பு, மே 18

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சங்கத்தின் பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பான முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை வழங்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கேட்டுள்ளார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுச் சங்க அலுவலர்களுக்கும் இடையிலான சந்திப்பு அரச தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அரச தலைவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டதாக, அரச தலை வர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கைக் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சேவைக்கான சேவைப் பிரமாணக் குறிப்பு, குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்குபடுத்தல் சேவை, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் ஆள்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு, வெளிநாட்டுத் தூதரகச் சேவையில் அதிகாரம் பெற்ற அலுவலர்களை இணைத்தக் கொள்ளுதல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளை உற்பத்தித் திறனாகப் பயன்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது அரச தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுச் சேவையை மேலும் மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகளும் அரச தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

அமைச்சர்களான எஸ்.பீ.நாவின்ன, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.என்.ரணசிங்க, தாபனப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.டீ.சோமதாஸ உள்ளிட்ட அலுவலர்களும் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள். (த-5)



## ஆஸி. ரோந்துக் கப்பல் திருகோணமலையில்

கொழும்பு, மே 18
ஆஸ்திரேலிய எல்லைப் பொலிஸாரின் பெரிய ரோந்துக் கப்பலான 'ஓசன் ஷீல்ட்' திருகோணமலைத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளது.

ஆஸ்திரேலிய எல்லைப் பொலிஸாரின் கப்பல் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

மனிதக் கடத்தல், சட்டவிரோத மீன்பிடி, நாடு கடந்த குற்றங்களைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இந்தக் கப்பல் ஆழ்கடலில் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மனிதக் கடத்தலைத் தடுப்பதற்கு இலங்கை மிகுந்த ஆதரவை அளித்து வருவதாக இந்தக் கப்பலுடன் வந்துள்ள ஆஸ்திரேலிய எல்லை நடவடிக்கை தளபதி எயர் வைஸ் மார்சல் ஸ்டீபன் ஒஸ்போர்ன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலின் பயணம், இலங்கையுடனான எமது வலுவான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் பரந்துபட்ட கடல்சார் கரிசனைகள் தொடர்பாக எமது ஒத்துழைப்பையும், அனுபவங்களையும் பரிமாறிக் கொள்வதற்கும் உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(த - 5)

## சீன அரசின் முதலீடுகளை வரவேற்கிறது இலங்கை

### பீஜிங்கில் கூறினார் ரணில்



கொழும்பு, மே 18
இலங்கையில் பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் சீனாவின் முதலீடுகளை வரவேற்பதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் சீன அரச தலைவர் ஜின் பிங்கை சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று சீனாவின் அதிகார பூர்வ செய்தி ஊடகமான சின்ஹுவா செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை, கொழும்புத்துறைமுகநகரத் திட்டங்களை வெற்றிகரமாக முன்நோக்கி நகர்த்துவதற்குச் சீனாவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை விரும்புகிறது என்றும் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீன - இலங்கை சுதந்திர வர்த்தக வலயக் கட்டுமானமானது, இருதரப்பு வர்த்தகத்தில் நியாயமான மற்றும் நிலையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான முக்கியமான தொடக்கப் புள்ளியாக இருக்கும். இது முதலீடுகளை எளிதாக்கும் என்றும் சீன அரச தலைவர் ஜின் பிங் தெரிவித்தார் என்றும் சின்ஹுவா செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சீனாவின் முதலீடுகள் தொடர்பாக இந்தியா தொடர்ந்து கரிசனைகளை வெளியிட்டு வரும் நிலையிலேயே, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சீனாவுக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கையிலிருந்து சீனாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த அரச தலைவர் மைத்திரிபால, அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் ஒப்பந்தங்கள் எதனையும் மேற்கொள்ளவேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த -5)

## 15 வயதுச் சிறுமி மீது கூட்டு வன்புணர்வு

### 4 இளைஞர்கள் கைது

கொழும்பு, மே 18
கோவில் பூசைக்கு இரவில் சென்று கொண்டிருந்த 15 வயதுச் சிறுமியொருவரை வழிமறித்து முச்சக்கரவண்டியில் கடத்திச் சென்ற நான்கு இளைஞர்கள் அவரைக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் கந்தப்பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொடூரச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

கடந்த வியாழக்கிழமை இரவு தனது தங்கையுடன் சிறுமி கோவிலுக்குச் சென்றுள்ளார்.

இடைவழியில் இவரது தங்கை அருகிலுள்ள கடையொன்றுக்குச் சென்றவேளை முச்சக்கர வண்டியில் வந்த நான்கு இளைஞர்கள் இவரைக் கடத்திச்சென்று கொன்கோடியா தோட்ட கொழுந்து மடுவத்தில் வைத்துக் கூட்டாக வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளனர்.

அதன் பின் அவரை வேறொரு வீட்டுக்கு இழுத்துச் சென்று அங்கிருந்த பெண்ணொருவரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தப் பெண் இவரைக் கடுமையாகத் தாக்கிய பின் சற்றுத் தூரத்திலுள்ள பாழ்கிணறொன்றுக்குள் தள்ளிவிட்டுச் சென்றுள்ளார்.

சிறுமியின் பெற்றோரும் உறவினர்களும் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கையின் பின் கடந்த வெள்ளிக்கிழமை அவரைக் கிணற்றிலிருந்து மீட்டு கந்தப்பளைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கையின் பின் கொன்கோடியா மற்றும் பார்க் தோட்டத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

(த -5)

## இராணுவத் தேவைகளுக்கு துறைமுகங்கள் கிடையாது

### சீனாவில் கூறினார் சரத் அமுனுகம

கொழும்பு, மே 18
இராணுவ நடவடிக்கைகளுக்காகத் துறைமுகங்களைப் பயன்படுத்துவதற்குச் சீனா உள்ளிட்ட எந்தவொரு நாட்டுக்கும் இலங்கை அனுமதி வழங்காது என்று அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், பீஜிங்கில் இந்தியாவின் பிரிஜ செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

சீன நீர்மூழ்கியைக் கொழும்பில் தரிப்பதற்கு இலங்கை அனுமதி வழங்க மறுத்தது என்பதை உறுதிப்படுத்திய அமைச்சர் சரத் அமுனுகம், எமது துறைமுகங்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்கானது என்பதே இலங்கை அரசின் நிலைப்பாடு. ஏனைய எல்லா நாடுகளும் இங்கு மூலோபாய நலன்களைக் கொண்டிருக்க முடியாது. நாம் எல்லோருக்கும் சமம், என்று குறிப்பிட்டார்.

கஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் கவலையை தாம் ஆதரிப்பதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார். (த - 5)

## ஜூன் 1 முதல் 3 மாதங்கள் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

### அரச தலைவர் மைத்திரி பணிப்புரை



கொழும்பு, மே 18
எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மூன்று மாதங்களை டெங்கு ஒழிப்பு காலப் பகுதியாகப் பிரகடனப் படுத்துமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு ஒழிப்புச் செயலணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அரச தலைவர் இதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

துரிதமாகப் பரவி வருகின்ற டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால டெங்கு ஒழிப்புச் செயலணியை நேற்று முன்தினம் கூட்டியிருந்தார்.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் அரச நிறுவனங்கள் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரைவில் சுற்றறிக்கைகள் சில வெளியிடப்படும் என்று இதன்போது அரச தலைவர் கூறியுள்ளார்.

கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெறுகின்ற இடங்களில் நீர் தேங்கியிருக்கும் வகையில் சூழல் காணப்படுமாயின், அதற்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரச தலைவர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் வாராந்தம் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாளில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளுமாறும் அரச தலைவர் அறிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பிற்குத் தேவையான பக்றீரியாவை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கையிலுள்ள தொடர்புபட்ட நிறுவனங்கள் ஊடாக மீண்டும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

(த - 5)

## பாடசாலை மாணவனைத் துர்நடத்தைக்கு உட்படுத்திய சிப்பாயின் மனைவிக்கு சிறை

### அனுராதபுரம் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மே 18
16 வயதுடைய பாடசாலை மாணவனைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய இராணுவச் சிப்பாயின் மனைவிக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்குத் தலா 7 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்து. அனுராதபுரம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மஹேஸ் வீரமன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குற்றவாளிக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனைகளுக்கு மேலதிக ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கு 500 ரூபா அபராதப் பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த முடியாத பட்சத்தில் மேலும் மூன்று மாதங்களுக்கு எளிமையான வேலைகளுடன் கூடிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளி கர்ப்பமாக உள்ளமையால் மூன்று குற்றச்சாட்டுகளுக்குத் தனித்தனியாக விதிக்கப்பட்ட மூன்று வருடங்களுக்கான சிறைத் தண்டனையை ஒரே நேரத்தில் அனுபவிக்கும் வகையில் நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

28 வயதான ரன்பிட்ட தேவாலயகே பிரியங்கிகா சமன்குமாரி என்ற பெண்ணுக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றவாளி 2011 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதியில் இருந்து 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 16 வயதுடைய பாடசாலை மாணவனைக் கடுமையாகப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார்.

இலங்கைக் குற்றவியல் நடைமுறை சட்டத்திற்கமைய 365 (ஆ)2 என்ற பிரிவின் கீழ் தண்டனை பெற்றுக் கொள்ள கூடிய பெரிய குற்றம் மேற்கொண்டுள்ளதாகச் சட்டமா அதிபரினால் அனுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த -5)

## உறுதிமொழிகளை மைத்திரி நிறைவேற்றாதுள்ளமைக்கு சுதந்திரக் கட்சியே காரணம்

### புரவசி பலய குற்றச்சாட்டு

கொழும்பு, மே 18
அரச தலைவர் தேர்தலின்போது மைத்திரி பால சிறிசேன வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களே காரணம். இவ்வாறு கடந்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய புரவசி பலய என்ற தன்னார்வ நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய அரசின் ஊழல்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. அரசமைப்பு விடயத்தில் இன்னும் உறுதிப்பாடு இல்லை. நிறைவேற்று அரச தலைவர் முறையில் இன்னும் தெளிவில்லாத நிலையில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளனர் என்று அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது. (த-5)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முள்ளிவாய்க்காலில் ஒன்றிணைந்து நினைவேந்துவோம்

தமிழனப் படுகொலையின் உச்சம் நிகழ்ந்து முடிந்த நினைவு நாள் இன்று. ஆட்சியில் அரைப் பங்கு கேட்டு, பின்னர் கூட்டாட்சியைக் கேட்டு, அதுவும் கிடையாது என்றபோது அதிகாரப் பகிர்வாவது போதும் என்று கேட்டு, எதுவும் இல்லையென்றாகிப்போன போது, ஒரு குருசேத்திரப் போரை நடத்தி அதிலும் வல்லாதிக்க நாடுகளின் வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்ட ஓர் இனம் தன்னை நினைந்துருக வேண்டிய தினம்.

பிரிட்டிஷ் அரசிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் பெரும்பான்மையினரால் அடக்குமுறைக்கு உள்ளாகி வந்த தமிழ் இனம் நிமிர்ந்து நின்று நியாயம் கேட்டதால், முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு முகங்குப்புற வீழ்த்தப்பட்டு தோற்கடிக்கப்பட்டது. பன்னாட்டு நியதிகளையும் ஐக்கிய நாடுகள்சபையின் போர்விதிகளையும் புறந்தள்ளி ஆயிரம் ஆயிரமாக அப்பாவிகளைக் கொன்றொழித்த ஒரு பயங்கரப் போரை- இனியொருபோதும் வேண்டாம் என்கிற போரை- நினைவிலிருத்தும் நாள்.

இந்த நாளை நாம் எல்லோருமே நினைவுகூர்ந்து தமிழர்களின் விடுதலைக்கான ஆன்மபலத்தை அதிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். இது வெறும் அரசியல் கூப்பாடுகளுக்கான நாள் அல்ல. அல்லது நானா நீயா என்று போட்டியிடுவதற்கான நாளுமல்ல. எமக்கிடையிலான வேறுபாடுகளையும் போட்டிகளையும் தனிமனித விருப்பு வெறுப்புகளையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு ஆன்ம சுத்தியோடு உணர்வுபூர்வமாக மனமுருகி வழிபடவேண்டிய நாள் இது என்பதை நாம் அனைவரும் ஏற்று ஒழுகவேண்டும். அதற்கான அழைப்பைத்தான் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் சில தினங்களுக்கு முன்னர் விடுத்திருந்தார்.

அது நடந்தேற வேண்டும் என்பதே எமது ஆணித்தரமான விருப்பு. இன்றில்லாவிட்டால் நாளையாவது அது நடக்கவேண்டும். அதற்கான ஆணித்தரமான கால்கோள்கள் முள்ளிவாய்க்கால் மண்ணிலே இடப்படவேண்டும்.


பல்லாயிரக்கணக்கான அப்பாவிகளின் குருதியால் கழுவப்பட்ட புனித பூமி அது. ஒட்டுமொத்தத் தமிழர்களின் விடுதலைக்காக ஆயிரம் ஆயிரம் மக்கள் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த இடம் அது. சிரமங்களையும் வசதிகளையும் பார்க்காமல் அந்த மண்ணிலே நாம் அனைவரும் பெருமெடுப்பில் ஒன்றுகூடி தமிழர்களின் அரசியல் வேணாவா இன்னும் வீழ்ந்துவிடவில்லை; கொல்லப்பட்ட மக்களைச்சாட்சியாக வைத்து எமது அரசியல் விடுதலைக்தகாக நாம் தொடர்ந்தும் வீறு கொண்டு நிற்கிறோம் என்பதை உலகுக்கும் கொழும்புக்கும் உணர்த்தவேண்டும்.

அவ்வாறு ஒன்றுதிரள்வதற்கான ஏற்பாடுகளையும் போக்குவரத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவற்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு தமிழனும் முள்ளிவாய்க்காலின் அந்த வெண் மணல் படுக்கையை மனிதத் துணிக்கைகளாகக்கூடி நிரப்பவேண்டும். அது தமிழர்களின் வருடாந்த வரலாற்றுக் கடமை. அந்தக் கடமையில் இருந்து எவரும் தவறக்கூடாது.

நேற்று நடந்தவற்றுக்காகவும், இன்று நடப்பவற்றுக்காகவும் நாளை நடக்கக்கூடாதனவற்றுக்காகவும் தமிழர்களாகிய நாம் அனைவரும் முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒன்றுகூடுவது மிக முக்கியமானது. அந்த ஒன்றுபடலும் ஒருமித்த குரலுமே தமிழர்களை முன்னோக்கிய அரசியலில் நகர்த்திச் செல்லும்.

முள்ளிவாய்க்கால், தோல்வியின் இருப்பிடமல்ல, வீறு கொண்ட அப்பாவித் தமிழினத்தின் வெற்றியின் பிறப்பிடம் என்கிற வரலாற்றை எதிர்காலத்தில் படைப்பதற்கு ஒவ்வொரு தமிழனும் அந்த மண்ணில் இன்று காலை 9 மணிக்கு முன்பாகவே குழுமியிருக்கவேண்டும். அதுவே எமது கடமை. அதுவே எமது சத்தியமும்கூட.

கட்டுரை



# தமிழீழத்தை உருவாக்க முயற்சி அரசின் செயற்பாடுகளைத் தோற்கடிப்போம்

## உதய கம்மன்பிலவுடன் ஒரு நேர்காணல்

எம்.ஐ.முபாறக்

ஒற்றை ஆட்சி என்ற போர்வையில், கூட்டாட்சித் தீர்வைக் கொண்டு வந்து, நாட்டை இரண்டாகப் பிரித்து தமிழீழத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வரும் அரசின் திட்டத்தை நாட்டு மக்களுடன் இணைந்து தோற்கடிப்போம் என்று மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். குறித்த நேர்காணலின் முழு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**கேள்வி:** மகிந்த அணியின் மேதினக் கூட்டம் வெற்றியா? தோல்வியா?

**பதில்:** மிகப்பெரிய வெற்றி அது. மைத்திரி அணியின் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் நிறைந்து நின்ற மக்கள் கூட்டத்தை விடவும், மகிந்த அணியின் 18 ஏக்கர் நிலப்பரப்பில் நிறைந்து நின்ற மக்கள் கூட்டம் பெரியது என்பதை சிறுபிள்ளைகூட அறியும்.

### பெருவெற்றி பெற்ற கூட்டு எதிரணியின் மேதினக் கூட்டம்

கடும் சன நெருக்கடி காரணமாக அதிகமான பஸ்கள் இடையில் திரும்பிச்சென்றன. சில இடங்களில் திட்டமிட்டு சன நெருக்கடியை பொலிஸ் ஏற்படுத்தியது. இதன் காரணமாகவும் பஸ்கள் திரும்பிச்சென்றன. காலிமுகத்திடல் முழுவதும் மக்கள் கூட்டத்தால் நிரம்பியதோடு, கொள்ளுப்பிட்டியைத் தாண்டியும் மக்கள் வீதிகளில் நிறைந்து நின்றனர். ஐ.தே.க, சுதந்திரக் கட்சி மற்றும் ஜேவிபி ஆகிய கட்சிகளின் கூட்டங்களில் கலந்து கொண்ட மொத்தச் சனத்திரளை விடவும், எமது கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஆகவே, எமது கூட்டம் பிரமாண்ட வெற்றியைப் பெற்றுள்ளது.

**கே:** மேதினக் கூட்டத்தின் பின் அதாவது உங்கள் மொழியில் சொல்வதானால், மேதின வெற்றிக்குப் பின் அடுத்த போராட்டம் என்ன?

**ப:** நீண்ட காலமாக ஒத்திப் போடப்பட்டுக்கொண்டிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும் எனக் கோரும் போராட்டமே அடுத்த போராட்டமாக அமையவுள்ளது.
எமது மே தினக் கூட்டமும் இந்தக் கோரிக்கையைஅடிப்படையாகக் கொண்டே நடத்தப்பட்டது. இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்கு வழங்கிய ஆணை முடிவுக்கு வந்துள்ளதையே எமது கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களின் எண்ணிக்கை கூறுகின்றது.
எனவே அரசு புதிய ஆணையைக் கோரி மக்களிடம் செல்ல வேண்டும். அதற்காகத் தேர்தலை நடத்த வேண்டும்.
அந்தத் தேர்தலில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குதல், திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்கு வழங்குதல் மற்றும் வடக்குகிழக்குக்கு சமஷ்டித் தீர்வை வழங்குதல் போன்ற விடயங்களுக்கும் மக்கள் ஆணையைப் பெற வேண்டும்.
உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமைக்கு எதிராக மூன்று வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் நீண்ட காலமாக இழுபடுகின்றன. தேர்தலைக் கோரி அரசியல் மற்றும் நீதித் துறை ரீதியாக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் செய்துவிட்டோம்.
இனித் தேர்தலை நடத்தும் வரை நாம் வீதிக்கு வந்து அரபு வசந்தம்போல் போராடுவோம்.

தேர்தல் அறிவிப்பை அடுத்துத்தான் போராட்டம் நிறைவு

**கே:** உங்கள் மே தினக் கூட்டத்தால் இருவர் சாவடைந்தனர். இந்தப் போராட்டத்தால் எத்தனை பேரோ?

**ப:** மகாத்மா காந்தியின் அகிம்சை வழியையே நாம் பின்பற்றுவோம். ஒருபோதும் வன்முறையில் ஈடுபடமாட்டோம். பொலிஸார் கூட இன்று இந்த அரசுக்கு எதிராகவே உள்ளனர். அந்த எதிர்ப்பின் வெளிப்பாடுதான் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாமீது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டமை.

### எல்லாவற்றுக்கும் படையினரைப் பயன்படுத்த அரசு முனைகிறது

பொலிஸ், இராணுவத்தை வைத்து அரசு எல்லாவற்றையும் செய்யப் பார்க்கிறது. இவர்கள் மக்கள் பக்கம் மாறினால், அரசால் எதுவும் செய்ய முடியாது. முதலில் தேர்தலை நடத்துங்கள். மக்கள் விரும்பினால் உங்களைத் தெரிவு செய்வர். அல்லது வேறு ஓர் அரசைத் தெரிவு செய்வர். இதுதான் ஜனநாயகம்.

**கே :** திருமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிரான உங்கள் போராட்டம் பற்றி?

**ப:** 1987 இல் இலங்கைஇந்தியாவுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு மேலதிகமாக இரண்டு பிரதமர்களிடையே பரிமாறப்பட்ட இரண்டு கடிதங்கள் உள்ளன. இந்தியாவின் அனுமதி இன்றி திருமலை எண்ணெய்த் தாங்கிகளை எவருக்கும் குத்தகைக்கு விடக்கூடாது என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திருமலை எண்ணெய்த் தாங்கிகள் இந்த நாட்டின் சொத்து

இவை இலங்கையின் சொத்து. இவற்றை எப்படி வேறு ஒரு நாடு கையாள முடியும்? எமது நாட்டு மக்களின் வரிப்பணத்தில்தான் பிரித்தா னிய ஆட்சியாளர்கள்

இந்தத் தாங்கிகளை நிர்மாணித்தனர். பின்னர் அவர்களுக்குப் பணம் கொடுத்து அவற்றை நாம் பெற்றுக் கொண்டோம்.

புதிய ஒப்பந்தத்தின்படி இந்தத் தாங்கிகள் ஐ.ஓ.சி நிறுவனத்துக்கு 50 வருட குத்தகைக்கு விடப்படும். இந்த எண்ணெய்த் தாங்கிகள் மாத்திரமன்றி, சூரிய ஒளி மின்சாரத் திட்டத்துக்காக சம்பூரில் ஆயிரம் ஏக்கர் நிலம் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளது.

எரிவாயு உற்பத்திக்கு நூற்றுக் கணக்கில் நிலம் வழங்கப்படுவதோடு திருமலைத் துறைமுகமும் கொடுக்கப்படும்.

**கே: இந்த எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்குக் கொடுக்கும் ஒப்பந்தம் 2003இல்தான் செய்யப்பட்டது. உங்கள் ஆட்சியில் ஏன் இந்த ஒப்பந்தத்தை நீங்கள் நீக்கவில்லை?**

**ப:** ரணில் தலைமை அமைச்சராக இருந்தபோது தற்காலிகமாகச் செய்யப்பட்ட ஒப்பந்தம் அது. அதன் ஊடாக ஐ.ஓ.சி நிறுவனம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இலங்கையின் எரிபொருள் சந்தையில் இந்த நிறுவனம் தற்போது மூன்றில் ஒரு பங்கை வைத்துள்ளது.

பலமான ஒரு நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டால் இலகுவாக அதில் இருந்து விலகிவிட முடியாது. இதனால் அந்த ஒப்பந்தத்தை அடுத்து வந்த அரசும் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1987இல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் இப்படித்தான்.

பூனையை வளர்த்தால் இலகுவாக விரட்டி விடலாம். சிங்கத்தை வளர்த்தால் முடியுமா? அதுபோலத்தான் இந்த ஒப்பந்தமும்.

**கே: உங்கள் கூட்டணிக்குள் ஏதும் பிரச்சினையா? விமல் வீரவன்ச, ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போகிறார் என்று செய்தி உலாவுகின்றதே.?**

**ப:** இதில் எந்த உண்மையும் இல்லை. இந்தச் செய்தியை ஓர் ஊடகம் திட்டமிட்டுப் பரப்பியது.

2015 ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் கோத்தபாய ராஜபக்ச சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றார் என்று இந்த ஊடகம் தான் அப்போது செய்தி வெளியிட்டது. மகிந்த ராஜபக்ச சீசல்ஸ் நாட்டுக்குத் தப்பிச்சென்றார் என்றும் கூறியது.

நான் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் சென்றேன் என்றுகூட இந்த ஊடகம் கூறியிருந்தது. அது மாத்திரமன்றி, இலங்கை வங்கியில் நான் பெற்ற 80 கோடி ரூபாய் கடனை நீக்கி விடுவதாக மகிந்த வாக்குறுதி வழங்கியதாலேயே நான் மகிந்தவுக்கு ஆதரவு வழங்கினேன் என்றும் செய்தி பரப்பியது.

எனக்கு ஆஸ்திரேலியாவில் வீடு உள்ளது என்றும் கூறியது. இந்தச் செய்திகளில் ஒன்று தானும் நிரூபிக்கப்படவில்லை. இந்த ஊடகம்தான் இப்போது விமல் பற்றிய வதந்தியையும் பரப்பியது.

**கூட்டு எதிரணிக்குள் பிரச்சினைகள் எதுவும் கிடையாது**

விமல், ஐ.தே.கவுக்குப் போவதாக இருந்தால் அவர் மே தினக் கூட்டத்தில் அந்தக் கட்சியைக் கடுமையாக விமர்சித்திருக்கமாட்டார். அவர்தான் அந்த மேடையில் அந்தக் கட்சியை அதிகம் விமர்சித்தவர்.

விமல் சிறையில் இருந்தபோது மகிந்த பல தடவைகள் சென்று விமலைப் பார்த்தார். விமல் ஐ.தே.கவுக்குப் போகப் போவதாக அவர் நம்பியிருந்தால், அவர் சிறைச்சாலைக்கு விமலைச் சந்திக்கச் சென்றிருக்கமாட்டார்.

> இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்கு வழங்கிய ஆணை முடிவுக்கு வந்துள்ளதையே எமது கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களின் எண்ணிக்கை கூறுகின்றது. எனவே அரசு புதிய ஆணையைக் கோரி மக்களிடம் செல்லவேண்டும். அதற்காகத் தேர்தலை நடத்தவேண்டும். அந்தத் தேர்தலில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குதல், திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்கு வழங்குதல் மற்றும் வடக்கு கிழக்குக்கு கூட்டாட்சித் தீர்வை வழங்குதல் போன்ற விடயங்களுக்கும் மக்கள் ஆணையைப் பெற வேண்டும்.


**கே: நீங்கள் அறிந்தவகையில் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான அரசின் நடவடிக்கைகள் எந்தக் கட்டத்தில் உள்ளன?**


**ப:** நாட்டைப் பிளவுபடுத்தி, வடக்கு கிழக்குக்குக் கூட்டாட்சித் தீர்வை வழங்கும் புதிய அரசமைப்பை இந்த அரசு தயாரித்துக்கொண்டிருக்கின்றது. புலிகள் எதைக் கேட்டார்களோ அதைக் குறைவின்றிக் கொடுப்பதற்கு அரசு தயாராகிவிட்டது.

இந்த நாட்டு மக்கள் ஒற்றை ஆட்சியை விரும்புவதால் ஒற்றை ஆட்சி என்ற தலைப்பின் கீழ் கூட்டாட்சித் தீர்வை வழங்கப் போகிறது.

நாடாளுமன்றத்துக்கு இதைக் கொண்டு வந்தால் நிச்சயம் தோற்கடிக்கப்படும். இதற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட வாக்களிப்பர். ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல்வேறு தரப்பினருக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது. அவற்றுள் ஒன்றுதான் புலம்பெயர் தமிழர்களுக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கிய "வடக்குக் கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கூட்டாட்சித் தீர்வு" என்ற வாக்குறுதி. நாட்டை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியைத் தமிழர்களிடம் ஒப்படைக்கும் இந்த நாசகாரத் திட்டத்தை மக்களுடன் இணைந்து நாம் தோற்கடிப்போம். நாட்டுப் பற்றாளர்கள் எவரும் இதை ஆதரிக்கமாட்டார்கள்.

புலிகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்த நாம் மீண்டும் அவர்களிடம் அதைத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு இடம் கொடுக்கமாட்டோம், என்றார்.





## ஆசிரியருக்கான கடிதம்

### ஆளுநரும் முதலமைச்சரும் முரண்படுவதால் பாதிக்கப்படுவது மாகாணசபை நிர்வாகமே

வடக்கு மாகாண சபையில் பணி புரியும் உயர் அதிகாரிகளின் இடமாற்றங்கள் தொடர்பாக ஆளுநருக்கும் முதலமைச்சருக்குமிடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது உண்மையாக இருக்குமானால், வடக்கு மாகாணசபையின் சீரான செயற்பாடுகளுக்கு அது குந்தகமாக அமைந்து விடும்.


முன்னாள் ஆளுநர் ஒரு படைத் தளபதியாக இருந்தவர் என்பதால் சிவில் நிர்வாகத்தில் அவரால் சுமுகமாக இயங்க முடியவில்லை. மற்றவர்களுடன் ஒத்துப் போய்ச் செயற்பட முடியவில்லை. தான் இட்டதே சட்டம் என்ற வகையில் அவர் நடந்து கொண்டார். பிழைக்கத் தெரிந்த மாகாணசபையின் உயரதிகாரிகள் சிலர், முன்னாள் ஆளுநரின் கடைக்கண் பார்வையைப் பெற்றுத் தமது மனம் போன வகையில் நடந்து கொண்டனர். இவர்கள் முதலமைச்சரை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை முன்னாள் பிரதம செயலாளரின் நடவடிக்கைகளை இதற்கொரு உதாரணமாகக் கொள்ள முடியும். மாகாண சபைகளைப் பொறுத்தவரையில் ஆளுநர்கள் அதிகளவில் அதிகாரங்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். வடக்கு மாகாணசபையைப் பொறுத்த வரையில் முதலமைச்சரை விடவும் ஆளுநரே முக்கியத்துவம் பெறுகின்றார். வடக்கு மாகாணசபை ஒரு வெள்ளையானை எனக் கூறப்படுவதைத் தாம் ஏற்றுக் கொள்வதாகப் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்திருந்தார். நிர்வாகத் திறன்மிக்க முன்னாள் மூத்த நிர்வாக சேவை அதிகாரியான அவரது கூற்றுமிகச் சரியானது தான். பெயரளவில் மட்டுமே இயங்கி வருகின்ற வடக்கு மாகாண சபையில் ஆளுநரும் முதலமைச்சரும் எதிரும் புதிருமாக நின்று செயற்படும்போது சபை நடவடிக்கைகள் தான் பாதிக்கப்படும். இதனால் வடக்கு மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

வடக்கு ஆளுநர் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு சபையின் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும். முதலமைச்சரும் எவரையோ திருப்திப்படுத்தும் வகையில் எதற்கெடுத்தாலும் எதிர்த்தே தீருவது என்கின்ற கொள்கையைக் கைவிட்டு மாகாணசபை தொய்வின்றிச் செயற்பட்டு மக்களுக்குச் சேவையாற்றுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதை விடுத்து ஆளுநரும் முதலமைச்சரும் தமக்குள் முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வதால் மக்கள் தான் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

ப.வேலாயுதபிள்ளை
வண்ணார்பண்ணை

# சீனாவின் பன்னாட்டு வர்த்தக மூலோபாயத் திட்டங்களை இலங்கையிலும் பயனுறுதியாக்கத் தீர்மானம்

### தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



இந்தியப் பெருங்கடலின் மைய மாக இலங்கையை மாற்றியமைப் பதற்கு சீனாவின் பன்னாட்டு வர்த் தக மூலோபாய திட்டங்களை இலங்கையிலும் பயனுறுதியாக் கத் திட்டமிட்டுள்ளதான கருத்து தலைமை அமைச்சர் ரணில் விக் ரமசிங்கவால் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

பன்னாட்டு ஒத்துழைப்புக்கான அமைப்பின் ஏற்பாட்டில் 'ஒரே பிராந்தியம் ஒரே பாதை' என்னும் தொனிப்பொருளின் கீழாக சீனா வின் தலைநகர் பீஜிங்கில் நடை பெற்றுவரும் மாநாட்டின் 2 ஆவது அமர்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் பேதே இந்த விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது குறித்து அவர் மேலும் கருத்து ரைக்கும் போது,

"கொழும்பு, அம்பாந்தோட்டை மற் றும் திருகோணமலை ஆகிய மூன்று பிரதான துறைமுகங்களை யும் கொழும்பு மற்றும் மத்தள பன் னாட்டு வானூர்தி நிலையங்களை யும், அபிவிருத்தி செய்யும் பணி களை அரசு ஆரம்பித்துவிட்டது.

அவை அனைத்தும் உத்தேசிக்கப் பட்டுள்ள சிறப்புப் பொருளாதார மையத்துடன் வீதி வழியாகவும் தொடருந்துப் பாதை வழியாகவும் இணைக்கப்படவுள்ளன. இத்த கைய முன்முயற்சிகள் இலங் கையை கப்பல் மூலமாகவும், வானூர்திகள் மூலமாகவும் பொருள்களை இடமாற்றம் செய்வ தற்கான மையமாக மாற்றியமைக் கும். தவிர வீதிகளை நிர்மா ணித் தல், நீர்வழங்கல், மின்இணைப்பு மற்றும் மிக அத்தியாவசியமான உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் இலங்கை கூடிய அவதானம் செலுத்தியுள்ளது.

'சீனாவின் 'ஒரே பிராந்தியம் ஒரே வீதி' முயற்சியை இலங்கையும் அதே திசையில் முன்னெடுப்ப தானது எமது முயற்சிக்குக் கிடைத்த வெகுமதியாகும்" - என்றார்.

---

ADB

## இலங்கைக்கான கடனுதவித் திட்டம்

### சுயாதீன மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது ஆசிய அபிவிருத்தி வங்கி

இலங்கையின் வடக்காக தமிழர்கள் வாழ்ந்து வந்த போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த ஆரம்ப அபிவிருத்தி சார்ந்த வேலைப்பாடு கள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதன்படி 2015 ஆம் ஆண்டில் இலங்கைக் கான 10 வருட கால வரையறைக்கான 5.5 பில்லியன் கடன் திட்டம் தொடர்பான சுயா தீன மதிப்பீட்டு அறிக்கையே தற்போது வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.


அதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சமூகங்கள் சார்ந்து இது வரை மேற்கொண்ட அபிவிருத்திகள் வெற் றியளித்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் இந்தத் திட்டத்தில் பிரதானமாக குடும்பத்தலைமைத்துவங்களை ஏற் றுள்ள பெண்கள் தொடர்பிலான நலன்திட் டங்கள் அதிகமாக உள்ளடங்கியுள்ளதாக வும் ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பி ட் டுள்ளது.

---

## ஆசிய வர்த்தகச் சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை அதிகரிப்பைக் காட்டியுள்ளது

### எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கும் ஒப்பந்தங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ளது



ஆசிய வர்த்தகச் சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை நிர்ணயம் அதிகரிப்பை காட்டியுள் ளதான தகவல் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இதன்பிரகாரம் உலக கச்சா எண் ணெய்ச்சந்தையில் சமநிலையை ஏற்படுத்தும் விதமாக எண் ணெய் உற்பத்தியை குறைக்கும் ஒப்பந்தங்களை எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீடிக்க வேண்டும் என்ப தான அறிவிப்பினை சவுதி அரே பியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடு கள் வெளிப்படுத்தியுள்ள நிலை யிலே எண்ணெய் விலைகள் 3 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித் துள்ளது.

இருநாட்டு எரிசக்தி அமைச்சர்க ளுக்கும் இடையிலான சந்திப்பைத் தொடர்ந்தே கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நிர்ண யமானது 52.52 டொலர்களுக்கு அதிகரித்துள்ளதாகக் கூறப்படு கி றது.

அதேவேளை சவுதி அரேபியா வில் ஆதிக்கம் செலுத்தும் பெற் றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு எண்ணெய் விலை களை அதிகரிப்பதற்காக வெளி யீட்டு குறைப்பை ஏற்படுத்துவ தற்கு முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"பிரென்ட் மற்றும் யு.எஸ் கச்சா எண்ணெய்களின் விலை நிர்ணயமானது கடந்த இரண்டு மாதங்களில் இல்லாத அளவுக்கு 52.17 டொலராகவும் 49.23 டொலராகவும் அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது"

இது குறித்துக் கருத்து தெரிவித் துள்ள சவுதி அரேபிய எரிசக்தி அமைச்சர் காலிட் அல் பலீஹ்,

"கச்சா எண்ணெய் தொடர்பில் நடைமுறையில் உள்ள குறைப் புக்கள் போலவே அடுத்தகட்ட குறைப்புக்களும் அமையும்" - என்றார்.

சவுதி அரேபியா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் நாள் ஒன் றுக்கு 200 மில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெய் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றமை நோக்கத்தக்கது.

---

## தபால் திணைக்களத்துடன் செலிங்கோ லைவ் இணைவு

### வாடிக்கையாளர்கள் சந்தாப் பணத்தை செலுத்துவதற்கு ஏற்பாடு






ஆயுட் காப்புறுதித் துறையில் முன்னோடியகத் திகழும் செலிங்கோ லைவ் தனது காப்புறுதிதாரர்கள் இலகு வான முறையிலே சந்தாப் பணத்தை செலுத்துவதற் கான ஏற்பாடாக இலங்கை தபால் திணைக்களத்துடன் இணைந்து கொண்டுள்ள தாகத் தெரிவித்துள்ளது.

இதன்படி தபால் மா அதிபர் றோஹண அபேரத்ன மற் றும் செலிங்கோ லைவ் நிறுவனத்தின் முகாமைத்து வப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றுத் காரியமான ஆர்.ரங்கநாதன் ஆகியோ ரிடை கைச்சாத்திடப்பட்ட முக் கிய உடன்படிக்கை ஒன்றின் பிரகாரம் நாட்டிலுள்ள 653 பிரதம தபால் அலுவலகங் கள், 3ஆயிரத்து 410 உப தபால் அலுவலகங்களின் ஊடே செலிங்கோ லைவ் காப் புறுதி நிறுவனத்தின் சந்தா தாரர்கள் பணத்தை செலுத்து வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளது. இந்தப் புதிய இணைவு தொடர்பில் கருத்துரைத்த செலிங்கோ லைவ் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறை வேற்ற திகாரியுமான ஆர். ரெங்கநாதன்,

"செலிங்கோ லைவ் கம்பனிக் கும் தபால் திணைக்க ளத்திற் கும் இடையிலான உடன்பா டானது தனியார் துறைக்கும் அரசதுறைக்குமிடையிலான பங்குடைமைக்கு நல்ல தொரு உதாரணமாக விளங் குகிறது. இந்த விடயம் இரு தரப்புகளுக்குமே நன்மை பயக்கக் கூடியதாக அமைந் துள்ளது. கம்பனியை பொறுத்த மட்டிலே சந்தா சேகரிப்புக்கான செலவினம் குறைகிறது. அதே வேளை தபால் திணைக்களத் திற்கு புதியதொரு வருமான உள்ளீடு பங்கீடாக கிடைக்க வுள்ளது. அத்துடன் செலிங்கோ லை வின் ஒரு மாத சந்தா சேக ரிப்புத் தொகை மதிப்பீடு என்பது 1.3 பில்லியனுக்கும் அதிகமா னதாக காணப்படும்" - என்றார்.

---

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455


17/5/2017

www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டெண் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 26.01 | 6,718.34 | 6,692.33 |
| S&P SL20 | 21.89 | 3,863.81 | 3,841.92 |
| வியாபாரப்புரள்வு | | 1,753,049,220 | 1,173,245,180 |
| உள்நாடு- கொள்வனவு | | 620,265,150 | 409,471,584 |
| விற்பனை | | 1,522,881,020 | 690,519,810 |
| வெளிநாடு- கொள்வனவு | | 1,132,784,130 | 763,773,570 |
| விற்பனை | | 230,168,192 | 482,725,312 |

| [illegible] | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 167.10 | 5,634,527 | 945,559,938 |
| டயலொக் | DIAL.N | 12.00 | 8,940,873 | 108,184,615 |
| சேவ்ரோன் லூப்ரிக்கன் | LLUB.N | 170.00 | 520,198 | 88,828,885 |
| டோக்கியோ சீமேன் | TKYO.N | 76.70 | 1,118,143 | 85,529,691 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 2,200.00 | 25,401 | 57,109,763 |
| லயன் ஹுவரி | LION.N | 450.00 | 90,000 | 40,500,000 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 42.00 | 624,269 | 26,227,576 |
| சம்பத் வங்கி | SAMP.N | 286.00 | 87,254 | 24,696,046 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 148.00 | 146,827 | 21,655,029 |
| செலான் வங்கி | SEYB.X | 58.50 | 326,060 | 19,075,287 |




அறிவித்தல்கள்
முதலீட்டு உத்திகள் பயிற்சிப்பட்டறை
June 17 & 18

பங்குலாபம்
கேமாஸ் ஹோல்டிங்ஸ் ரூபா. 1.45 இடைக்கால
சிலோன் கொஸ்பிற்றல் ரூபா. 3.60 இறுதி

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 244 |
| விலை உழைப்பு | 12.7 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.62 |

---

## ஏற்றுமதிப் பொருள்களுக்கு சுங்கத் தீர்வையின்றிய அனுமதி

இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களை சுங்கத் தீர்வையின்றி ஐரோப்பிய சந்தைகளுக்குள் அனுமதிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைவானதாக நாளை முதல் இந்த நடவடிக்கைகள் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ். பி பிளஸ் வரிச் சலுகைக்கான இலங்கை மற்றும் மாலைதீவுக்கான குழுவின் பிரதானி துன்லாய் மார்கு சுட்டிக்காட்டியுள்ளார்.




இந்த நடைமுறைப்படுத்தல்கள் மூல மாக வர்த்தகர்கள் மட்டுமன்றி நடுத்தர வர்த்தகர்களும் பயனடையவுள்ள னர்.



# ட்ரம்ப் - எர்டகன் முக்கிய சந்திப்பு

வொஷிங்டன், மே 18
சிரிய விவகாரத்தில் இரு வேறு கருத்துக்களை உடைய நாடுகளின் அதிபர்களான அமெரிக்க அதிபர் ட்ரம்ப் துருக்கி அதிபர் எர்டகன் இருவருக்கும் இடையிலான சந்திப்பொன்று வெள்ளைமாளிகையில் நேற்று இடம்பெற்றது.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் குர்தீஸ் படைகளும் போரிடுகின்றன. அதற்கு அமெரிக்கா இராணுவ உதவிகளைச் செய்கிறது. ஆனால் குர்தீஸ் அமைப்பு தனக்கு எதிரானது என்று காலம்காலமாகத் தெரிவித்து வருகிறது துருக்கி. அண்மையில் அந்த அமைப்புக்கு எதிராகத் தாக்குதல் ஒன்றையும் நடத்தியது. இதில் 29 குர்தீஸ் சிப்பாய்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா கடும்கண்டனத்தை தெரிவித்ததுடன் குர்தீஸ் சிப்பாய்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தனது கவச வாகனங்களை அனுப்பியது. அத்துடன் நின்றுவிடாது துருக்கியின் நகர்வுகளையும் கடுமையாகக் கண்காணித்தது. குர்தீஸ் மட்டில் அமெரிக்கா, துருக்கிக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரை மந்தமாக்கும் என்று கருதப்பட்டது.

இந்தப் பின்னணியில் நடந்த இந்தச் சந்திப்பு மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டுப்போர், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர், குர்தீஸ் படைகளுக்கு எதிரான போர் தொடர்பில் இதில் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)



# ஏவுகணைச்சோதனையில் மேம்படுகிறது வடகொரியா

## நடுக்கத்தில் தென்கொரியா

சியோல், மே 18
ஏவுகணைச் சோதனையில்தாமும்உலக நாடுகளும் எதிர்பார்த்ததை விட வடகொரியா மேம்பட்டுள்ளது என்று தெரிவித்தது தென்கொரியா.

வடகொரியா கடந்த ஞாயிற்றுக்கிழமை சக்தி வாய்ந்த ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இந்த ஏவுகணை 700 கிலோ மீற்றர் பாய்ந்து செல்லும் திறனுடையது. இது போன்ற ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா எந்த நேரந்திலும், எந்த இடத்திலும் நடத்தும் என அந்த நாட்டின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டது. வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனைக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனத்தைத் தெரிவித்தது.

தற்போது, இந்தச் சோதனை பன்னாட்டு விதிமுறைகளை மீறியமற்றொரு செயல் என்று தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் தெரிவித்தார்.

"ஏவுகணைச் சோதனைகளில் எதிர்பார்த்ததை விட வடகொரியா முன்னேறி வருகிறது. இது தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தல். இந்தவிடயத்தில்உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என்று தென்கொரியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வடகொரியா தனது ஏவுகணைச் சோதனைகளைக் கைவிட்டால் அந்த நாட்டுடன் பேசுவதற்குத் தயார் என்று ஐ.நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே தெரிவித்தார். (ம)

# ரான்சம்வேர் தாக்குதலால் 3 பில்லியன் டொலர்கள் இழப்பு

வொஷிங்டன், மே 18
உலகமெங்கும் உள்ள பல்லாயிரக்கணக்கான நிறுவனங்கள் மற்றும் அரச இணையத் தளங்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட ரான்சம்வேர் இணையத் தாக்குதலால் 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அண்மையில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உலகெங்கிலும் உள்ள 150 நாடுகள் பாதிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நிறுவனங்களின் மீது இந்த இணையத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுகாதாரம், கல்வி போன்றவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்களே தாக்குதலுக்குப் பெரிதளவில் இலக்காயின. தாக்குதலை அடுத்து ஒட்டுமொத்தமாக 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியா இந்தத் தாக்குதலில் தொடர்புட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. தாக்குதலில் மிகையாகப் பாதிக்கப்பட்ட நாடு சீனா. அதற்கு அடுத்த பாதிப்பு ரஷ்யாவில் உணரப்பட்டது. இவை இரண்டும் வடகொரி யாவின் ஆதரவு நாடுகள் என்பதால் இது வடகொரியாவால் நிகழ்த்தப்பட்டி ருக்காது என்றும் ஓர் கருத்து உள்ளது. (ம)

# ஏஞ்சலா மெர்க்கலை சந்தித்தார் மக்ரோன்

பெர்லின், மே 18
ஜேர்மனி அதிபர் மெர்க்கல், பிரான்ஸ் அதிபர் மக்ரோன் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

பிரான்ஸ் அதிபர் தேர்தல் அண்மையில் இடம்பெற்றது. மக்ரோன் வெற்றிபெற்று அதிபரானார். தனது தேர்தல் பரப்புரையில் பிரான்சின் வேலையற்றவர்கள் பிரச்சினையைக் குறைப்பது தொடர்பிலும், ஐரோப்பிய ஒன்றியத்தைப் பலப்படுத்துவது தொடர்பிலும் மிகையாக வலியுறுத்தினார் மக்ரோன். இதற்கு மெர்க்கல் ஆதரவு தெரிவித்தார். வேலையற்றவர்கள் பிரச்சினையை எதிர்கொள்ள ஜேர்மனி உதவும் என்றும் அவர் உறுதியளித்தார். இத்தகைய பின்னணியிலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. மக்ரோன் பிரான்சின் அதிபராகப் பொறுப்பேற்றதும் தனது முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை ஜேர்மனிக்கே மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



பிரான்சில் இருந்து புறப்படும் முன்னர், "ஐரோப்பிய ஒன்றியதுக்கும், உலக நாடுகளுக்கும் முன்பு இருந்ததைவிட வலிமையான பிரான்ஸ் தேவைப்படுகிறது. அந்தப் புதிய பிரான்ஸ் சுதந்திரம் மற்றும் ஒற்றுமையை உரக்க பேச வேண்டும். எனது ஆட்சிக்காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தில் சீர்திருத்தம் செய்யப்படும். நம்மிடையே காணப்படும் பிளவுகள் விரைவில் சரி செய்யப்படும். நாம் நமது தேசம் மறுமலர்ச்சியை எதிர்கொள்ளும் விளிம்பில் இருக்கிறோம்" என மக்ரோன் உரையாற்றினார்.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல முடிவெடுத்துள்ளது. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் ஜேர்மனி கடும்தீவிரம்காட்டிவருகிறது. இந்த நிலையில் பிரான்சில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் மன்ரோன் ஐரோப்பிய ஒன்றியத்தை வலுப்படுத்துவது தொடர்பில் உரையாற்றியமை மிகச் சிறந்த வியூகம் எனப் பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# மெக்சிக்கோவில் செய்தியாளர் சுட்டுக் கொலை



மெக்சிக்கோ சிற்றி, மே 18
பன்னாட்டு விருதுபெற்ற செய்தியாளர் ஒருவர், மெக்சிக்கோவில் நேற்றுமுன்தினம் சுட்டுப்படு கொலை செய்யப்பட்டார்.

மெக்சிக்கோவில் போதைப் பொருள் கடத்தல்கும்பல்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. ஆயுதம் ஏந்தி செயல்படும்இந்தகும்பல்களுக்கு இடையே அடிக்கடி மோதலும் வெடிக்கின்றன. மெக்சிக்கோவின் சினலோவா மாகாணத்தில் நடைபெறும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்சம்பவங்கள் குறித்து செய்திகள் சேகரித்து வழங்கி வந்த செய்தியாளர் ஜேவியர்வால்டெஸ்நேற்று முன்தினம் சுட்டுப்படு கொலை செய்யப்பட்டார். போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குழுவொன்றே இந்தக் கொலையை அரங்கேற்றியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கொலையைக் கண்டித்து தலைநகர் மெக்சிக்கன் சிற்றி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)




மெக்சிக்கோவின் சென். ஜோர்ஜ் மிருகக் காட்சிச் சாலையில் அருகிவரும் உயிரினமான சேர்பிய வெள்ளைப் புலிக்குட்டியொன்று பிறந்துள்ளது. மிதமான தட்பவெப்ப நிலையில் உயர்ந்த பராமரிப்பு அதற்கு வழங்கப்படுகிறது. விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் உடல் ஆரோக்கியம் பராமரிக்கப்படுகிறது. (ம)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்































படங்கள் : அமரதாஸ்









# மௌனமாக அழுகின்றது நந்திக்கடல்

தி.ராஜ். சோபிதன்

நந்திக் கடல் மௌனமாக அழுது கொண்டிருக்கின்றது. அழுது அழுது அதன் கண்ணீரும் வற்றத் தொடங்கியுள்ளது. இதனால் தன்னுள் வைத்துப் பாதுகாத்த சாட்சியங்களையும் அது சிறிது சிறிதாக வெளிக்காட்டத் தொடங்கியுள்ளது. இறுதிப் போரின் எச்சங்களைக் காண முடிகின்றது.

முள்ளிவாய்க்கால், கேப்பாபிலவு, வற்றாப்பளை ஆகிய ஊர்களின் கரைகளை ஆரத் தழுவிச் செல்லும் இந்த நீரேரி, வட்டுவாகல் பாலத்தின் ஊடாக, முல்லைத்தீவுப் பெருங்கடலுடன் சங்கமிக்கின்றது.

போருக்கு முன்னர் வரையில் நந்திக்கடல், கடற்தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரங்களை ஏராளமாக அள்ளிக் கொடுத்தது. போரின் போது பலரையும் தன்னுள் விழுங்கிக் கொண்டது. இப்போது வளம் குறைந்த நீரேரியாக, தொழிலாளர்களாய் குற்றம் சொல்லும் அளவுக்கு மாறி விட்டது.

''இதில ஓரளவுக்குத்தான் தண்ணி நிக்கும். கடைசிச் சண்டைநேரத்தில முத்தையன் கட்டு குளத்தை திறந்து விட்டுட்டாங் கள். அதால வட்டுவாகல் பாலத்தின்ர மட்டத்துக்குதண்ணி நிண்டது. முள்ளிவாய்க்கால்ல இருந்து இந்த ஆத்துக்குள்ளால தான் சனம் ஆமியிட்ட வந்து சேர்ந்தது" என்று நந்திக் கடலில் இப்போதும் தொழில் செய்யும் ஒருவர் கூறினார். அவர் இறுதி வரை தனது பெயரை வெளிப்படுத்த மறுத்து விட்டார்.

### தலைவர் பிரபாகரனின் உடல்

இருபத்தியோராம் நூற்றாண்டின் மானிடப் பேரவலத்துடன், முள்ளிவாய்க்காலும், நந்திக் கடலும், உலகறிந்த பெயர்களாகி விட்டன. இறுதிப் போரின் சாட்சியாக இருக்கும் இந்தப் பெயர்களைப் பார்ப்பதற்கு சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்றனர். நந்திக் கடலோரியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடலைக் கண்டு பிடித்ததாகத் தெரிவித்து, போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது.

"அவங்கள் சொன்னது உண்மையோ அல்லது பொய்யோ தெரியாது. வட்டுவாகல் பாலத்திலிருந்து நந்திக் கடலுக்கால ஒரு நாலரைக் கிலோ மீற்றரில வாற இடத்திலதான் அவங்கள் பொடி எடுத்ததாய் சொல்லுறாங்கள். அந்த இடத்தில, முள்ளிவாய்க்காலுக்கும் கேப்பாபிலவுக்கும் இடையிலான நந்திக் கடலின்ர அகலம் ஒன்றரைக் கிலோமீற்றர் இருக்கும். தொழில் செய்யேக்க அந்த இடத்துக்கு கிட்டவாய் போவம். ஒருத்தருக்கு ஒருத்தர் சொல்ல முடியாத சோகம்தான் வரும். அது உண்மையோ இல்லையோ, அவங்க (அரசு) ஒரு கதையை அப்பிடிச் சொன்னதால, அந்த இடத்துக்கு போகேக்க மனம் இருண்டமாதிரி இருக்கும்" என்றார் கடலில் தொழில் புரியும் ஒருவர்.

### இறுதிப் போரின் கடைசித் தருணங்கள்

இறுதிப் போரின் கடைசித் தருணங்களில், இராணுவத்தினரிடம் செல்வதற்கு இருந்த ஒரே மார்க்கம் நந்திக்கடல்தான். இந்தக் கடலின் ஊடாகப் பொது மக்கள் செல்லும்போதும் இராணுவத்தினர் தாக்குதலை நடத்தினர் என்றும் ஒரே நேரத்தில் நூற்றி ஐம்பது பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டனர் என்றும் முன்னாள் போராளியான சுரேஸ் கூறுகின்றார். "நந்திக் கடலின் ஊடாகச் செல்பவர்கள்தங்கள்பிள்ளைகளைத் தலையில் சுமந்தபடிதான் செல்லவேண்டும். அப்படிச் செல்லும்போதும் இரண்டு தரப்புக்குமிடையில் சண்டை நடக்கும். இதனால பிள்ளைகளைப் பறிகொடுத்தவர்களும் இருக்கினம்" என்கிறார் அவர். இப்படிப் பலரை விழுங்கிய நந்திக்கடல் இப்போது வற்றிக் கிடக்கின்றது.

நானும் நண்பர்களும், நந்திக் கடலுக்குள் இறங்கினோம். தண்ணீர் வற்றி நீண்ட நாள்களாகியிருக்கவேண்டும். சதுப்புத் தன்மை அந்த மண்ணில் அறவே அற்றுப் போயிருந்தது. சிறிது தூரம் சென்றதுமே தொடர் கிடங்குகளைக் கண்டோம். ஷெல்கள் வீழ்ந்து வெடித்திருப்பதற்கான அடையாளங்களை அவை வெளிப்படுத்தி நின்றன. ஓர் சீர் நேர் கோட்டில் அந்தக் கிடங்குகள் இருந்தன. அதற்குச் சமாந்தரமாக சில மீற்றர் தூர இடைவெளிகளில் பல கிடங்குகளும் இருந்தன.

நந்திக்கடலுக்குள்ளாக மக்கள் இடம்பெயரும்போது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்று முன்னாள் போராளி சுரேஸ் சொன்னதுதான் நினைவுக்கு வந்தது. போரின் போது மக்கள் எவ்வளவு இடர்பட்டு இந்தப் பகுதியைக் கடந்திருப்பார்கள் என்பதை இப்போதும் நந்திக் கடலில் காணப்படும் அந்தக் கிடங்கு எச்சங்கள் சொல்லியது. நீரோட்டத்தில் அந்தப் பிரதேசம் இதுவரையிருந்தாலும் இன்னும் அழியாத தடங்களாக போர் வரலாற்றுச் சின்னங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை நாம் 'க்ளிக்' செய்தோம். தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்திய 'வோக்கி' யின் எஞ்சிய பாகங்கள் இன்னமும் உருக்குலையாமல் இருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் இன்னமும் உயிர்புடன் அங்கு இருக்கின்றன. ராதாவான் படைப்பிரிவினால், அதிரடித் தாக்குல் நடத்திய போராளிக்கு வழங்கப்பட்ட சான்றிதழே, நீர் புகமுடியாத வகையில் காப்பு செய்யப்பட்ட நிலையில் இருந்தது.

> இறுதிப் போரின் கடைசித் தருணங்களில், இராணுவத்தினரிடம் செல்வதற்கு இருந்த ஒரே மார்க்கம் நந்திக்கடல்தான். இந்தக் கடலின் ஊடாகப் பொதுமக்கள் செல்லும்போதும் இராணுவத்தினர் தாக்குதலை நடத்தினர் என்றும் ஒரே நேரத்தில் நூற்றி ஐம்பது பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டனர் என்றும் முன்னாள் போராளியான சுரேஸ் கூறுகின்றார்.



### இன அழிப்புப் போர்

இனஅழிப்புப் போரின் எச்சங்களைத் தேடிக் கொண்டிருந்த போது, நெருங்கி வந்த உயிராபத்து ஒரு நொடியில் தவிர்க்கப்பட்டது. அங்கே புதைந்திருந்த மிதிவெடிகள் இன்னமும் உயிர் வாங்குவதற்காக காத்திருந்தன. நண்பன் அதில் காலை வைத்திருப்பான். சக நண்பனின் எச்சரிக்கையில் அருந்தப்பில் தப்பினான். போர் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்தாலும், நந்திக் கடல் இன்னும் இதைப் போன்ற பல ரகசியங்களை மறைத்தே வைத்திருக்கின்றது. அது அழுது அழுது வற்றும்போதுதான் சாட்சியங்களும் வெளி வரும். நந்திக்கடலின் நீரில் விளக்கெரியும் என்பார்கள். வற்றாப்பளை அம்மனுக்கு இதிலிருந்துதான் நீர் எடுத்து விளக்கெரிப்பது என்பார்கள். அதிசயம் பொருந்திய அந்தக் கடல் நீரேரி, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எங்களுக்கு எந்த அதிசயத்தையும் காண்பிக்காமல் அமைதியாக இருந்துவிட்டது? ஒப்பாரிகளையும், ஓலங்களையும் இன்றும் தொடர்வதற்கு அனுமதித்த அது, இன்னும் வற்றிக் கொண்டேயிருக்கிறது...!

# உதாரணத்துக்கு ஒருத்தி...



தி.சோபிதன்

மே 18 என்றதும் நம் அனைவரையும் முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்ட நமது உறவுகளின் நினைவுகளே ஆட்கொள்கின்றன. அது உயிர்வலி. அந்த வலியைத் தினம் தினம் அனுபவித்துக் கொண்டிருப்பவர்களும் உள்ளனர். போர் முடிந்து இத்தனை வருடங்கள் ஆகியும் அந்தக் கொடிய நினைவுகளில் இருந்து மீள முடியாமல் பல உறவுகள் கிடந்து உழன்றுகொண்டிருக்கின்றார்கள். அதில் இறுதிப்போரின்போது குண்டடிபட்டுக் கண்முன்னே சாவடைந்தவர்கள் போக கண்முன்னே இராணுவம் கொண்டு சென்று இன்று வரை மீட்கப்படாமல் இருக்கும் தந்தை, கணவன், பிள்ளைகளது உறவுகளின் மன உளைச்சல் நீண்டதாகவும் குமுறிக் கொண்டிருக்கும் ஆறாத் துயரமாகவும் வருடத்துக்கு வருடம் பெருகிக் கொண்டே செல்கின்றது. இப்போது அது நீண்ட அறவழிப் போராட்டத்துக்கு அந்த உறவுகளை அழைத்துச் சென்றுள்ளது. அந்தப் பெண்ணுடைய நிலையும் இப்படியான ஒன்றுதான்.

### கர்ப்பிணியாகக் கைவிடப்பட்டவர்

"எனது கணவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப்பிரிவில் இருந்தவர். அதோட மொறட்டுவ பல்கலைக்கழகத்தில பொறியியல் துறையில பட்டப்படிப்புப் படிச்ச பொறியியலாளர். போரின் கடைசிக்கட்டமான மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பகுதியின் ஊடாக நானும் எனது கணவரும் சனத்தோடு சனமாக இராணுவத்திடம் தஞ்சம் புகுந்தனாங்கள். அந்த இடம் இப்பவும் என்ர கண்முன்னுக்கே நிற்குது. முள்ளிவாய்க்கால் இரட்டைப் புளியமரத்தடிப் பகுதிக்கு வரும்போது நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த

நான் எனது கணவரைவிட்டு இதுவரை பிரிந்துவிடவில்லை. புளியமரத்தடியில் ஏராளமானவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்து கொண்டிருந்தனர். அந்தப் பகுதியில் வைத்து ஆண்கள், பெண்கள் என அனைவரையும் இராணுவத்தினர் முழுமையாக நிர்வாணப்படுத்திச் சோதனையிட்டனர். தலைமுடிகளைக் கத்தியால் கிண்டினார்கள். அவ்வாறான ஒரு சித்திரவதைக்குப் பின்னர்தான் இராணுவம் எங்களை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் அனுமதித்தது.

அந்த இடத்தில் சரணடைந்த அனைவரையும் 15க்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் பவள் வாகனங்கள் தொடர்ச்சியாக ஏற்றிக்கொண்டு போய் எங்கேயோ இறக்கி விட்டு வந்து கொண்டிருந்தன.

சரணடைந்த எனது கணவரையும் என்னையும் ஒரே பவள் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். பவள் வாகனம் எல்லாரையும் மந்துவில் சந்தியில் இறக்கியது. பின்னர் மந்துவிலில் வைத்து சிவப்பு நிற பேருந்து ஒன்றில் எங்களையும் வேறு சிலரையும் ஏற்றிக்கொண்டு கிளிநொச்சி ஓமந்தைப் பகுதிக்குக் கொண்டு சென்றனர்.

கடைசியாகக் கணவரைக் கண்ட தருணம்

ஓமந்தை சோதனை சாவடிக்கு எங்களை அழைத்துச் சென்று இறக்கி விட்டனர். அங்கு வைத்து விடுதலைப்புலிகள் அமைப்பில் ஒருநாள் இருந்தால்கூட அவர்கள் தனியாக பிரிந்து வரவேண்டும். அதை விடுத்து நாங்களாகப் பிடித்தால், இந்த இடத்திலேயே சுட்டுக்கொல்லுவோம் என அங்கிருந்த இராணுவத்தினர் கடும் தொனியில் கட்டளையிட்டனர்.

### கடைசியாகக் கணவரைக் கண்ட தருணம்

எனது கணவர் அங்கிருந்த இராணுவத்திடம் சரணடையப் போவதாக என்னிடம் கூறினார். அந்த இடத்தில் பன்னாட்டைச் சேர்ந்தவர்கள் நின்றிருந்தனர். அவர்களைப் பார்த்ததும் எனக்கு ஒருவித ஆறுதலாக இருந்தது. இராணுவத்தை நம்பாவிட்டாலும் பன்னாட்டுப் பிரதிநிதிகள் நிற்பதைப்பார்த்து அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அல்லது ஐ.நா பணியாளர்களாக இருக்கலாம் என்ற நம்பிக்கையில் எனது கணவரை இராணுவத்திடம் நானும் ஒப்படைத்தேன். அன்றுதான் நான் எனது கணவரைப் பார்த்த கடைசி நாள்..."

கண்ணீர் பெருகி வரக் கட்டுப்படுத்த முடியாதவராய்க் கதறி அழுதே விட்டார் அந்தத் பெண்மணி. என்னைப் பீடித்திருந்த அவருடைய சோகத்தின் உச்சத்தால் எனது கண்களும் கலங்கித்தான் போய்விட்டன. சிறிது நேர அமைதியின்பின் அவரே தொடர்ந்தார்.

இரா்ணுவத்திடம் ஒப்படைத்த எனது கணவர் கடந்த 2009ஆம் ஆண்டு ஜீன் மாதம் 22ஆம் திகதிவரை வவுனியா றம்பக்குளம் மகளீர் பாடசாலை முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார். அங்கு எனது கணவருக்குச் சுகவீனம் ஏற்பட்டதன் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதை அறிந்துகொண்ட அவரின் தந்தை தொடர்ச்சியாகக் கணவரைப் பார்வையிட்டு வந்தார். எனது கணவரும் அவருடன் சிலரும் கடுமையான பாதுகாப்புடன் வைத்தியாசலையில் இருக்கின்றனர் என அவர்; எனக்கும் தெரியப்படுத்தினார். பலத்த பாதுகாப்புடன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த எனது கணவரை அவரின் தந்தை பல தடவைகள் பார்த்துள்ளார். வழமை போலவைத்தியசாலைக்கு எனது மாமனார் எனது கணவரை பார்க்கச் சென்ற போது அங்கு அவரும், அவரைப் பாதுகாத்த இராணுவத்தினர் பொலிசார் அனைவரும் காணாமல் போய்விட்டார்கள்.

### பலமுறை ஏமாற்றப்பட்டேன்

இதை அறிந்த நான் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முகாமுக்குச் சென்று அங்கிருந்த இராணுவத்தினரிடம் எனது கணவர் எங்கே எனக் கேட்ட போது, அவர் மேலதிக விசாரணைகளுக்காகக் கொண்டுசெல்லப்பட்டு விட்டார். உனது கணவனைப் பற்றிய தகவல் ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்கப்படும் அங்கிருந்து என்னைப் போகுமாறு கூறினார்கள். நான் எனது கணவனை இராணுவத்திடம் ஒப்படைத்த பின்னர் வவுனியா முகாம் மற்றும் வவுனியா வைத்தியசாலையில் இருக்கும்போது எனது கணவரைச் செஞ்சிலுவைச் சங்கம் தாங்கள் பொறுப்பேற்று விட்டதாகத் தெரிவித்து எனது கணவனின் பதிவிலக்கம் என்பதாய் ஒன்றை என்னிடம் தந்திருந்தனர்.

இராணுவம் இவ்வாறு கூறியதும் நான் செஞ்சிலுவைச் சங்கத்திடம் சென்று உங்கள் பதிவில் இருந்த எனது கணவர் எங்கே? எனக் கேட்டேன் அதற்கு நாங்கள் சாதாரண பதிவுக்கு மட்டுமே இருந்தோம். அவர்கள் தொடர்பில் முழுமையான அதிகாரமும் இராணுவத்திடம் தான் இருக்கின்றது என்றனர். வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் வைத்தியசாலையில் இருந்த எனது கணவர் பற்றி விசாரித்தேன். வைத்தியசாலை ஊழியர்கள் தங்களுக்கு எதுவும் தெரியாது எனக் கூறினார்கள். ஆனால் வைத்தியசாலையில் இருந்த ஒருசிலர் எனது கணவனைக் கண்டதாகத் தெரிவித்தனர். அங்கிருந்து வெளியேறிய நான் தொடர்ச்சியாக மனித உரிமைகள் ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சங்கம், ஜோசெப் முகாம் போன்ற இடங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தேன். எனது முறைப்பாட்டின் அடிப்படையில் ஜோசெப் முகாமுக்கு ஒருமாதத்துக்கு ஒருதடவை என்னை விசாரணைக்காக அழைப்பார்கள். அந்தச் சமயத்தில் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் 18ஆம் திகதி நான் எனது பிள்ளையைப் பெற்றெடுத்தேன். பிறந்த எனது குழந்தையுடனும் விசாரணைகளுக்காக அலைந்தேன். பிறந்த குழந்தையை என்னுடைய கணவ ருக்குக் காட்டவேண்டும். அவருடன் சேர்ந்து எனது பிள்ளையை வளர்த்து ஆளாக்க வேண்டும் எனத் துடித்தேன். ஆனால் எனது கணவர் தொடர்பில் விசாரணைகளே தொடர்ந்தன.



### இறப்புச் சான்றிதழை வற்புறுத்தித் திணித்தனர்

கடந்த 2012 ஆம் ஆண்டு விசாரணைகளின் முடிவாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலிருந்து எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி நானும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்குச் சென்றேன். அங்கு சென்ற என்னிடம் உன்னுடைய கணவனின் இறப்புச் சான்றிதழ் இங்கு இருக்கின்றது இதைக் கொண்டுபோ உனக்கு நஷ்ட்ட ஈடாக ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா பணம் தருகின்றோம். என வற்புறுத்தினார்கள். அவ்வாறு என்னை அங்கு வற்புருத்தியர்வர்கள் தங்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் எனக் கூறிக்கொண்டனர். அங்கு என்னை மட்டும் வற்புறுத்தவில்லை அங்கு இன்னும் சில அம்மாமாரையும் அவர்கள் வற்புறுத்தினார்கள். அங்கு காட்டப்பட்ட இறப்புப் பத்திரத்தில் எனது கணவனின் இறப்புக்குரிய காரணம் தெரிவிக்கப்படிருக்கவில்லை. அது தொடர்பில் அவர்களிடம் நான் கேட்ட போது அதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எனப் பதிலளித்தனர். இந்நிலையில் நான் இறப்பு பத்திரத்தையும் நஷ்ட்ட ஈட்டையும் பெற மறுத்தேன். எனது கணவர் இறந்துவிட்டார் என்றால் எவ்வாறு அவர் இறந்தார்? எங்கு இறந்தார்? இறந்த எனது கணவனின் சடலம் எங்கே? எனது கணவனின் சடலத்தை காட்டுங்கள்? அதை விடுத்து என்னை இறப்புப் பத்திரத்தை எடுத்துச் செல்லுமாறு வற்புறுத்தினால் பன்னாட்டு சமுகத்திடம் இது தொடர்பில் முறையிடுவேன் எனக் கூறினேன்.

### பரணகம ஆணைக்குழுவின் விசித்திர விசாரணை

அதன் பின்னர் பரணகம ஆணைக்குழு விசாரணை என்ற விசாரணை நடந்தது. அதில் விடுதலைப்புலிகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விசாரணைக்கு அதிகளவான நேர ஒதுக்கீடும், இராணுவத்திடம் நேரடியாகக் கையளித்த உறவுகள் தொடர்பிலான விசாரணைகள் குறுகிய நேரத்துக்குள்ளும் வரையறுக்கப்பட்டிருந்தன. அந்த விசாரணையில் நாங்கள் கணக்கில் எடுக்கப்படாதவர்களாக இருந்தோம். பரணகம விசாரணையாளர்கள் தொலைபேசி இலக்கம் ஒன்றை தந்திருந்தனர்.

ஆனால் அந்தத் தொலைபேசி இலக்கம் தந்த நாளிலில் இருந்து இன்றுவரை துண்டிக்கப்பட்ட நிலையில்தான் இருக்கின்றது.

இராணுவம் பிடித்துச் சென்றவர்களின் உறவுகளுடன் நானும் இணைந்து இப்போது பல வருடங்களாகியும் பிடித்துச் சென்ற அவர்களுக்கு என்ன நடந்தது? அவர்களை மீட்டுத் தருமாறு வீதிகளில் அமர்ந்திருந்து போராடி வருகின்றோம்' தனது நீண்ட இந்தக் கதையைப் பலருக்கும் பலமுறை சொல்லிவந்து கொண்டிருக்கும் இவர் பெருமூச்சு ஒன்றுடன் அதற்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டார். கணவனை மீட்டெடுக்கும் போராட்டம், பிள்ளையை வளர்த்தெடுக்கும் போராட்டம், தனது தனிப்பட்ட வாழ்க்கைப் போராட்டம் என நிறைந்த பல போராட்டங்களுக்கு மத்தியில் தொடர்ந்தும் சளைக்காத நம்பிக்கையோடு வாழ்ந்து வரும் ஆயிரம் ஆயிரம் பெண்களில் இவரும் ஒருவர் என்பது புரிந்தது.

“ எனது கணவர் அங்கிருந்த இராணுவத்திடம் சரணடையப் போகிறார் என என்னிடம் கூறினார். அந்த இடத்தில் பன்னாட்டைச் சேர்ந்தவர்கள் நின்றிருந்தனர். அவர்களைப் பார்த்ததும் எனக்கு ஒருவித ஆறுதலாக இருந்தது. இராணுவத்தை நம்பாவிட்டாலும் பன்னாட்டுப் பிரதிநிதிகள் நிற்பதைப்பார்த்து அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அல்லது ஐ.நா பணியாளர்களாக இருக்கலாம் என்ற நம்பிக்கையில் எனது கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்தேன்.

# ஒரு வாத்தியாரின் வாழ்க்கைப் பாடம்

டிலீப்



முள்ளிவாய்க்காலுக்குச் சென்று 'சுரேஸ் மாஸ்ரர்' என்று கேட்டால் அவரைத் தெரியாதவர்களே இருக்க முடியாது. என்று சொன்னார்கள். சுரேஸ் மாஸ்ரர் பற்றித் தெரிந்த இந்தக் கையளவு விசயத்தைக் கொண்டு முள்ளிவாய்க்காலுக்கு வந்தாயிற்று. அங்கிருந்த முருகன் கோவில் வீதியின் ஓரத்தில் நின்றவரிடம் 'சுரேஸ் மாஸ்ரர் வீடு எங்கனேக்க இருக்கு...?' என்று கேட்டேன். தனது மோட்டார் சைக்கிளைப் பின்தொடருமாறு அவர் கூறி. ஒரு வீட்டையும் அடையாளம் காட்டினார்.

அன்று நிலம் தெரியாத வகையில் மனிதர்கள் நிரம்பியிருந்த அந்தப் பிரதேசம் இன்று வெட்டை வெளியாகக் கிடக்கின்றது. மணல் தரைகளை ஊடுருவி சிவந்த மண்ணாலான வீதிகள் கடலை நோக்கியிருக்கின்றன. ஆங்காங்கே சில எச்சங்கள் அங்கே நடந்ததை மௌனமாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே. தகரத்தினாலான படலையைத் திறந்து கொண்டு ஒருவர் வெளியே வந்தார்.

தலையில் இடையிடையே எட்டிப் பார்க்கும் வெள்ளை முடி, அவரது வயது 45ஐத் தாண்டியிருக்க வேண்டும் என்று சொல்லியது. ஆனால் உடல் முப்ப துக்கும் குறைவான இளைஞனைப் போன்று திடகாத்திரமாக இருந்தது. வந்தவருக்கு என்னை அறிமுகப் படுத்தினேன். முகத்தில் சிரிப்புடன் அழைத்துச் சென்றார். வீட்டுக்குள் வருமாறு அழைத்தார். வீட்டுடன் இணைத்து வேயப்பட்ட பத்தியில் இருப்பது சுவாத்தியமானது என்பதைச் சொல்லி அங்கேயே அமர்ந்தும் கொண்டேன்.

## சுரேஸ் மாஸ்ரர் ஒரு தொழிலாளியும் ஆசிரியரும்...

சுரேஸ் மாஸ்ரர் என்பதாகத்தான் பலருக்கும் இவரது பெயர் தெரியும். மத்தியூ ஜூட் சுரேஸ் என்பதுதான் இவருடைய இயற்பெயர். ஆங்கிலம் மற்றும் கணிதம் கற்பித்ததால் முற்பெயர்கள் சுருக்கப்பட்டு. சுரேஸுடன் மாஸ்ரரையும் ஊரவர்கள் இணைத்து விட்டார்கள். முல்லைத்தீவு கோயில் குடியிருப்புத்தான் அவரது பூர்வீகம். சுனாமியும் போரும் அவரது வாழ்க்கையையும் புரட்டிப் போட்டிருக்கின்றது.

"துணுக்காய் வலயம், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் போருக்கு முன்னர் படிப்பிச்சனான். அதோட தொழிலுக்கும் போய் வாறனான். அப்ப கடல்தொழிலில போதுமான வருமானம் கிடைச்சுது. சேமிக்கவும் முடிஞ்சுது" என்பதாகத் தனது முன்னைய காலத்தை மீட்கத் தொடங்கினார்.

இதே காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலும் இணைந்து செயற்பட்டுள்ளார். போரின் பின்னர் மறுவாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டுள்ளார் என்பதையும் கூறினார்.

"இந்த வீட்டிலதான் (அமர்ந்திருக்கும் வீட்டுக்கு அருகில் கூரை இழந்த நிலையில் சேதாரங்களுடன் உள்ள வீட்டைக் காண்பித்து) சண்டைக்கு முன்னர் இருந்தனாங்கள். 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில இடம்பெயர்ந்தனாங்கள்" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "இறுதிக் கட்டப் போருக்குள்ள முள்ளிவாய்க்கால் மக்களும் இடம்பெயர்ந்தார்களா...?" என்று எனக்கிருந்த சந்தேகத்தைக் கேட்டேன்.

## முள்ளிவாய்க்காலில் இருந்தவர்களும் இடம்பெயந்திருந்தனர்

'வட்டுவாகல் பாலத்தின் மறுகரையையும் முல்லைத்தீவு நகரையும், நந்திக்கடலுக்கு அந்தப் பக்கத்தையும் இராணுவம் பிடிச்சாப் பிறகு அங்கயிருந்து இங்க ஷெல் அடிச்சாங்கள். 2008ஆம் ஆண்டு நவம்பர் இஞ்ச இருந்து வெளிக்கிட்டு வலைஞர்மடம் பக்கம் போனம். போய் 4மாதத்தால திரும்பி இங்கயே வந்திட்டம். இந்த இடமெல்லாம் சனம் இருந்தது. என்ர வீட்டு வளவிலேயே 17குடும்பங்கள் இருந்தவை. திரும்பி வந்து 3மாதங்கள்தான் இஞ்சயிருந்த பிறகு வெளிக்கிட வேண்டிய நிலமை. முள்ளிவாய்க்கால் முதலாம் தோட்டத்துக்கு மே 8ஆம் திகதி போனாங்கள். மே 16ஆம் திகதி நான், மனைவி, இரண்டு பிள்ளைகளும் நந்திக்கடலுக்குள்ளால போனாங்கள். நாங்கள் கடலுக்க இறங்கி கொஞ்ச நேரத்தில ரெண்டு பக்கமும் கடும் சண்டை. நந்திக் கடலுக்கையும் ஷெல் விழத் தொடங்கிட்டுது. மகனுக்குக் காயம். நானும் மனைவியும் பிரிஞ்சிட்டம். இரண்டு பேருக்கும் நடுவில இருக்கிற கடல் பிரதேசத்தில தொடர்ச்சியா ஷெல் விழத் தொடங்கிட்டுது. நான் இராணுவக் கட்டுப்பாட்டுக்கை போட்டன். மனைவி திரும்பியும் முள்ளிவாய்க்கால் போயிற்றா. மே 18ஆம் திகதி முகாமுக்குக் கொண்டு போனாங்கள். மனைவியும் மற்ற மகனும் மே 20ஆம் திகதி முகாமுக்க வந்திட்டினம். அவை வேற வலயத்துக்கு. நான் வேற வலயத்துக்கதான் முகாமில இருந்தம். 'உறவுகள் இணைப்பு' என்று ஜூன் 20ஆம் திகதிதான் நாங்கள் ஒரே குடும்பமானாங்கள்' ஒரே மூச்சில் சொல்லி முடித்தார்.

## அனைத்தையும் உருவிச் சென்றது போர்

முகாமிலிருக்கும்போது கைது செய்யப்பட்டு மறுவாழ்வுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். 2011ஆம் ஆண்டுஜூன்மாதம்மறுவாழ்வுமுடித்துவிடுவிக்கப்பட்டிருக்கின்றார். போர் முடிந்தும் முள்ளிவாய்க்கால் விடுவிக்கப்படாமையால், தனது பூர்விகப் பிரதேசமான முல்லைத்தீவு கோயில் குடியிருப்பில் குடும்பமாகத் தங்கியிருந்தார். போருக்கு முன்னர் பார்த்து வந்த ஆசிரியத் தொழிலிருந்தும் அவர் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றார் என்று தனது இன்றைய கையறு நிலையையும் அவர் இடையிடையே சொல்லிக் கொண்டே வருகின்றார். "தடுப்பால வந்த பின்னர் எங்களை இந்தச் சமூகம் கணக்கெடுக்கவில்லை. முன்னாள் போராளி என்ற காரணத்தால எந்த வேலையும் தரப் பஞ்சிப்பட்டிச்சினம். எங்களுக்கு வேலை கொடுக்கிறதால தங்களுக்கு ஏதாவது பிரச்சினை வருமோ என்று பயந்து எங்களை ஒதுக்கிச்சினம்.

கூலி வேலைக்குக்கூட முன்னாள் போராளி என்றால் வேண்டாம் என்று சொன்னாங்கள். வேலையும் இல்லை. குடும்பம் வாழ்வதற்கு வழியில்லாத நிலை. மிகுந்த கஸ்ரப்பட்டு வீதித் திருத்த வேலைக்குச் சேர்ந்தன். கிழமையில மூன்று நாள்தான் வேலை கிடைச்சது. அன்றாடச் சீவியம் நகர்வதற்குப் பெரும் பாடுபட வேண்டியிருந்தது.

## மாஸ்ரர் முகம் கொடுக்க வேண்டிருந்த எதிர்மூரண்கள்

அந்தக் காலத்தில் எதிர்பாராமல் ஒரு விசயம் நடந்தது. என்னுடன் கூடப் படித்த பெண் ஒருவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். எனது நிலையை அறிந்து எனக்கு வேலை தருவதாகக் கூறினார். தனது காணி துப்புரவு செய்யப்படுகின்றது என்றும், அங்கு காலையிலிருந்து மாலை வந்துநிற்குமாறும், ஒருநாளைக்கு 800ரூபா சம்பளம் தருவதாகவும் சொன்னார்.

காணி வேலைக்குப் பொறுப்பாக இருந்தவரிடம், என்னை அறிமுகப்படுத்தி இவருக்கு (எனக்கு) வேலைக்கான எந்தக் கட்டளையும் கொடுக்கக் கூடாது என்றும் பணித்துச் சென்றார். நான் அங்கே 17நாள்கள் வேலை செய்தேன். அங்க வேலை செய்பவர்களுக்கு மதியம் சாப்பாடு கொடுப்பார்கள். எனக்கு தனியான பார்சலை அந்தப் பெண் கொண்டு வருவார். எங்களுக்கு பொறுப்பானவரிடம் தான் அதைக் கொடுத்து விட்டுச் செல்வார். மற்ற பார்சல்களில் ஒரு மீன்துண்டு, கொஞ்சச் சோறு இருக்குமெண்டா, என்ர பார்சலில மூன்று. நான்கு மீன் துண்டுகளும் கொஞ்சம் கூடச் சோறும் இருக்கும். அந்தப் பார்சலை வாங்கிக் கொண்டு வீட்டை வருவன். வீட்டில மனிசி, இரண்டு பிள்ளைகளும் அதைச் சாப்பிடுவினம். அவைக்கு அது போதுமாக இருக்கும். அண்டைய நாளுக்கான சாப்பாடு அதுதான். ஒரு நேரச் சாப்பாட்டுடன் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தம்.

அங்க வேலை செய்து கிடைச்ச காசில உல்லு (தேங்காய் உரிப்பதற்கு பயன்படுத்துவது) வாங்கினன். நானும் மேலும் இரண்டு முன்னாள் போராளிகளும், உல்லைக் கொண்டு காலமை 7மணிக்கு முல்லைத்தீவில இருந்து பஸ்ஸில ஏறித் தேவிபுரத்துக்கு வருவம். காலையில கடையில 5ரூபாவுக்குப் பிளேன் ரீ குடிப்பம். அதுதான் காலமைச் சாப்பாடு. ஒரு இறாத்தல் பாணும், வாழைசப்பழச் சீப்பும் வாங்கிக் கொண்டு வெளிக்கிடுவம். தேங்காய் உரிக்க இருக்கோ... என்று வீதி வீதியாக் கத்துவம். ஒரு தேங்காய் உரிக்க இரண்டு ரூபாய் தருவினம். மூன்று பேரும் ஒன்றாய்த்தான் உரிப்பம். வாற காசை மூன்றாகப் பங்கிடுவம்.

தோட்டக்காரர் சிலர் மதியச் சாப்பாடும் தருவினம். அப்படியில்லாட்டி நாங்கள் கொண்டுபோற பாண்தான் எங்கட மதியச் சாப்பாடு. ஒரு நாளைக்கு எப்பிடியும் மூன்று பேரும் சேர்ந்து 3ஆயிரம் தேங்காயாவது உரிப்பம்.


தேவிபுரத்தில ஒரு தோட்டத்தில மூன்று பேரும் தேங்காய் உரிச்சுக் கொண்டிருந்தம். அப்ப ஒரு பொம்பிளைப் பிள்ளை, முகத்தை மறைச்சுக் கொண்டு நாங்க வேலைசெய்துகொண்டிருந்த தோட்டத்துக்குள்ளால தண்ணி எடுத்துக் கொண்டு போச்சுது. அதன் பின்னர் அந்தப் பிள்ளை வரேல்ல. மூன்று நாள் அந்தத் தோட்டதில தேங்காய் உரிச்சனாங்கள். பக்கத்து தோட்டத்திலையும் தேங்காய் இருந்தது.

(21 ஆம் பக்கம் பார்க்க)



# ஈழத் தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட நாள்

## மே 18



மு.ஈழத்தமிழ்மணி

இந்த நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டத்தில் ஈழத் தமிழினத்தின் இதயங்களிலிருந்து குருதி உறைந்து கண்களிலிருந்து குருதிக் கண்ணீர் வடிந்த நாளே மே 18. முள்ளிவாய்க்காலில் இறுதிப் போர் நடைபெற்று முடிந்ததும், தமிழர்களைத் தோற்கடித்ததும், விடுதலைப் புலிகளை அழித்ததும், விடுதலைப் போரை நசுக்கியதும், தமிழ் மக்கள் கதறக் கதற கொல்லப்பட்டதும், 2009 ஆம் ஆண்டின் மே மாதம் 18 ஆம் நாளே யாகும்.

துயர்களையும், இழப்புக்களையும், உறவுகளையும் ஒட்டு மொத்தமாக இழந்து, உடுத்த ஆடையுடன் உண்ண உணவின்றி, உடலில்பலமில்லாமல், உறக்கமில்லாமல், குருதி நனைந்த உடலோடு மே. 18 அன்று அந்த வீரவரலாற்று மண்ணை விட்டு வெளியேறிய நாளானது, உலகத்தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி பன்னாட்டிலும் முள்ளிவாய்க்கால் போர் என்ற குருதிச் சாட்சியத்தின் பதிவாக இடம்பெற்றதொன்று. வன்னிப் போர் என்பதற்கப்பால் முள்ளிவாய்க்கால் போர் என்ற வரலாறு பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பன்னாட்டிலும் முள்ளிவாய்க்கால் என்ற குறியீடும் பதிவாகியிருக்கின்றது.

### மனக் கண்ணில் நிழலாடும் போர் நினைவுகள்

முள்ளிவாய்க்காலில் நடந்த பயங்கரமான கொடூரத்தின் காட்சிகள் யாவும், அதனைக் கண்டு அனுபவித்தவர்களின் மனக்கண் முன்னால் அப்படியே நிழலாடிக் கொண்டிருக்கின்றன. நடைபெற்ற படுகொலைகளுக்கு நிரந்தரச் சாட்சிகளாக சூரிய சந்திரர், உலகம் உள்ளவரை நிலைபெற்றிருப்பர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, குறுகிய நிலப் பரப்புக்குள் முப்படைகளால் தமிழ் மக்கள் முடக்கி வைக்கப்பட்டு, தமிழர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு, போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு எட்டாவது ஆண்டை மே 18 ஆம் திகதி நிறைவு செய்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும், உலகத்தில் கடைசித்தமிழன் உயிருடன் இருக்கும்வரையில் நினைவு கூரப்படவுள்ள நாள் என்பதை எவராலும் மறுத்திட இயலாது.

முள்ளிவாய்க்கால் போர் என்பது இன்றைய தமிழர்களின் வாழ்வியலோடு இரண்டறக்கலந்த ஒன்று. தமிழர்களது விடுதலை உணர்வை அன்றைய மகிந்த ராஜபக்ச அரசும், முப்படைகளும் முற்றாக அழிக்கும் நோக்கில் முழுத் தமிழர்களையும் கொன்றொழித்து தமிழனது இருப்பையும் நீத்துப் போக வைத்த நாளான மே 18 ஆம் நாள், எட்டு ஆண்டுகளாகியும் விடுதலை உணர்வு என்றும் தமிழர்களிடத்தே தொடர்ந்தும் இருப்பதனால் தான், இன்றும் எம் கண்முன்னே முள்ளிவாய்க்கால் படுகொலை சாட்சியாக இருக்க பல அறவழிப் போராட்டங்கள் ஈழமண்ணில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழின விடுதலைக்காகக் கொடுக்கப்பட்ட விலைகளும், தியாகங்களும் ஏராளமானவையாகும். மே.18 ஆம் நாளன்று தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்படுகின்ற நினைவேந்தல் நிகழ்வு தமிழருக்கானது. ஒன்றுபட்ட உணர்வுகளோடு கடைப்பிடிக்க வேண்டிய நாளாகும். இது வன்னிப் போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவது தமிழ் மக்களின் அடிப்படை உரிமையாகும்.

எதிர்காலத் தமிழர்களின் தலை நிமிர்வுக்கும், உரிமைகளைப் பெறுவதற்கும் உடலையும் உயிரையும் ஈந்த வீரர்களது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவுகூர இன்றே ஆயத்தமாகுவோம். தென்னிலங்கை மக்களுக்கும், சிங்கள அரசுகளுக்கும், இனவாதிகளாக மாறி தமிழினத்தின் உரிமைகளுக்குத் தடையாக இருக்கும் இனவாத அரசியல்வாதிகளுக்கும் இனி வருகின்ற காலத்தில் தமிழர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்க வேண்டும். தமிழர்கள் மீது நடத்தப்பட்டது, இனப்படுகொலையே என்றும், போர்க்குற்றத்துக்கு விசாரணை வேண்டும் என்றவாறு தென்னிலங்கையில் பல திசைகளிலிருந்து நியாயத்தின் குரலாக ஒலிப்பதற்கு ஏதுவாக நினைவேந்தல் நிகழ்வை தவறாது கடைப்பிடித்தாக வேண்டும். ஒரு காலத்தில் சிங்கள மக்களின் இதயத்தையும் தமிழர்கள் பட்ட வலி சுட்டெரிக்கலாம்?

### போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்வது தமிழர்களது உரிமை

அதனால் தானோ என்னமோ, நாட்டின் அரசதலைவரான மைத்திரி பால சிறிசேன வன்னிப்போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவது தமிழ் மக்களின் அடிப்படை உரிமை என்பதை ஏற்றுக் கொண்டு கடந்த 2016 ஆம் ஆண்டில் அதற்கான தொரு வழியை தர்ம நியாயப்படி திறந்து விட்டார். அதே போல் விடுதலைப் போரில் போராடி மடிந்த மாவீரர் தினத்தையும் தமிழ் மக்கள் நினைவுகூரும் வாய்ப்பையும் கடந்த வருடம் ஏற்படுத்தித் தந்திருந்தார்.

இந்த இரண்டு தினங்களும் தமிழ் மக்களுக்கு உரிய நாளாகும். இந்த இரண்டு தின்ங்களையும் மகிந்த ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் நினைவுகூர முடியாதவாறு இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டது. புதிய நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் கடந்த வருடம் மே மாதம் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. புதிய அரசு பதவியேற்ற பின்னரே இந்த நிலை உருவாகியிருக்கிறது என்பதை மறுக்க முடியாதாயினும், நல்லாட்சி அரசும் சிங்களநாடு என்பதற்கேற்ப ஒரேதேசம், ஒரே நாடு என்ற கோட்பாட்டுக்கமைவாகவே செயற்பட்டு வருகின்றது. வெசாக் தினம், பௌத்த கலாசாரம் படையினரால் விழுங்கப்பட்டுள்ளது. என்பதை யாழ்ப்பாணம் முற்றவெளியில் பார்க்கக்கூடியதாக இருந்தது. அதுமட்டுமன்றி முற்றவெளியில் கோட்டையைக் கைப்பற்றி புலிக்கொடியேற்றப்பட்ட இடத்துக்கு அண்மையில் யாழ்குடாவிலும் புத்தர் துணை என்ற வாக்கியத்துடன் காணப்பட்ட அலங்கார வளைவு, இனவாதச் சிந்தனையை தமிழர்கள் மீது திட்டமிட்டு திணித்துக் கொண்டிருந்ததான ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

முள்ளிவாய்க்கால் படுகொலை நாளும், அது குறித்த உணர்வுகளும் தமிழ் மக்கள் மனதிலிருந்து அறவே நீக்கப்பட வேண்டும், அந்த உணர்விலிருந்து தமிழர்கள் மனங்கள் விலகியிருக்க வேண்டும், அத்தகைய நோக்கத்துடன் தங்களது ஆக்கிரமிப்பை நோகாதவாறு திணிப்புச் செய்வதன் மூலம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை செயலற்றுப் போக வைப்பதற்கான திட்டமிட்ட செயற்பாடே யாழ் நகரின் வெசாக் கொண்டாட்ட நிகழ்வுகள் என்பதை தமிழர்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

### பௌத்த கலாசாரத் திணிப்பு முயற்சி

ஆக்கிரமிப்பு, திணிப்பு என்ற இந்த இரண்டையுமே யாழ்ப்பாண மாநகரத்தை பௌத்த கலாசாரத்துக்குள் கொண்டு வரும் நோக்குடன் மறைமுகமாக புத்தர் சிலைகளை வைக்க படையினர் திட்டமிடலாம். பௌத்த கலாசாரங்களுக்குள் தமிழர்கள் மயங்குவதைவிடுத்து, கொடூரமுகம்கொண்ட படையினரால் கொன்றொழிக்கப்பட்ட தமிழ் மக்களை நினைவு கூருகின்ற மே 18 நாளை தமிழர்கள் மதித்துப் போற்ற வேண்டும்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது போரில் உயிரிழந்தவர்கள் விடுதலைப்புலிகளே; அந்தப் பயங்கரவாதிகளை எவரும் நினைவுகூர முடியாது; அதற்கு எந்த வகையிலும் அனுமதிக்கமுடியாது என தென்னிலங்கை மக்களுக்கு பரப்புரை செய்யப்பட்டது. மீண்டும் பயங்கரவாதம் உருவாக்குவதற்கான நிகழ்ச்சியே நினைவேந்தல் என தென்னிலங்கை இனவாதிகளால் பரப்புரை செய்யப்பட்டது.

தென்னிலங்கை அச்சு ஊடகங்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இரக்கமற்றமுறையில் பேரினவாத நிலைப்பாட்டில் நின்று விமர்சித்து வந்தன. சிங்கள மக்களும் அந்த விமர்சனங்களை நம்பியிருந்தனர்.

அரசதலைவரான மைத்திரி, போர் வெற்றி மகிழ்வைத் தந்தாலும் பெரும் தொகையினரான மக்கள் உயிரிழந்தமை வேதனைக்குரியது என்ற உண்மையை தென்னிலங்கை மக்களுக்குப் புரியும்படி தெரிவித்திருந்தார். அதற்கு முன்னர் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வே இதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது. மகிந்தவோ பயங்கரவாதிகள் கொல்லப்பட்ட நாள். முள்ளிவாய்க்கால் மே 18 என்ற பரப்புரையை தென்னிலங்கை மக்களிடம் எடுத்துக் கூறி வந்த வேளையில், நாட்டின் அரசதலைவர் மைத்திரியோ இறுதிப் போரில் பெருந்தொகையில் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏற்று பகிரங்கப்படுத்தி மகிந்தவின் வாயை அடைத்து விட்டிருந்தார்.

> முள்ளிவாய்க்காலில் நடந்த பயங்கரமான கொடூரத்தின் காட்சிகள் யாவும், அதனைக் கண்டு அனுபவித்தவர்களின் மனக்கண் முன்னால் அப்படியே நிழலாடிக் கொண்டிருக்கின்றன. நடைபெற்ற படுகொலைகளுக்கு நிரந்தரச் சாட்சிகளாக சூரிய சந்திரர், உலகம் உள்ளவரை நிலைபெற்றிருப்பர்.

சிங்களமக்கள் மத்தியில் மே 18 என்பது பயப்பீதி கலந்த நாள்; என்ற நினைப்பை மாற்றி, அந்த நாள் துன்ப துயரத்துக்குரிய நாள், இறுதிப்போரில் இந்த மண்ணில் மாண்டு போன தமது உறவுகளை நினைந்து மனமுருகி தமிழ் மக்கள் வழிபடும் நாள், என்று நினைப்பதற்குரிய நாளாக அரசதலைவர் மாற்றியமைத்ததனால்தான், நம்மவர்கள் கடந்த வருடம் போட்டிபோட்டுக்கொண்டு நினைவேந்தல் நிகழ்வைத் நடத்தியிருந்தனர்.

### நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்துகொள்ளல் தமிழர்களது கடமை

இறந்தவர்களை நினைவுகூருதல் என்பது புலிகள் இயக்கத் தலைவர்களையும் நினைவு கூர்வதாக அமைந்துவிடலாம் என்பதே 2010 தொடக்கம் 2015 வரை, குறிப்பாக மகிந்த ஆட்சியின் கணிப்பாக இருந்தது. அதுமாறி ஈழத்தமிழர்களுக்கான நெஞ்சங்களில் பதிந்துள்ள நாளான மே 18 இல் உணர்வோடு அஞ்சலி செலுத்துகின்ற நாளில் தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு முள்ளிவாய்க்கால் பிரதேசத்திலும், நிகழ்வுகள் நடைபெறுகின்ற ஏனைய இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்குபற்றி தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தல் வேண்டும்.

மே.18 நாளின் நினைவு தமிழ் மக்கள் மனங்களிலிருந்து படிப்படியாக குறைந்து வருவது கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. இந்த நிலை தொடருமானால் நாம் இந்த மண்ணுக்காய் சிந்திய குருதி, விதைக்கப்பட்ட உயிர்கள், தமிழினத்தின் வரலாறுகள், போர்ச்சிந்தனைகள், போராட்ட வரலாறுகள் யாவற்றையும் மறந்து விட்டால் போராடியதற்கான வரலாற்று நினைவுகள் தமிழ் மக்கள் மனங்களிலிருந்து நீங்கிவிடும். அந்த நிலை ஏற்பட எமது மக்கள் இடமளித்தலாகாது.

எம்மினத்தின் அடுத்த தலைமுறையினரிடம் கேட்டு எமது இனத்தின் வரலாற்றை அறிந்து புரிந்து கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படக்கூடாது என்பதை நாம் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.



# வலிகள் தந்த வலிமையாய் நிமிர்வோம்

மௌனிகன்

> “எங்கள் பயணம் உயிர்ப்பிழைப்பை நோக்கிய பறவையின் பயணம். எங்கள் பயணம் ஒரு கால வெளிச்சத்தை நோக்கிய பயணம். குருத்திலிருந்து மரம்வரைக்கும் மணல்தரைக்குள் புதைத்து விட்டல்லவா இந்தப் பயணத்தைக் கடந்து முடித்திருக்கிறோம்.”

எல்லாமே சட்டென்று முடிந்து விட்டது...! மண்பானையொன்று தளம்பிய நீரோடு தார் வீதியில்; விழுந்து விடுவதைப்போல...

விஜயதசமி அன்று கூர்வாள்போன வேகத்தில் இரண்டாய்ச் சரிந்துவிழும் வாழைபோல....

தான் ஈன்ற ஐந்து குட்டியில் ஒன்றைத் தன்னுடைய பத்தியத்துக்காய்த் தின்றுவிட்ட திருநாவுக்கரசுமாமா வீட்டுக் கறுப்பிபோல...

எல்லாமே சட்டென்று முடிந்துவிட்டது.

அது மழைமேகமில்லை. கந்தகப்புகை என்று அண்ணாவின் ஐந்தரைவயது மகனுக்கு வகைபிரித்துக்காட்ட அன்றைய வானத்தில் ஏராளமாய்க்கிடந்தன குண்டுகள் துப்பிய கரும்புகைக் கூட்டங்கள். ஒருதறப்பாள், நாலு தடிகள், மறக்காமல் எடுத்துவைத்த மண்வெட்டி, உரப்பை, பழைய சேலைகள் இவைதான் அன்றைய எங்களது வாழ்க்கை. எங்கே 50கிராம் சீனி வாங்கலாம் என அறியக்கிடைக்கிறதோ அதுவே அன்றைய மிக நல்ல செய்தியும், சிறப்புச் செய்தியும் ஆகிவிடும். ஒரு தூக்குத் தண்டனைக் கைதியின் கழுத்து தூக்குக்குள் நுழைந்திருக்கும் தருணத்தைப்போலவே அத்தனை பேரது இதயங்களும் படபடப்பாக இருந்தன.

பூமி எத்தனை பொறுமையானது...!

எத்தனை கொடுமையானது...!

## பூவிலிருந்து பழம் வரைக்கும்

பூவிலிருந்து பழம் வரைக்கும் உதிர்ந்து உதிர்ந்து விழவிழ எந்தவித மறுப்பும் காட்டாது ஏந்திக்கொண்டிருக்கின்றது. வரலாற்றில் முதன்முறையாகத் தாய் பிள்ளை யிடம் தனக்குப் பசிக்கிறதெனச் சொன்ன பரிதாபம், ஆண் மகன் ஒப்பாரி வைத்தழுத அவ லம் அந்தக் கடற்கரை மணல்வெளியில் நிகழ்ந்தேறியது. வெட்கமும் ஆற்றாமையும் குழைத்துப்பூசிய முகத்தைத் தாடியால் மறைத்துக்கொண்டு கஞ்சிக்காக வரிசையில் நின்ற சிதம்பரம் மாஸ்டரைப் பார்த்தபோது ஓவென்று கதறி அழுதுவிடவேண்டும்போலிருந்தும் அடக்கிவைத்த அழுகையை என்னால் அப்போது வெளிக்காட்டவே முடியவில்லை. கவனிக்காததுபோல் அவரைக் கடந்து செல்லவே முடிந்தது. ஊருக்கே சோறு போடமுடிந்த அந்த இறுமாப்பில்லாத மனிதனை ஒருவயிற்றுக் கஞ்சிக்காகக் காத்திருக்க வைத்த காலம் எத்தனை கொடுமையானது.

குழிவிழுந்த சிரிப்பையும், ‘சாப்பிட்டாச்சா?’ என்ற வார்த்தையையும் யாரைப்பார்த்தாலும் உவகையோடு தந்துவிட்டே அடுத்த வார்த்தை பேசும் அந்த வீரன் மண்ணப்பிய முகத்தோடு அரையுடலாய் கிடக்க வெறுமனே பார்த்துவிட்டுக் கடந்துவர மட்டும்தான் முடிந்தது. அவனுக்கான கண்ணீர் இன்னும் சிந்தப்படாமல் உயிர்க்கூட்டில் கிடந்து கொதித்துக் கொண்டுதானிருக்கின்றது. இவற்றையெல்லாம் எங்கே இறக்கிவைப்பதெனத் தெரியாமல் காலம் இழுத்த திசைக்கெல்லாம் அலைகின்றன கால்கள்.

தெருவோரக் கதவையும் சாத்திவிட்டே வீட்டுக்குள் தனது உடைமாற்றும் நண்பனின் தங்கை அம்மணமாய்க் கருகிக்கிடக்க போர்த்திவிடக்கூட ஏதுமின்றி தலையை மட்டுமே திருப்பமுடிந்த அந்த கையாலாகாத்தனத்தின் நினைவுகளை மீட்க மீட்க மனம் வெதும்பிப் புரள்கின்றது. அவள் எறிந்துபோன பெண்மை இன்றுவரையும் நண்பனைப் பைத்தியக்காரனாகவே வைத்திருக்கிறது.

## மறக்கமுடியாத சோகம்

கையிலிருக்கும் ரொட்டித்துண்டை எட்டு வருடம் கழித்துப்பிறந்த தனது குழந்தைக்கு ஊட்டிக்கொண்டிருக்கும்போது செல்பட்டுச் செத்துப்போன அந்த இருவரையும் கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருக்கும் கவி அண்ணாவின் கைகளைப்பிடித்து ஒற்றை வார்த்தை கூறமுடியாத அந்த நிமிடங்களை வெறும் சம்பவமாக எப்படி வரையறுக்கமுடியும்.

ஒவ்வொரு நாளும் காலையில் தன்னுடைய சைக்கிளில் அத்தனைபேருக்கும் சாப்பாடு எடுத்துவரும் மாலதி படையணியின் எழலரசி அக்கா. பால்போத்தலோடு கடக்கும் போதெல்லாம் என்னைக் கண்டு பாலைவிட வெள்ளையாய் சிரித்துவிட்டுப்போவாள். அன்று அவளை வெறும் சிவப்பாக வடலியில் தலைமட்டுமே காண்பேனென்று கனவிலேனும் நினைக்கவில்லை. பால்ச்சிரிப்பு பழுதின்றிக் கிடந்தாலும் வடலித்தலைதான் மனசை நிறைத்துப் பாரமரிக்கிறது. அந்தப்பால்ச்சிரிப்பை பாழாக்கியது எந்த நாட்டு எறிகணையின் எச்சம். தேடிக் கொண்டிருக்கிறது காலம். கத்தரி இப்ப காய்ச்சிருக்கும். மிளாய் பூக்கத் தொடங்கியிருக்கும். கொஞ்சநாள் நிண்டிருக்க வெண்டிக்காயை வித்திருக்கலாம் என்று தனக்குள்ளே கதைத்துக்கொண்டு மல்லாவியில் விட்டுவந்த செடிகளுக்காய் மாத்தளனில் அழுதுகொண்டிருக்கும் அப்பாவுக்கு எந்த வார்த்தைகளால் ஆறுதல் சொல்லமுடியும்.

சற்றுமுன் சிரித்தவன் சல்லடையாச் சரிந்ததும் குளித்துக்கொண்டிருந்தவள் கிணற்று வாளியை அணைத்தபடி குருதி குளித்துக்கிடப்பதும் விநாடிகளில் நிகழ்ந்துபோனது. கண் முன்னே மூன்று பிள்ளையையும் தொலைத்துவிட்டு விளையாத நிலம்போல இருக்க எந்த தாய்க்கு மனசுவரும் ‘என்னையும் கொல்லடா என்னையும் கொல்லடா’ என்று அவள் வானதிரக் கத்தியது இன்றும் என் இரவுத் தூக்கங்களைத் துவம்சம் செய்கிறது.

## அது அந்தக் காலம்

‘த பியானிஸ்ற்’ என்ற ஆங்கிலப்படத்தில் வருவதுபோன்று ஒரு துண்டு சக்கரையில் ஒன்பது தேனீர் குடித்த காலமது. ஒரு குழந்தை முதன்முதலாய் பிச்சையெடுக்கப் பழகியது. பசி என்றால் யாரிடமாவது இறைஞ்சலாம் என்ற வாழ்க்கைப் பாடத்தைத் தானாகவே கற்றுக்கொண்டது. காலம் அதற்குச் சரியாய் களமமைத்துக் கொடுத்தது. மழைபெய்து மணத்த மண்வாசனையில் என்ர வீட்டு முற்றம் மணக்குது என்று முழங்காவில் முற்றத்தை முள்ளிவாய்க்காலில் மோப்பம் பிடித்த அப்பாவின் உடலின் கொஞ்சச் சாம்பலைக் கூட ஊர்ச் சுடலையில் போடாத சாபம் எனக்குப்பின் வருகின்ற தலைமுறைக்கும் நீண்டு கிடக்கிறது.

இருந்த தேயிலையில் எங்களுக்குத் தேத்தண்ணி ஊத்தித் தந்துவிட்டுத் தாமும் குடிப்பதுபோல் வெறும் சுடுதண்ணியை அம்மாவும் அக்காவும் குடித்ததை அறிந்தவுடன் விசமாகிய தேநீரை வெளியே துப்பமுடி யாமல்முண்டிவிழுங்க முடியாமல் என்னைப்போல் எத்தனைதம்பிகளும்மகன்களும்முயன்றிருப்பர். பள்ளிக்கூடச் சேட்டை உள்ளே விடவில்லை என்பதற்காய்க் கண்டித்த வக்சலா ரீச்சர், ‘தம்பி டேய் பனையடியில அங்கர் குடுக்கிறாங்களோ...?’ என்று கேட்டபடி, வீட்டுக்குப் போட்ட சோட்டியோடு வீதியில் ஓடிப்போகும் அலங்கோலம் எப்படிச் சொல்ல.

கடைக்குப்போக வெட்கப்படும் என் தெருத் தோழி சித்தாராவை அவளது பாவாடைக்குள் மாங்காய்களை ஏந்திவரும் நிலைக்கு மாற்றியது அவள் வயிற்றிலிருந்த பசி எனும் நெருப்பு. அன்று வெட்கப்படும்போதெல்லாம் என்னருமைத் தோழி நினைத்திருப்பாளா இப்படிக்காலம்தன்னைத்துகிலுரிக்குமென்று...?

பதுங்கியிருந்த பங்கருக்குள்ளே அப்பன், மருமகள், மகன் என உயிர்க்கூடுகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, மண்மூடிக் கடந்துவரும்போது அந்தக் கணத்திலும் அம்மா ஒருதடவை நின்று நிதானமாக அந்த மண்மேட்டைப் பார்த்துக்கொண்டாளே. அந்த நேரம் என்னென்ன நினைத்திருப்பாள். அந்த வார்த்தைகளுக்கு உயிர் இருந்திருக்குமா...?

திறந்துவிட்டுவந்த கோழிகளுக்காகவும், ஆடுகள், மாடுகளுக்காகவும் வீதிவரைவந்து வழியனுப்பி மீண்டும் வீட்டைநோக்கி ஓடி முற்றத்தில் கிடந்து ஊளையிட்ட சடையன் நாய்க்காகவும் இன்று மேரிப்பெரியம்மா செபிக்கும்பொழுதுகளில் செபமாலைக் கொட்டைகளுக்குப்பதில் பாறாங்கற்கள் மனசுக்குள் உருண்டுகொண்டிருப்பதை யாரறிவர்...?

மடத்தடி வைரவருக்குப் பூப்புடுங்க அதிகாலைக் கருக்கலுக்குள் தடுமாறும் அப்பம்மா இந்தக் கடற்கரை மணல்வெளிக்குள் எந்தச்சாமிக்குப் பூப்புடுங்கி என்ன பயன் என்பதாய்ப் படுக்கை பூண்டுவிட்ட நிலையை எப்படி உரைப்பேன். இப்படி இப்படியாய் ஒவ்வொரு கனமான ராத்திரிகளையும், கறுப்புப்பூசிக்கொண்ட பகல்களையும் வார்த்தைகளாலும் மௌனங்களாலும், நிரப்பிக்கொண்ட பசிப்பொழுதுகளையும் எப்படி நாம் நினைவழிப்பது. கடந்து வந்தவைகள் வெறும் கனவுகளா என்ன.

## கடைசி நேரப் பயணம்

எங்கள் கடைசிநேரப்பயணங்கள் வெறும் ஒரு தோல்வியையோ, ஒரு வெற்றியையோ நோக்கி நகர்ந்ததென்று எவராவது நம்பினால், அவர்கள் பரிதாபத்துக்குரியவர்களே. எங்கள் இறுதியாத்திரை சத்தத்தாலும், குருதியாலும் புறப்பட்டதென்று எவராவது புலம்பினால், அவர்கள் கவலைக்குரியவர்களே. எங்கள் பயணம் உயிர்ப்பிழைப்பை நோக்கிய பறவையின் பயணம். எங்கள் பயணம் ஒரு காலவெளிச்சத்தை நோக்கிய பயணம். குருத்திலிருந்து மரம்வரைக்கும் மணல்தரைக்குள் புதைத்து விட்டல்லவா இந்தப் பயணத்தைக் கடந்து முடித்திருக்கிறோம். பார்த்தவர்களுக்கும் தெரியாது, கேட்டவர்களுக்கும் தெரியாது, உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும் பெத்தவளு(னு)க்கும் பிறந்தவளு(னு)க்கும் கட்டியவளு(னு)க்கும் சகோதரர்களுக்கும் இன்னும் பல உறவுகளுக்கும் அங்கு நிகழ்ந்த கெடூரத்தை உணரமுடியும். காலம் எத்தனை கொடுமையானது தான் தந்த வலிகளை அது இன்னும் மறக்க விடுவதாயில்லை. ஆனாலும் எங்களின் வெளிச்சத்தை நோக்கிய பயணம் நீண்டுகொண்டே இருக்கும். இவ்வளவு கொடிய வலிகளைச் சுமந்து பார்த்த எங்களுக்கு இனி மேல் எது தான் கடினமாயிருக்கும்...?

# ஒரு வாத்தியாரின்...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்ப அதையும் உரிக்க கேட்பம் என்று போய்க் கேட்டம். வாசலில வந்தவர் சொன்னார், நீங்கள் சுரேஸ் மாஸ்ரர்தானே. என்ர மனைவி உங்களிட்டப் படிச்சவா. நீங்கள் தேங்காய் உரிச்சுக் கொண்டு நிக்கிறதக் கண்டிட்டா. உங்களை இப்பிடிப் பார்க்க ஏலாமக் கிடக்கு என்றுதான் பிறகு தண்ணி அள்ளக் கூட வரேல்ல. இப்ப எங்கட தோட்டத்தில உங்களைத் தேங்காய் உரிக்க விட அவருக்கு மனம் என்ன பாடுபடும்...என்றார்.

தோங்காய் உரிச்சுக் கொண்டு திரிஞ்ச கொஞ்சக்காலத்தில பாசிக் நிறுவனம் எங்களுக்குத் தொழில் செய்யப் படகு தந்துது. அரை வாசி மானியம். அரைவாசிக் காசு நாங்கள் கட்ட வேணும்.

நானும் இன்னொருத்தரும் படகில தொழிலுக்குப் போனாங்கள். எனக்கு தொழில் பரிச்சயம் என்றதால, கொஞ்சம் உழைச்சம். அதுக்குப் பிறகு வாழ்க்கை பரவாயில்லை. இப்ப நான் சொந்தக் காலில நிக்கக் கூடிய நிலைக்கு வந்திட்டன்” என்றார் மாஸ்ரர்.

## பொருத்தமான உதவிகளே அவரவரை உயர்த்தும்

“நாங்கள் எவ்வளவு காலத்துக்கு மற்றவரின்ர கையேந்திக் கொண்டிருக்கிறது. தருகிறவர்களும் எங்களுக்கு எவ்வளவு நாளைக்குத் தான் தர முடியும். எங்கட சொந்தக் காலில் நிக்க வேண்டும். கிடைக்கிறதைக் கொண்டு எப்படி முன்னுக்கு வாறது என்றதைப் பார்க்க வேண்டும். முள்ளிவாய்க்காலில நிறையப் பேருக்கு ஆடு கொடுத்தவை. அதை வைச்சு இப்ப இங்க நிறையப் பேர் முன்னுக்கு வந்திட்டினம். ஓரளவாவது காசு பார்க்கக் கூடிய அளவுக்கு முன்னேறிற்றினம். எந்த மக்களுக்கு என்ன உதவி தேவை ? எதைக் கொடுத்தால் அவர்கள் தங்கள் இயலுமையைப் பயன்படுத்தி முன்னுக்கு வருவார்கள் என்டதைப் பார்த்து வழங்க வேணும். உதவி செய்யிறம் என்றதுக்காக பிரயோசனமில்லாததைக் கொடுத்துத் தொடர்ந்தும் கையேந்த வைக்கக் கூடாது” என்றார் சுரேஸ் மாஸ்ரர்.

அவருடைய வார்த்தையில் நீண்ட தெளிவு இருந்தது. அநாதரவாக ஊர் திரும்பியவர்கள் இப்போது சொந்தக் காலில் நிற்க எத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மாஸ்ரரின் படிப்பி னையிலிருந்து எனக்குத் தெட்டத்தெளிவாகவே புரிந்தது.



# எவரும் சந்திக்க நேரக் கூடாத முள்ளிவாய்க்கால் கொடூரம்

லோகதயாளன்

வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இனி ஒரு நிரந்தரமான, கௌரவமான இருப்பு உண்டா என்ற கேள்வியை எழுப்பியதோடு, இனம் உள்ளவரையில் ஆறாத வடுவாகவும் மாறிவிட்ட இறுதிப் போரின் இறுதி நாளான மே18 இன், 8ஆவது ஆண்டு நிறைவில், அதே துயருடன், ஆனால் அரசியல் மற்றும் இராணுவ வெறுமையுடன், மற்றுமோர் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் கூடிக் கலையும் கையறு நிலையிலேயே நிற்கின்றோம்.

இறுதிப்போர் 2006ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பித்தபோது தமது தலைமையின் மீது நூறுவீதம் நம்பிக்கைகொண்ட மக்கள், இம்முறை கூட்டுச் சதியினால் அடியோடு நசுக்கப்படும் கூட்டுச் சதியால் பின்னப்பட்ட வலைப் பொறிக்குள் அகப்பட்டுக் கொள்கின்றோம் என அப்போது அறிந்திருக்கவில்லை. அவர்களில் நானும் ஒருவனாக இருந்தமை விசித்திரம்தான்.


போர் என்றபெயரில் அனைத்து வழிகளும் மூடப்பட்டன. நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியாக ஆங்காங்கா விமானத்தாக்குதல்கள் மூலமும் செல்தாக்குதல்கள் மற்றும் ஆழ ஊடுருவும் படையடியின் தாக்குதல் மூலமும், வன்னியில் வாழ்ந்த மக்கள் தொகை குறைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. 2008ஆம் ஆண்டு ஒகஸ்ட்வரை அது தொடர்ந்தது.

இராணுவம் கிளிநொச்சியை நெருங்க நெருங்க, அவர்களது தாக்குதல்களும் அதிகரிக்கத் தொடங்கின. இலங்கை இராணுவத்துக்கு ஆலோசனை வழங்கிய பிற நாட்டு இராணுவத் தரப்புக்கள் புலிகளை இராணுவரீதியில் முழுமையாக வலுவிலக்கச் செய்வதானால் அவர்களை ஏதாவது ஒரு பகுதிக்குள் முடக்குவது குறித்து சிந்தித்தன. கடைசியில், வன்னியின் புவியியல் ரீதியில் உகந்த இடமாக முள்ளிவாய்க்கால் முதல் மாத்தளன் வரையான பகுதி இனங்காணப்பட்டது.

நான்கு மாவட்டங்களிலும் வாழ்ந்த 4 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை வெறும் 4 கிலோ மீற்றர் நீளமான நிலப்பரப்பிற்குள் தள்ளியதன் மூலம் ஏவப்படும் ஒவ்வொரு எறிகணைக்கும் 2 தொடக்கம் 5 மனித உயிர்கள் இலக்குவைக்கப்பட்டன.

அத்தோடு புலிகளையும் மக்களையும் பதுங்கு குழிகள் அமைக்க முடியாத பகுதிக்குள் முடக்க எண்ணியே மாத்தளன் முதல் முள்ளிவாய்க்கால்வரையான பிரதேசம் தேர்வு செய்யப்பட்டது.





**பாதுகாப்புக்கு பதுங்குழி அமைக்க இயலாத மணல் பிரதேசம்**

மணல்பிரதேசமான முள்ளிவாய்க்கால்பகுதியில் அங்கே எந்தவிதமான பாதுகாப்பு அகழியையும் அமைக்க முடியாது. அது மட்டுமன்றி சுமார் 4 லட்சம் மக்களுக்கான குடிநீரோ அல்லது உணவு வகைகளோ எவையுமே பெறறுக்கொள்ள முடியாது. இதனை நன்கறிந்தே படைத்தரப்பு ஒட்டுமொத்த மக்களையும் அப்பகுதிக்குள் முடக்கியது. அவ்வேளையில் வன்னியில் இயங்கிய 24 ப.நோ.கூ. சங்கங்களில் 3 சங்கங்களிடம் மட்டும் கையிருப்பில் இருந்த பொருள்கள் சில பணியாளர்களின் உதவியோடு விடுதலைப் புலிகளால் அந்தப் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கையிருப்புப் பொருள்கள் கரைந்த நிலையில் உயிரைக்காக்க கஞ்சி ஊத்தும் பணியை மேற்கொண்டனர். அந்தப் பணியில் நாமும் இணைக்கப்பட்டிருந்தோம். சுதந்திரபுரம் பகுதியிலே உணவுப் பொருள்களை வெட்டை வெளியில் இறக்கி அவசர அவசரமாக விநியோகித்துக்கொண்டிருந்த நிலையில் அங்கு கூடிய ஆயிரக்கணக்கான மக்களின் மீது இராணுவம் பொழிந்த மல்ரிபரல் மற்றும் ஆட்லறித் தாக்குதலில் 50ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். அத்தோடு, 200ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த அனுபவத்தினால் எங்கும் மக்களை அதிகமாக ஓரிடத்தில் கூட அனுமதிக்க முடியாத நிலை உருவானது. உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து கிடைத்த சொற்பப் பொருட்களே களமுனைப் போராளிகளுக்குமான உணவாக ஆகியது.

குடிதண்ணீருக்காக ஒரு சில கிணறுகளை நம்பி லட்சக்கணக்கான மக்கள் என அனைத்தும் நெருக்கடிக்குள் தள்ளப்பட நேர்ந்தது. ஏப்பிரல் மாதம் 10 ம் திகதியோடு இராணுவத்தினருக்கும் மக்களுக்குமான இடைவெளி வெறும் 400மீற்றராக பல இடங்களில் மாறியது. இதனால் இதற்கு இடையிலேயே புலிகளும் தமது நடவடிக்கைகளில் இறங் கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். களத்தில் நின்ற போராளிகளுக்கு ஒரு வேளை உணவு மட்டுமே கிட்டியது.

**போராளிகளின் உணவைக் கேட்டு கையேந்திய அவலம்**

போராளிகளுக்கான உணவு வண்டிகளின் முன்னே அத்தனை பொதுமக்களுக்கு பசித்த வயிற்றுக்கு உணவு வேண்டிக் கைநீட்டும் நிலை. களத்திலே போராடிய போராளிகள் தமது உணவையும் பொது மக்களுக்குக் கொடுத்து தாம் பசியோடு போராட வேண்டிய அவலமும் நிகழ்ந்தது. இரட்டை வாய்க்கால் பகுதியில் வைத்து கையிருப்பில் இருந்த பால்மாப் பைக்கற்றுக்களை குழந்தைகளை ஏந்தியிருந்த தாய்மாருக்கு விநியோகித்த வேளை அந்தப்பகுதியில் எறிகணை மழை பொலிகின்றது. அனைவரும் சிதறி ஓடுகின்றனர். சில நிமிடங்களில் சற்று ஓய்கின்றது. அந்த இடைவெளியில் அங்கே விரைந்தால் நெஞ்சு வெடிக்கின்றது. அங்கே தாய்மார் தமது பச்சிளம்பாலகரை பால்மாவிற்கு ஏந்தி நின்ற கையோடு சாய்க்கப்பட்டிருந்தனர். அதில் 30ற்கும் மேற்பட்ட தாய்மாரின் உயிரிழக்க 40ற்கும் மேற்பட்ட பிஞ்சுகள் பிய்த்தெறியப்பட்டிருந்தனர். படுகாயமடைந்த அனைவரும் மாத்தளன் பாடசாலையில் இயங்கிய வைத்தியசாலைக்கு அள்ளி ஏற்றப்பட்டனர்.

இங்கே உண்மையில் காயமடைந்தவர்களை மீட்கும் பணிக்கு உதவுவதற்கும் போராளிகளே அதிக அளவில் தோள்கொடுத்தனர். இவ்வாறு நாள் ஒன்றிற்கு 5 தொடக்கம் 15 உயிர்கள் போன நிலமை மாறி தினமும் 30 முதல் 60 உயிர்கள் போகும் நிலமை ஏற்பட்டு விட்டது.

ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியுடன் எங்கு எத்தனை உயிர்கள் இழக்கப்படுகின்றன. என்ற சரியான தகவலைக்கூடப் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டது. சாவடைவோரின் உடலங்களில் சிதைவடையாது இருப்பவை மட்டுமே வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. சிதைந்தவை அந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்படும் நிலையே நிலவியது.

இப்போது சுமார் 5 கிலோ மீற்றர் நீலமும் 500 மீற்றர் அகலமும் கொண்ட நிலப்பரப்பிற்குள் முடக்கப்படுகின்றோம். இனி நிகழப்போகும் இடர் அனைவருக்குமே புரிகின்றது. ஏப்ரல் மாதம் 14ம் திகதியோடு இந்த நிலை இறுகிவிட்டது. அன்றும் ஓர் கப்பல் மாத்தளன் இறங்குதுறையை அடைகின்றது. அது சொற்ப உணவுப் பொருட்களாக அரிய , மா , சீனி , பருப்பு , என்பவற்றுடன் இம்முறை உருளைக்கிழங்கும் , பூசணிக்காய் , கத்தரிக்காய் போன்ற மரக்கறிகளும் எடுத்து வரப்பட்டன.

நான்கு நாள் பயண இடைவெளியில் கப்பலின் மேல் தட்டில் இருந்த மரக்கறிகள் அனைத்தும் வெய்யிலின் கொடுமையால் முற்றாக பழுதடைந்தே காணப்பட்டன. ஏனைய பொருட்கள் இறக்கப்பட்டு பிரிக்கப்பட்டு மாத்தளன் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் அடுக்கப்பட்டு உடனடியாகவே விநியோகம் இடம்பெறுகின்றது. அதேபோன்று இரட்டை வாய்க்கால் முள்ளிவாய்க்கால் பிரதேசத்திற்கு உரியவையும் நகர்த்தப்படுகின்றன.

இருப்பினும் இந்தச் சிறிய இடைவெளியைக்கூட விட்டுவைக்காதவிமானப்படை விமானங்கள் ஒருபுறம் குண்டுவீச்சு நடத்த பதிலுக்கு பக்க இசையாக இராணுவமும் தாக்குதல் நடாத்துகின்றது. பொருட்களைவேகமாகவிநியோகிக்கும் பணியை புலிகளே கண்காணித்தனர். மாத்தளன் ஆலய மண்டபத்தில், விநியோகம் செய்யப்பட்ட இடத்தில் 15ம் திகதி நானும் நிற்கின்றேன். அங்கே அதிக மக்களை கூடவிடாது விநியோகம் வேகப்படுத்தப்படுகின்றது. சரியாக பகல் 11.மணி.. முதலில் இரண்டு எறிகணைகள் ஏவப்பட அவை எமக்கு அருகில் வீழ்ந்து வெடிக்கின்றன. அதனால் பொருட்களைப் பெறநின்ற மக்கள் சிதறி ஓடுகின்றனர்.நாமும் பொருள்களுக்கு நடுவில் நிலை எடுத்துக் கொள்கின்றோம்.

**திட்டமிட்டு படையினர்
நிகழ்த்திய மனித வேட்டை**

தொடர்ந்து மேலும் எறிகணைகள் ஏவப்படுகின்றன. ஒரே புகை மயமாகின்றது. அவலக்குரல்கள் மட்டும் ஒலிக்கின்றன. எவர் சாவடைந்தார் எவர் உயிரோடு என்பதே தெரியாத நிலமை நிலமை .சற்று ஓய்ந்த வேலையில் மண்டபத்தின் அருகில் பாதுகாப்புத் தேடிய சுமார் 15 பேருடன் நானும் வெளியேற முயற்சிக்கின்றேன். அப்போது அருகில் நின்றவர் எனது ஆடையைக் காண்பித்து இரத்தம் வடிகின்றது என்கின்றார். எனது உடலில் காயம் ஏதும் இல்லை. நாம் நிலையெடுத்த இடத்தைப் பார்க்கின்றோம். அங்கே ஓர் முதியவர் இரத்த வெள்ளத்தில் கிடக்கின்றார். அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்து வெளியே திரும்பினால் எங்குமே மரண ஓலம். ஆம் 6 பேர் உயிரிழக்க 13 பேர் காயமடைந்திருந்தனர். அத்தனை பேருமே நிவாரணப்பொருளை எதிர் பார்த்து நின்றவர்கள்.

பனை வடலிகள் அதிகம் என்ற மறைப்பும், சில பதிந்த மரங்களின் நிழல் மட்டுமே கொண்ட மணல் பிரதேசம். ஆனந்தபுரம் சமரிலே விழிப்புண் அடைந்த எனது உடன் பிறப்பு காயப்பட்டு அத்தகைய பராமரிப்பு நிலையத்தில் பராமரிப்பில் இருந்த சமயம் எனது அந்தச் சகோதனைச் சந்திக்கின்றேன். ஆயிரக்கணக்கில் மக்கள் மடிந்து கொண்டிருக்கின்றார்கள். எனது உடன் பிறப்பு காயத்துடன் தப்பிப் பிழைக்க முடிந்ததை எண்ணி மனதைத் தேற்றுகின்றேன்.

நீங்கள் சொல்லுறமாதிரி இல்லை நிலமை. இந்தியாவோ உலக நாடுகள் எதுவுமே எங்கட சனத்தை காப்பாத்த மாட்டாங்கள். நாங்கள் சாகிறது பிரச்சினையில்லை. ஆனால் பாவம் சனம் படுற பாட்டைத்தான் பாக்கேலாமல் கிடக்குது என்று மனதுடைந்து கூறுகிறார் எனது சகோதரன்.

அன்று எனக்குத் தெரியாது. அதுதான் நான் எனது மூத்த உடன்பிறப்பை இறுதியாக காணும் நாள் அதுதான் என்று மீண்டும் மாத்தளன் பகுதிக்குத் திரும்புகின்றேன். மாத்தளன் பகுதியில் ஏப்ரல் மாதம் அதிகாலை 5 மணிக்கு வைத்தியசாலையின் நேர் எதிரே 100மீற்றருக்குள் இருந்த மண் அணையை இராணுவம் வந்து கைப்பற்றுகின்றது. அங்கே நின்ற போராளிகளினால் பதில் தாக்குதல் நடாத்த முடியவில்லை. ஏனெனில் மிக அருகில் ஆயிரக்கணக்கான மக்கள். அதனால் செய்வதறியாது திணறுகின்றனர். இருப்பினும் மிகவேகமாக வந்த இராணுவத்தினர் மீது ஒரு சில எதிர்தாக்குதல் நடாத்தும்போது இராணுவம் சரமாரியாக தாக்குகின்றது. பல மக்கள் உயிரிழந்து வீழ்கின்றனர். அந்த இடத்தில் நின்ற புலிகளோ நாம் மக்கள் மத்தியில் நின்று இராணுவத்தைத் தாக்க முடியாது. அதனால் இங்கிருந்து விலகிச் செல்லப்போகின்றோம். நீங்கள் எங்காவது வேகமாக செல்லுங்கள் எனக் கூறுகின்றனர்.

இதன் பின்னர் 21ம் திகதியுடன் மாத்தளன் முதல் இரட்டை வாய்க்காலின் ஒருபகுதிவரை இராணுவத்தின் வசம் வீழ்கின்றது. இங்கே மாத்தளன் வைத்தியசாலையாக இயங்கிய பாடசாலைமுதல் அனைத்தின் மீதும் இராணுவம் சரமாரியாக தாக்குகின்றது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சாவடைய மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைய போராளிகளும் சிலரும் முள்ளிவாய்க்கால் நோக்கி நகர. இப்பகுதியில் இருந்த மக்களை இராணுவம் புதுக்குடியிருப்பு செந்தூரன் சிலையடிச் சந்தி நோக்கி இட்டுச் செல்கின்றது. அன்றைய தினத்தில் மட்டும் சுமார் 70 ஆயிரம் மக்கள் இராணுவப் பிடிக்குள் அகப்பட்டுக் கொள்கின்றனர்.





# திடம் தந்த இடம் அது...

எந்தத் தேசமும் ஏன் என்று கேட்கவில்லை
அந்தக் கடவுளுக்கும் எட்டவில்லை
எங்கள் குரல் நந்திக்கடற்கரை
கொலைக்களம் ஆனது.

பசியும் பஞ்சமும் பயமும் நிறைந்த
நரகமாக நகர்ந்தன நாட்கள்.
திசையெல்லாம் கொடூரத்தின் காட்சிகள்
காற்றிலே சாவின் வாசனை
மழையாய்ப் பொழியும் குண்டுகளில்
சிதறிச் சிதைந்தன உறவுகள்

கிளறப்பட்ட சுடுமணலில்
தாயே தன் மகவைபுதைத்தாள்
தந்தை தன் மகனை நட்டான்
கணவனை இழுத்து வந்து
புதைத்தாள் காதல் மனைவி...
பிள்ளையை. தாயைப் பிரிந்து அரற்றி
பித்தேறி கிடந்தது மனம்..

எங்கள் நிலை காண
கடற்காக்கைகளும் இருக்கவில்லை..
இதை அமைதியின் போரென அறிவித்தது அரசு

உலகெங்கும் தமிழர் வீரத்தை
எழுதியோர் நஞ்சு தின்றனர்
சிலர் நம்பிச் சரணடைந்தனர்
குழந்தைகள் புதைந்த குழிமேட்டில்
வெற்றியின் கொடியை நட்டார்கள்
ஆம் இது அழிந்த நிலமொன்றின்
நினைவேந்தல்

மாண்டவர்போக மீண்ட எம்
மனங்களில் மாறாக்காயம்
கனவுகளில் இப்போதும் கந்தக வாசனை.

வறண்ட எம் பூமியில் மீண்டும்
வாராதோ பசுமை
அக்கினி உண்டு அழிந்த காடுகள் தளிர்ப்பது போல
மீண்டும் தளைக்காதோ தமிழ்
தமிழைப் படித்தோம்
தமிழனைப் படித்தோம்
எதிரியைப் படித்தோம்
இனி நிமிர்வோம் திடமாய்...

வேலணையூர் தாஸ்








# வலிகளைப் பகிர்வது மனதுக்கு மருந்திடும்

நிர்த்தேவ்

போர் நிறைவுற்று எட்டு ஆண்டுகள் கடந்தோடிவிட்டன ஆனாலும் இன்னமும் அந்தப் போரின் வடுக்களோடு பலர் இன்னமும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றனர். அவர்களின் வலிமிகுந்த வாழ்வை நம்முள் எத்தனைபேர் அறிந்துகொண்டுள்ளோம்? அல்லது எத்தனைபேர் அவர்களுக்கு ஆறுதலாக இருக்கின்றோம்?. இன்னும் சிலர் முள்ளிவாய்க்கால் நினைவுகளைக் கதைப்பதையோ பகிர்வதையோ அல்லது படைப்புகளாக்குவதையோ விரும்பாதவர்களாகவே உள்ளனர்.

### நான் கண்ட அந்தச் சிறுவன்

இன்று நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் போலியான அமைதிச்சூழலை வைத்துக்கொண்டு முள்ளிவாய்க்கால் துயரை மறைக்கவே முனைகின்றனர். போர் நிறைவுற்று சில ஆண்டுகளின் பின்னர் அதற்குள் அகப்பட்டு மீண்டிருந்த ஒரு சிறுவனைச் சந்திக்கக் கிடைத்தது. அவனது பாரத்தை இறக்கி வைப்பதற்கு நான் ஏதுவாயிருந்தேன். இப்போது அவன் சற்று அமைதியடைந்திருக்கலாம்...

அது ஒரு வாரநாள். சிறுவர்கள் அனைவரும் பாடசாலை சென்றுவிட்டார்கள். ஆனால் இன்னமும் பாடசாலைக்குச் சென்றிருக்காததாலேயே அந்தச் சிறுவன் எனது கண்களுக்குள்ளாய் அகப்பட்டிருந்தான். வீட்டுடன்கூடிய தனது பெரியம்மாவின் சிறு கடைக்குக் காவலாக அவன் தனிமையில் இருந்தான்.

கையில் ஒரு துடுப்பாட்ட மட்டையும் பந்தும் வைத்திருந்தான். அவனுக்கு 13வயதாகிவிட்டதாகவும் தனது பெரியம்மா சந்தைக்குச் சென்றுவிட்டதால், இன்று தனக்குக் கடையைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு என்றும் கூறினான். வழமையாகப் பாடசாலை செல்பவன் என்றும் சில சமயங்களில் மட்டும் இவ்வாறு கடையில் நிற்கின்றான் என்றும் புரிந்தது. ஆனாலும் போரின் கோரத் தாண்டவத்தால் தனது குடும்பத்தை இழந்து இன்று பெரியம்மாவின் பராமரிப்பில் வாழ்கின்றான். என்பது நான் அவனுடன் உரையாடி ஓய்ந்த பின் வெளிப்படுத்திவிட புரிந்தது.

### அவனை ஆட்கொண்ட வலிகள்

முள்ளிவாய்க்கால்வரை சென்றுவந்த அவனது பயணத்தின் வடுக்கள் அவன் மனதை ஆட்கொண்டிருந்தன. எவரிடமாவது அதனை கொட்டிவிடவேண்டுமென்ற ஏக்கமும் அவனது கண்ணில் தென்பட்டது. அவனது அனுபவத்தின் ரணங்களைத் தாங்கிக்கொள்ள நானும் என்னைத் தயார்ப்படுத்திக்கொண்டேன்.

அவனும் தாய் தந்தையும், இரண்டு சகோதரிகளும் முல்லைத்தீவில் வாழ்ந்து வந்துள்ளனர். போர் ஆரம்பிக்கும் பொழுது அவனது ஒரு அக்கா போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளார். எப்போதாவது வீட்டுக்கு வந்து குடும்பத்தவர்களைச் சந்தித்துப் போவது வழக்கமாயிருந்தது. சிறிது நாள்களில் அவர் வீரச்சாவெய்திய செய்தியும் அறிவிக்கப்பட்டது. அந்தச் செய்தி அவன் குடும்பத்தையே சோகத்தில் ஆழ்த்தியிருக்கின்றது. இவன் தனது இரண்டு சகோதரிகளிலும் அளவுகடந்த அன்பு வைத்திருக்கின்றான் என்பதை அவன் அழுதபடியே தன்னுடைய அனுபவத்தைச் சொன்னதிலிருந்தே புரிந்து கொரண்டேன்.

சிறிது நேரம் மௌனித்துப் பின்னர் மீண்டும் தொடர்ந்தான். கொஞ்ச நாட்களுக்குள் எத்தனையோ தடவைகள் அவர்கள் இடம்பெயர்ந்து பல இடங்களில் கொட்டில் போட்டும், தறப்பாள் போட்டும் இருந்த அனுபவம் அவனுக்கு நெருக்கீடுகளைக் கொடுத்திருக்கின்றது. கொஞ்சம் கொஞ்சமாக வீட்டுச் சாமான்களைத் தொலைத்து இறுதியில் அவர்கள் மட்டும் நகரத்தொடங்கியுள்ளனர். கடுமையான எறிகணைத் தாக்குதல்களின் நடுவில் பதுங்குக் குழிக்குள் பதுங்கியதையும் பின்பு எழுந்து வேறிடத்துக்கு ஓடியதையும் தன்னுடைய மனதுள் ஆழப் புதைத்துக்கொண்ட அச்ச உணர்வாக அவன் பிரதிபலித்தான்.

அன்று அவனது தந்தையும் அக்காவும் சாப்பிட ஏதாவது கிடைக்குமா...? என்று பார்ப்பதற்கு தாயையும் தன்னையும் விட்டு நகர்ந்த சில மணிநேரத்தின்பின் தாயும் தந்தையும் நிலத்தில் புரண்டு அழுதபொழுது ஏதோ நடந்துவிட்டதென்பதை அவனால் உணரமுடிந்திருக்கின்றது. தனது அக்காவை அப்பாவோடு காணாதது அவனுக்கு நிலமையை உணர்த்தியிருக்கின்றது.

அதன் பின்னர் இவனுடைய தந்தை தன்னையோ தனது மிகுதிக் குடும்பத்தையோ பராமரிக்கவோ பாதுகாக்கவோ முடியாதவராய் பிதற்றிக்கொண்டு திரிய ஆரம்பித்துள்ளார். இவ்வளவு அனுபவங்களையும் சொன்னபின் அருகிலிருந்த அத்திபாரக் கட்டில் போய் அமர்ந்தான். நானும் அவனருகில் அமர்ந்தேன். அவனது இயல்பான முகத்தை என்னால் காணமுடியவில்லை. அவர்களின் பாசம் அவனை ஆழமாகப் பாதித்திருப்பதை உணர்ந்தேன். அவன் சொல்வதை ஒத்துணர்வோடு கேட்பதற்கு மீண்டும் என்னைத் திடப்படுத்தினேன். உணவுத்தட்டுப்பாடு அவர்களை வாட்டியது தந்தையும் அதனை உணர்ந்து செயற்பட முடியாத மனநோயாளியாகிவிட்டார். மிஞ்சிய அவனது குடும்பத்தில் அவனுக்குமட்டும் இருந்துவிட்டு எப்போதாவது உணவு கிடைத்தது. எதிர்பாராத விதமாக மீண்டும் அவனை இன்னோர் சோகம் தாக்கியது. அது அவனது தந்தையின் இழப்பு. தந்தை அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை அடிக்கடி விலகித் தனது கால்போன திசைக்கு அலைந்துதிரிய ஆரம்பித்தார். அவரைத்தேடிப் பிடித்துவருவதும் அவரை கண்காணிப்பதுமே இவளது கடமையாவிருந்தது. அவ்வாறு விலகிச் சென்றவரை இறுதியாக அவர்களது உறவினர்கள் இறந்த உடலாகக் கொண்டுவந்தனர். பசியின் கொடுமையாலும் மனநோயாலும் கறையான்புற்று மண்ணை எடுத்து உண்டிருக்கலாம் என்று உறவினர்கள் கூறியுள்ளனர் (வாயில் நிறைய மண் இருந்துள்ளது).

### இழப்புக்களால் இப்போதும் அவன் தனிமையில்

இப்போது அவனும் தாயும் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டனர். உறவினர்களின் உதவியோடு இருவரும் நகர்ந்தனர்.

இறுதிநாட்கள் நெருங்கிக்கொண்டிருந்தவேளை சரமாரியான எறிகணைத்தாக்குதல்கள் எங்கும் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. பல குருதி தோய்ந்த உடல்கள் அவனது பறிபோன தந்தை, அக்காக்களை அடிக்கடி ஞாபகப்படுத்தி மனதில் வடுக்களை ஏற்படுத்தியுள்ளன. உறவினனர்களோடு தாயும் தானும் நடைபிணங்களாக செய்வதறியாது அலைந்த நாட்கள் அவனது பகிர்வில் போது ஏற்பட்ட தடுமாற்றத்தில் புரிந்தது. அவனிடமிருந்து வார்த்தைகள்வர சற்று நேரமெடுத்துக்கொண்டன. பின் மெல்லத் தான் தேக்கிவைத்த ஆற்றமுடியாத வேதனையை பகிரத் தொடங்கினான்.

முள்ளிவாய்க்கால் முள்வேலிக்குள் அவன் தன்னுடைய தாயோடு கழித்த நாள்கள் தான் அவை. தாய் இவனையாவது காப்பாற்றிவிடவேண்டும் என்பதில் கவனமாய் இருந்துள்ளார். எப்பொழுதும் தனது கைக்குள் அவனை வைத்திருந்துள்ளார். எறிகணைகள் தொடர்ந்து வீழ்ந்து வெடித்துக்கொண்டிருக்க தாய் இவனை இழுத்து ஒரு பதுங்குக் குழிக்குள் தள்ளிவிட்டார். அதற்குள் இடமில்லாததால் தான் பதுங்கு குழியின் விளிம்பிலேயே இருந்துகொண்டார். வெடியோசை ஓய்ந்தபோது வெளியே எட்டிப்பார்த்தவன் அதிர்ந்துபோனான். இறுதிவரை தன்னைப் பாதுகாக்கப் போராடிய தாய் குருதிவெள்ளத்தில் கிடந்தகோலம் அவனை வாழ்வின் விரக்தி நிலைக்குக் கொண்டுபோயிருக்கின்றது. அவனது உறவினர்கள் அவனை மீட்டுவந்து தற்பொழுது அவனது பெரியம்மாவுடன் இணைத்துவிட்டுள்ளனர். அவனது இந்த அனுபவம் என் வாழ்வில் மறக்கமுடியர்த ஒன்றாகவே இருந்தது. இப்போது அவனுடைய மனப்பாரம் சற்றே குறைந்திருப்பதையும் நான் உணர்கின்றேன்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய வலிகளை உணரமுடிந்தவர்களுக்கு உணர்த்துவது அவசியம். இந்தப் பொறுப்பு எனக்குமட்டுமுரியதல்ல உங்கள் அனைவருமான கடமையும்கூட.



## மனோகணேசனுடன்...

சிங்களவரின் நல்லெண்ணத்தால் நீங்கள் வாழ்கிறீர்கள். எல்லோரும் சிங்களம் படிக்க வேண்டும். மகாவம்சத்தில் பொய்களும் உள்ளன. சகவாழ்வு அமைச்சைச் சிங்களவருக்கு கொடுக்கவேண்டும்.

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசாரதேரர். தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோகணேசனிடம் கூறியுள்ளார்.

மனோ கணேசனது அமைச்சுக்கு நேற்று நேரில் சென்றே. ஞானசாரதேரர் இந்த முழக்கங்களைச் செய்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரரை நேற்றுக் காலை 10 மணிக்கு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு அலுவலகத்தில் சந்திக்க என்னால் நேரம் ஒதுக்கி வழங்கப்பட்டது. எனினும் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக மாநாட்டில் ஞானசார தேரர் என்னைக் கடும் விமர்சனம் செய்து, இந்த சகவாழ்வு அமைச்சை ஒரு சிங்கள அமைச்சருக்குக் கொடுக்கவேண்டும் எனக் கூறியிருந்தார். இதையடுத்து ஞானசாரதேரருடனான சந்திப்பை நிறுத்தியிருந்தேன். இந்த அமைச்சைத் தமிழர் வகிக்கக்கூடாது எனக் கூறும் நிலையில், சந்திப்பில் பயன் இருக்கப் போவதில்லை என்ற செய்தி என் சார்பில் ஞானசார தேரருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்தே ஞானசார தேரர், தனது ஆதரவுப் பிக்குகளையும் அழைத்துக்கொண்டு, தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சுக்கு நேற்றும் முற்பகல் 10 மணிக்கு வந்தார். இது எனக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து அவரைச் சந்தித்தேன். இதன் போது ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களின்போது, ஞானசார தேரர் கூறியவைகளை அமைதியாகச் செவிமடுத்த பின்னர், நான் கூறுவதையும் செவிமடுக்கும்படி அவரிடம் கூறினேன்.

"இது சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க நாடு. எல்லோரும் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள். சிங்களவரும் இந்தியாவிலிருந்து வந்தோர் என்றே மாகாவம்சம் கூறுகிறது. விஜய இளவரசன் இந்தியாவில் இருந்து இந்த நாட்டுக்கு வந்து இறங்கி, ஆதிவாசி குவேனியை மணந்து, பின் அவளை விட்டுவிட்டு, தென்னிந்திய பாண்டிய நாட்டில் இருந்து, இளவரசியை அழைத்து வந்து, மணந்து கொண்ட பிறகே சிங்கள இனம் உருவாகியது என்றே மகாவம்சத்தில் நான் படித்துள்ளேன்.

எங்கள் அமைச்சுப் பொறுப்புகளைத் தீர்மானிப்பது அரச தலைவர். நாங்கள் மக்கள் ஆணையைப் பெற்றே ஆட்சிக்கு வந்துள்ளோம். சிங்களவர் மத்தியில் நான் பிறந்து வாழ்கிறேன். எனக்குச் சிங்கள மக்களைப் பற்றி எவரும் எடுத்துக் கூற அவசியமில்லை. மும்மொழிச் சட்டமும், கொள்கையும் இந்தநாட்டு மொழிச்சட்டம், மொழிக்கொள்கை; சிங்களமும், தமிழும் ஆட்சி மொழிகள் - தேசிய மொழிகள், ஆங்கிலம் இணைப்பு மொழி; அதுதான் அரசமைப்புச் சட்டம். அதை எவரும் நினைத்த மாதிரி மாற்றமுடியாது" என்று கூறினேன்.

இறுதியில் இந்த நாட்டில், சிங்கள பௌத்த மற்றும் தமிழ் இந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் விவரங்களைப் பட்டியலிட்டு என்னிடம் தருவதாகவும், அவை தொடர்பில் நடவடிக்கை எடுத்து, சகவாழ்வை உறுதி செய்யுமாறு கூறி விட்டு, ஞானசார தேரர், தனது ஆதரவு பிக்குகளையும் அழைத்துக்கொண்டு வெளியேறினார் - என்று பத்திரிகை அறிக்கையில் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

---


### மரண அறிவித்தல்



**சின்னத்துரை நடனசிவராசா**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கைவசிப்பிடமாகவும்கொண்டசின்னத்துரை நடனசிவராசா 16.05.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு — தகவல்: குடும்பத்தினர்

---

### மரண அறிவித்தல்

**திருமதி புஸ்பராணி இராசையா**



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், இல.94/1, ஜெயந்திநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி இராசையா (15.05.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் இரஜனி மாலா காலஞ்சென்ற உமாகாந்தன் மற்றும் ஜெயகாந்தன், சிறீகாந்தன், இராஜகாந்தன், லதா ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற ஜோகேஸ்வரன் மற்றும் இராஜேந்திரம், அருணன், கவிதா, நகுலேஸ்வரி, பிரான்ஸ்வாஸ் ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற சிவநாதப்பிள்ளை, செல்வராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற சுதர்சன், சிந்துஜா, சுஜீபன், சுகிர்தன், மைதிலி, மீனா, ஜனகன், ஜனனி, ஜானு, அபிராமி, அபர்ணா, அபிராச், அஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சிந்துஜன், சர்மி ஆகியோரின் அன்புப்பாட்டியும் பாலச்சந்திரன், வனயா, சிவபாலன், கிரியா ஆகியோரின் அன்புச்சின்னம்மாவும் மோகன், கமலகுமாரி, வசந்தன், வசந்தி, தயாளன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனந்தநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T. P : 077 456 0453
077 797 0303

தகவல்:
குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 . 11 . 1938 |  | 17 . 05 . 2017 |

**நாசாணி விநாயகமூர்த்தி**

**(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்)**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், 2 ஆவது, ஒழுங்கை குருமன்காடு, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாசாணி விநாயகமூர்த்தி (17.05.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி ஸ்ரீரஞ்சினியின் அன்புக்கணவரும் சக்தியா (ஆசிரியை - வ/விபுலானந்தாக் கல்லூரி) திருச்செல்வம் (முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் வவுனியா - லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் மரியானந்தன், சுரேஸ் (ஆசிரியர் வீரபுரம் மகாவித்தியாலயம்), செந்தில்குமார் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் திவன்யா, பகவன் (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.05.2017 வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சனாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி (ஸ்ரீரஞ்சினி),
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
024 222 3067

---

### மரண அறிவித்தல்

**திருமதி தயாநிதி சண்முகநாதன்**



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தயாநிதி சண்முகநாதன் கடந்த 15.05.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானசம்பந்தன் (ஓய்வுபெற்ற அதிபர்)- அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்)- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகநாதனின் (ESS JEY ELECTRICAL Sales Rep.) அன்புமனைவியும் கிருத்திகன் (Softlogic Life) கார்த்திகன் (துர்க்கா மிக் ஷர்), அனந்தீசன் (Network Engineer, Tekxeon Interconnect (Pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சிவானந்தன், குகானந்தன் (ஜேர்மனி), கலாநிதி (இத்தாலி), காலஞ்சென்ற கருணாநிதி, அருணாநிதி (கனடா), உஷாநிதி (ஜேர்மனி), சொர்ணநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோரமா (ஜேர்மனி), உதயகுமார் (இத்தாலி), விஜிகரன் (கனடா), யோகலிங்கம் (ஜேர்மனி), சந்திரசேகரம், சதாசிவம், நீலாம்பிகை, லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோதிப்பிரியா, வலெண்டினோ, மகிஷா, கோபிஷன், நிருஷான், அபிதா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் வைஷ்ணவி, விஷ்ணவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 808 4770,
077 857 5155

தகவல்:
கணவர்,
பிள்ளைகள்.

---

### மரணஅறிவித்தல்

**குலசேகரம் திருக்குமார் (ராஜன்)**



தோற்றம் - 09.08.1972
மறைவு - 16.05.2017

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் சேமப்புலம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம் திருக்குமார் (ராஜன்) 16.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஷர்மினி(ஆசிரியை) யின் அன்புக் கணவரும் சதுர்த்திகனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சத்தியானந்தன் மற்றும் சந்திரகாந்தி தம்பதியரின் அன்பு மருமகனும் குலராணி, யோகராசா, கமலேஸ்வரன் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம் , கெங்காதரன் மற்றும் யோகராணி, செல்வராணி, மதனராணி ஆகியோரின் நேசமிகு சகோதரரும் வனித்தாவின் மைத்துனரும் கிரிதரனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை நண்பகல் 12மணியளவில் அன்னாரின் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2மணியளவில் கோப்பாய் இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேமப்புலம் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்

**திருமதி மங்களேஸ்வரியம்மா சுவாமிநாதன்**



ஆவரங்கால் மேற்கு புத்தூரை பிறப்பிடமாகவும், உடையார்கட்டு வடக்கு, புதுக்குடியிருப்பை இடைக்கால வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரியம்மா சுவாமிநாதன் (16.05.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக் குமாரு - சிவபாக்கியம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற முருகேசு சுவாமிநாதனின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தகவல்: குடும்பத்தினர்.
077 154 7116

### 3 மாவட்டங்களில்...

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழ்வுகள் நேற்று மன்னார், சாவகச்சேரி ஆகிய இரு இடங்களில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

1991ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி இலங்கை வான் படை நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர். அத்துடன் 78பேர் படுகாயம் அடைந்திருந்தனர்.

இவர்கள் நினைவாக நினைவேந்தல் வாரத்தின் 6ஆவது நாளான நேற்று சாவகச்சேரி பொதுச் சந்தையில் சுடர் ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், முன்னாள் நகரசபை உறுப்பினர் அ.பாலமயூரன், பருத்தித்துறை நகர சபை முன்னாள் உறுப்பினர் பன்னீர்ச்செல்வம், தென்மராட்சி இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் நக்கீரன், முன்னாள் நகர சபை உறுப்பினர் கிசோர், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மன்னாரில்**

இதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று மன்னார் உயி லங்குளம் பகுதியிலும் இடம் பெற்றது.

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்தும், உயிலங்குளம் வீதியூடாகப் பேருந்தில் மன்னார் நோக்கிப் பயணம் செய்த மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 34 பொது மக்களை நினைவு கூர்ந்தும் இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியில் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுழங்காவில்பேருந்துதரிப்பிடத்திலும் இடம்பெற்றது. நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முழங்காவில் பகுதியைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (த-56- 21- 6)

### கிளிநொச்சி...

கிளிநொச்சி, மே 18

"நாம் இறப்பதற்கு முன்னர் எமது பிள்ளைகள், உறவுகளுடன் ஒரு சில நாட்களாவது வாழ விரும்புகின்றோம்"

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினரால் ஐ.நா. செயலாளர் அன்ரோனியா குற்ரெஸ்க்கு நேற்று அவசர கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்களான மகன், மகள், கணவன் மற்றும் பேரப்பிள்ளைகள் தொடர்பில் உரிய வெளிப்படுத்தலை வலியுறுத்தி 3 மாதங்களுக்கு மேலாகச் சாலையில் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றோம். 8 ஆண்டுகள் கடந்தும் அரசிடமிருந்து நீதி கிடைக்கவில்லை.

எமது சிறிய மாவட்டத்தில் இறுதிப் போரின்போது ஆயிரத்து 200 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போரின் நிறைவில் இராணுவத்தினரிடம் சரணடைந்தோர் மற்றும் தடுப்புக் காவலிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டோரும் அவர்களில் அடங்குவர். போர் நடைபெற்ற போதும், அதன் பின்னரும் பலர் கடத்தப்பட்டனர். போர் நிறைவடைந்த பின்னர் கத்தோலிக்க அருட்தந்தை முன்னிலையில் இராணுவத்தினரிடம் பலர் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை அரசு எமது உறவுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்று வலியுறுத்தி எமது போராட்டத்தை ஆரம்பித்தோம். இரகசிய சித்திரவதை முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரின் விவரங்களை நாம் அறிய விரும்பினோம். எங்கள் உறவுகள் இராணுவத்தின் இரகசிய சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை நிரூபிக்க எங்களிடம் சில சான்றுகள் உள்ளன.

எனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது உறவுகளின் விவரங்களை வெளியிடுவதற்கு நாம் உங்களின் உதவியை வேண்டி நிற்கின்றோம்.

எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 80 நாட்களைக் கடந்த போதிலும் அரச தரப்பிலிருந்து எவரும் எம்மை வந்து பார்க்கவில்லை. எமது கோரிக்கைகள் தொடர்பில் அரசு கரிசனை காட்டவில்லை. அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களோ அல்லது பன்னாட்டுச் சமூகமோ எமது கோரிக்கைகள் தொடர்பில் பதில் வழங்கவில்லை. காணாமற்போனோரின் உறவினர்கள் ஏற்கனவே அவர்களின் அன்புக்குரியவர்கள் காணாமற்போனதால் உடல்ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலவீனமாகவும் உள்ளனர்.

நாம் இறப்பதற்கு முன்பு ஒரு சில நாட்களாவது எமது பிள்ளைகள், உறவுகளுடன் வாழ விரும்புகிறோம் என்றுள்ளது.

கடிதத்தில் சங்கத்தின் தலைவர் திருமதி வை.கனகரஞ்சினி மற்றும் செயலாளர் திருமதி ஏ.லீலாதேவி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். (வ)

---

**யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம்**

காலம்:- 26.05.2017

நேரம்:- பிற்பகல் ஒரு மணி

இடம்:- பாடசாலை பிரதான மண்டபம்

தவறாது அனைவரும் கலந்து கொள்ளவும்.

பாடசாலை சமூகம்

---

## அறிவித்தல்

**பதவிவெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்குமாகாணம்**

வடக்குமாகாண பொதுச்சேவையின் நூலகர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

தமிழ் /சிங்களம் மொழி மூலம் மேற்படிபதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவிவெற்றிடங்கள் திறந்தமற்றும் மட்டுப்படுத்தப்பட்டபோட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.06.16 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam →Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலேகுறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும். தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ரு.வரதலிங்கம்.
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்.

---

## அறிவித்தல்

**பதவிவெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்குமாகாணம்**

**வடக்குமாகாண பொதுச்சேவையின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் சிவில் /ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் தரம் III இற்கும் அதன் பயிற்சித் தரத்திற்கும் மற்றும் படவரைஞர் பயிற்சித் தரத்திற்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

தமிழ் /சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிக்குரியபோட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்தபோட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.06.16 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk→ Recruitment and Exam→ Advertisement என்ற வடக்குமாகாண இணையத்தளத்தில் மேலேகுறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத்தகவல்களையும். தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ரு.வரதலிங்கம்.
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்.

---

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின்

## வைரவிழா 1957 - 2017

**மென் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி - 2017**

**விதி முறைகள்**

01. சர்வதேச விதிகளுக்கு அமைவாகவும் 10.போட்டிக்குழுவின் விதிகளுக்கு அமைவாகவும் போட்டிகள் நடைபெறும்.
02. போட்டிகள் 6 பேர் கொண்ட 5 ஓவர் போட்டியாகும்.
03. போட்டிகள் யாவும் விலகல் முறையில் நடைபெறும்.
04. சில போட்டிகள் மின்னொளியில் நடைபெறும்.
05. போட்டிகளுக்கு கட்டாயம் உகந்த பந்து கொண்டுவருதல் வேண்டும்.
06. போட்டிகளுக்கு உரிய சீருடைகளுடன் பங்குபற்றுவது நன்று (விரும்பத்தக்கது)
07. போட்டியில் பங்கு பற்றும் கழகம் அனுமதிக் கட்டணமாக ரூபா 1500.00 செலுத்த வேண்டும்.
08. குறித்த நேரத்துக்கு 15 நிமிடங்கள் முன்பாக அணிகள் போட்டிக்கு தயாராக இருத்தல் வேண்டும்.
09. போட்டி சம்பந்தமான ஆட்சேபனை மனு சமர்பிப்தாயின் ரூபா 1000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன் தலைவர், செயலாளர் ஒப்பத்துடன் போட்டி நடைபெற்று 24 மணித்தியாலத்திற்குள் போட்டி குழுவிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. போட்டிக்குழுவின் முடிவுவே இறுதியானது.
11 **பரிசில் விவரம் :**
   - **முதலாம் பரிசு ரூபா 30000.00 உம் வெற்றிக் கிண்ணமும்**
   - **2 ஆம் பரிசு ரூபா 15000.00 உம் வெற்றிக் கிண்ணமும்**
   - **3 ஆம் பரிசு ரூபா 10000.00 உம் வெற்றிக் கிண்ணமும்**
   - **4 ஆம் பரிசு ரூபா 5000.00 உம் வெற்றிக் கிண்ணமும்**
   - **தொடர் ஆட்ட நாயகன் விருது**
   - **இறுதிப் போட்டி ஆட்ட நாயகன் விருது**
   - **சிறந்த பந்து வீச்சாளர் விருது**
   - **சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது**
   - **சிறந்த நன்நடத்தைக் கழகம் விருது**
12. விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்படும் வீரர்கள் மாத்திரம் போட்டியில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
13. அனைத்து வீரர்களினதும் ஏதாவது ஒரு அடையாள அட்டை இலக்கம் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும்.
14. **விண்ணப்ப முடிவுதிகதி : 22.05.2017**

**விண்ணப்ப படிவம் அனுப்பவேண்டிய முகவரி:**
**போட்டிக்குழு**
**திக்கம் மத்திய சனசமூக நிலையம்,**
**திக்கம் அல்வாய்.**

**மேலதிக தகவல்களுக்கு :**
**021 312 7533** **கணேஸ் 077 362 6648**
**தர்சன் 077 838 8834** **சேந்தன் 076 869 5536**

ஊடக அனுசரணை: உதயன்

(சி.வாணை)(13)

---

## திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழா 1957 – 2017

**வடமாகாண ரீதியில் நடத்தும் வீதியோட்டம் (21 km - மரதன்) - ஆண்கள் 2017 - விதிமுறைகள்**

01. 16 வயதுக்கு மேற்பட்டோர் மாத்திரம் பங்குபற்றலாம்.
02. போட்டியில் பங்கு பற்ற விரும்பவர்கள் விண்ணப்படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும்.
03. போட்டி ஆரம்பமாகும் குறித்த நேரத்துக்கு 30 நிமிடங்கள் முன்பாக போட்டிக்கு தயாராக இருத்தல் வேண்டும்.
04. போட்டி நடைபெறும் தினம் 04.06.2017
05. போட்டிக்குழுவின் முடிவே இறுதியானது.
06. **பரிசில் விவரம்**

   *1 ஆம் பரிசு 20000.00 ஊம் வெற்றிக் கிண்ணமும்*
   *2 ஆம் பரிசு 10000.00 ஊம் வெற்றிக் கிண்ணமும்*
   *3 ஆம் பரிசு 5000.00 ஊம் வெற்றிக் கிண்ணமும்*
   *முதல் பத்து இடங்களைப் பெறுவோருக்கு ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.*
07. விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்படும் வீரர்கள் மாத்திரம் போட்டியில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
08. அனைத்து வீரர்களினதும் ஏதாவது ஒரு அடையாள அட்டை இலக்கம் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும்.
09. விண்ணப்ப முடிவுத் திகதி **26.05.2017**
10. **விண்ணப்ப படிவத்தினை பெற்றுக்கொள்ளும் இடங்கள்**
   *திக்கம் மத்திய சனசமூக நிலைய தொடர்பகம்.*

**விண்ணப்ப படிவம் அனுப்ப வேண்டிய முகவரி**
*போட்டிக்குழு,*
*திக்கம் மத்திய சனசமூக நிலையம்,*
*திக்கம் அல்வாய்.*

**தகவல்களுக்கு:**
021 312 7533 — தர்சன் - 077 838 8834
கணேஸ் - 077 3626648 — சேந்தன் - 076 869 5536

ஊடக அனுசரணை: உதயன்
மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்

**தேவை**
பெண்- பொதி செய்பவர்கள்
பெண்- மிக்சர், தொதல் முதலிய பலகாரம் செய்பவர்கள்
ANNAI NAGA FOOD CITY
NO:72, K.K.S ROAD, JAFFNA.
077 477 3483

**காணி விற்பனைக்கு**
கல்வியங்காடு, 3 ஆம் கட்டையடி, பருத்தித்துறை வீதியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
R.நகுலேந்திரன் 077 183 7261,
சி.யோதிலிங்கம் 071 801 9175

**காணி விற்பனைக்கு**
கல்வியங்காடு, 3 ஆம் கட்டையடி, மதவடிச் சந்தி ஒழுங்கையில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
R.நகுலேந்திரன் 077 183 7261,
சி.யோதிலிங்கம் 071 801 9175

முள்ளி...

நிறுத்தி அகவணக்கம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி, தமிழர் வாழ்நாளில் கறுப்பு நாள். செங்குருதி தோய்ந்த துக்க நாள். ஈழத்தின் மிகப் பெரிய துயர் படிந்த நாள். முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்திக் கொண்டு உயிர் பறித்தெடுக்கப்பட்ட தமது உறவுகளுக்காக சுடரேற்றி அஞ்சலி செய்யும் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் இன்று ஈடுபட உள்ளனர். இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காகச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.


தமிழ் இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஆகப் பிந்திய மிக மோசமான இந்தப் படுகொலையின் பெரும் துயரை நினைவேந்தும் நிகழ்வுகள் இன்று புலம்பெயர் நாடுகளிலும் நடைபெறவுள்ளன. முள்ளிவாய்க்கால் தந்த வலியை அந்தக் கணங்களை வலிமை கொள்ள வைக்கும் கணங்களாக மாற்றுவதற்கு அனைத் துத் தமிழ் மக்களும் இன்று அஞ்சலி செலுத்த அணி திரளவேண்டும் என்று வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் மூர்ச்சையாகிப் போனவர்களுக்கு எந்தப் பெறுமதியையும் இந்த உலகம் தரவில்லை. வெறுங்கையோடு மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. எம் மீது திணிக்கப்பட்ட வன்கொடுமைகளின் நினைவுகள் மட்டும் தான் எம்மிடம் எஞ்சியிருக்கின்றன. முள்ளிவாய்க்கால் கொடுந் துயரின் பின்னரும் எஞ்சியிருக்கும் அந்த நினைவுகளையாவது நாம் இறுகப் பற்றிக் கொள்ள முயற்சிக்கின்றோம். அந்த துயரவலிகள் நினைவுகளால் ஒத்தடம் பெறுவதை உணர்கின்றோம்.

எனவே எமது நினைவுகளை மீள் நிறுத்தி, எம்மின விடிவுக்காக மூச்சடங்கிப் போனவர்களுக்கும், கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட மக்களுக்காகவும், முள்ளிவாய்க்கால் கப்பலடி மண்ணில், இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும் நினைவேந்தலில், தாயக மக்கள் அலையென அணி திரண்டு அஞ்சலிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை கேட்டுக் கொண்டுள்ளது.

(க-5)

## 8 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



வேலணையை பிறப்பிடமாகவும்
புளியங்கூடல், யாழ்ப்பாணம், துணுக்காயை
வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் சண்முகராசா**
**நல்லநாதன்**

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

**மலர்வு**
**17.07.1950**

**உதிர்வு**
**18.05.2009**

எங்கள் அன்புத் தெய்வமே!

எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன ஆனாலும் வாழ்க்கையின் ஒவ்வொருநாளும் நீங்கள் எங்களுடனே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். கனவுகள் உங்கள் செயல்களை எங்களுக்கு தெரியப்படுத்தும் அவ்வேளைசிரித்து மகிழ்ந்து உங்களுடன் சேர்ந்திருப்போம். ஆனாலும் நிஜம் நீங்கள் எங்களை விட்டு சென்று விட்டீர்கள் என உணர்த்திக்கொள்ளும் அதனால் என்ன எங்களுடன் இல்லாவிட்டாலும் எங்களை வழிநடத்தும் தெய்வமாக நீங்கள் இருப்பீர்கள் என்று நினைத்து உங்களை வணங்கிக்கொண்டிருக்கின்றோம். காலங்கள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்**
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், உறவினர்கள்.**

(சி.எஸ் 4022)
(13)

## 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**இளையதம்பி**
**சிவராசா**

(ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கல்விங்காட்டை வசிப்பிடமாக கொண்டவரும் முன்னாள் அதிபர் - யா / நல்லூர் ஞானோதய வித்தியாலயம்)

**திதி : 18.05.2017**

**தோற்றம்**
**15.07.1927**
**(ஏழாலை மேற்கு)**

**மறைவு**
**19.05.1987**
**(கல்வியங்காடு)**

ஆயிரம் சூரியன் ஒன்று சுவடி
தருகின்ற பிரகாசம் போதாது
எம் தந்தையே!
நீர் பார்க்கும் ஓர் பார்வை...
உங்களுடன் நாம் வாழ்ந்த
வாழ்வின் வசந்தம்...
எத்தனை கோடி கிடைத்தாலும்
என்றும் வரப் போவதில்லை....

141/ 3, யோகர் சுவாமி வீதி,
கோயில் வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்.
077 320 9364

உங்கள் நினைவுடன்
திரு.திருமதி பாலகுமார் சிவசக்கதி - குடும்பம்
திரு.திருமதி சாந்தலிங்கம் சிவகௌரி - குடும்பம
திரு.திருமதி சிவகுமாரன் வினோதினி - குடும்பம

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.04.2017 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் மனோன்மணி**
**தங்கராஜா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

64/7, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**பொன்னம்மா**
**செல்வவிநாயகமூர்த்தி**

கடந்த (18.04.2017) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி-திருமதி பொன்னம்மா செல்வவிநாயக மூர்த்தி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும். நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (18.05.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Dr.சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம்.

(சிஎஸ்.4019) (13)

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
30
05
1938

விண்ணில்
16
05
2017


அமரர்
**நாகமுத்து விக்கினேஸ்வரநாதன்**
**(ரஷ்யா சாஸ்திரி)**

(பாதாள வைரவர் கோயில வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

*பூமி வாழ்வு போதுமென்று போனதேசம் எதுவையா*
*பாதாள வைரவரின் பாதங்களில் துயில்வதற்கா ?*
*தேசம் மீது பாசம் வைத்த பெற்றமகன் சிறையிலிருக்க*
*பிரிந்து நீங்கள் சென்றதேனோ ?*
*பொறுக்குதில்லை எம் மனது !*
*வாகீஸ்வரி துணையவளை வாட்டமுறச் செய்து விட்டு*
*விண்ணுலகம் விரைந்தீரே வலிக்குதையா எம்மிதயம் !*
*துணையிழந்த தாயே துன்பமுறும் சேய்களே*
*விழிகசியும் சொந்தங்களே*
*விம்முகின்ற யாழ்மண்ணே !*
*பூட்டிய சிறையிலிருந்து பிள்ளைகளாய்த் தேற்றுகின்றோம்*
*பெரியவரின் ஆத்மா பரமபதம் அடைய*
*படைத்தவரைப் பிரார்த்திக்கிறோம் !*

தமிழ் அரசியற் கைதிகள்
புதிய மகசின் சிறைச்சாலை
கொழும்பு.

## கண்ணீர் அஞ்சலி



**அமரர்**
**தர்மலிங்கம்**
**இராஜரட்ணம்**

(ஓய்வுநிலைப் பணிப்பாளர், உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம்)

அவர்கள் வேலணை மண்ணின் தலைசிறந்த விவசாயியாக வாழ்ந்து எம்மண்ணிற்குப் பெருமை சேர்த்த அன்னாரின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வேலணை தெற்கு கமக்காரர் அமைப்பு,**
**வேலணை.**

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் மறைந்தும் மக்கள் மனதில்
நிலையாக இடம்பிடித்த மாமனிதர்

**தர்மலிங்கம்**
**இராஜரட்ணம்**


அவர்கள் உயர் தொழில்நுட்ப
நிறுவனத்தை யாழ்.மண்ணில்
நிறுவிய சிற்பியும் அனைத்து
தமிழ் மாணவர்களுக்கும் உயர் தொழில்நுட்ப பட்டங்களை
பெற்றுத்தந்தது மட்டுமன்றி
கொரிய நாட்டின் உதவியுடன் யாழ்ப்பாண
தொழில்நுட்பக்கல்லூரியை தொழில்நுட்பவியல் கல்லூரியாக
தரம் உயர்த்திய அனைத்து வேலைத்திட்டங்களிலும் என்னுடன்
தோளோடு தோள் நின்று உழைத்த உத்தம மனிதரின் மறைவு
எக்காலத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

**பேராசிரியர் ந. யோகராஜன் பணிப்பாளர்,**
**தொழில்நுட்பகல்வி பயிற்சி திணைக்கள தலைமைச்செயலகம், கொழும்பு.**

## மரண அறிவித்தல்

# தளயசிங்கம் குகதாசன்

**(ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி பகுதிப் பணிப்பாளர், முன்னாள் அதிபர்-யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், முன்னாள் தலைவர்-Lions Club, சுன்னாகம், முன்னாள் பொருளாளர்-T.R.R.O நிறுவனம், முன்னாள் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்)**



அளவெட்டி, வேளாவலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தளயசிங்கம் குகதாசன் 16.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தளயசிங்கம் -தையலீஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் M.S.கந்தையா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறி (கணக்காளர்) மற்றும் சறோ, யோகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயக்குமார் (கணக்காளர்) இன் அன்புச் சகலனும் காலஞ்சென்ற சிவதர்சன் மற்றும் Dr.தேவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிஷு (ஆங்கில விரிவுரையாளர்), மயூரன் (Chemical Engineer) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் (மருதனார்மடம்) பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்று இணுவில் பூவோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**075 465 8981** நிஷு (பெறாமகள்)

## தகவல் தொழில்நுட்ப சிறிய நடுத்தர மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் கண்காட்சி

வடக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப சம்மேளனத்தின்(NCIT) ஏற்பாட்டில் ICTA யின் வடக்கு மாகாணத்தின் சிறிய நடுத்தர வணிக நிறுவனங்களை இலத்திரனியல் மயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் வர்த்தகத்தொழிற்துறை மன்றத்தின் (CCIY) அனுசரணையுடன் மேற்படி கண்காட்சி நிகழ்வு எதிர்வரும் மே 31ம் திகதி காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை யாழ் வலம்புரி விருந்தினர் விடுதியில் நடைபெற உள்ளது.

இக்கண்காட்சியில் விசேட அழைப்பில் வடக்கு மாகாணத்தின் சிறிய நடுத்தர தொழிற்துறைகளினை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு தங்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வர். கண்காட்சியுடன் தொழிற்துறை நிறுவனங்களுக்காக நிறுவனங்களில் சேவைகள் பொருட்களில் தகவல் தொழில்நுட்பத்தீர்வுகளை புகுத்துவதன் அவசியம் குறித்த விசேட கருத்தரங்கு செயலமர்வும் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 20 வடக்கு மாகாணத்தை சேர்ந்த தகவல் தொழில்நுட்ப துறைசார் மென்பொருள் (Software) இலத்திரனியல் சந்தைப்படுத்தல் (Digital Marketing) இணையத்துறை (Website Online /Application/ Mobile Apps) மற்றும் விசேட தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கும் நிறுவனங்கள் தமது தீர்வுகளையும் சேவைகளையும் காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்காக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

காட்சியறைகளை பெற்றுக்கொள்ள விரும்பும் தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் அதற்கான விண்ணப்பங்களை www.ncit.lk இணையத்தளத்தில் இதற்காக உள்ள பிரத்தியேக விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்தி இணையத்தின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டப்படுகின்றனர். உள்நுழைவு தகுதிகள் தேர்தெடுக்கப்படும் முறைகள் போன்ற தகவல்கள் இணையத்தளத்தில் உள்ளது

விண்ணப்ப முடிவுத்திகதி 21.05.2017. காட்சியறைகளுக்காக தெரிவுகள் ICTA யினால் இறுதி செய்யப்படும். மேலதிக தகவல்களுக்கு: தவரூபன் (0777 563213 ) சர்மிக் (0777 563144)

NCIT
The Gateway to Northern ICT
வடக்கு தகவல் தொழில்நுட்ப சம்மேளனம்
Northern Chamber of Information Technology (NCIT)
136C,Palaly Road,Thirunelvely Jaffna | www.ncit.lk

## வடக்கு மாகாண தகவல் தொழில்நுட்பதுறை சார்ந்த சிறிய நடுத்தர நிறுவனங்களின் விபரப்பட்டியல்

ICTA யின் வடக்கு மாகாணத்தின் சிறிய நடுத்தர நிறுவனங்களை இலத்திரனியல் படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள கண்காட்சியில் வடக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப சம்மேளனத்தின்(NCIT) ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள தகவல் தொடர்பாடல் துறை சார்ந்த சகல கல்வி மற்றும் சேவை விற்பனை நிறுவனங்களின் விபரப்பட்டியல் வர்ண கையேடாக வெளியிடப்பட உள்ளது. கையேடு கண்காட்சியிலும் ஏனைய தொழில்துறை சார்ந்தவர்களிடையேயும் முக்கிய இடங்களிலும் விநியோகிக்கப்பட உள்ளது.

விபரப்பட்டியலில் உங்கள் நிறுவனத்தின் விபரமும் இடம்பெற வேண்டும் என விரும்பினால் NCIT யில் உங்கள் உறுப்புரிமையினை உறுதி செய்து விண்ணப்பங்களை www.ncit.lk இணையத்தளத்தில் இதற்காக உள்ள பிரத்தியேக விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்தி இணையத்தின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டப்படுகின்றனர். கட்டணம் எதுவும் இல்லை

உங்கள் பதிவுக்கான இறுதி முடிவுத்திகதி 21.05.2017.

மேலதிக விபரங்களுக்கு support@ncit.lk 0777 729127 (சிவாஸ்கரன்) 0773049886 (வேணு )

விபரப்பட்டியலில் விளம்பரம் செய்ய விரும்பும் நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்

NCIT
The Gateway to Northern ICT
வடக்கு தகவல் தொழில்நுட்ப சம்மேளனம்
Northern Chamber of Information Technology (NCIT)
136C,Palaly Road, Thirunelvely | www.ncit.lk

## கண்ணீர் அஞ்சலி

### தர்மலிங்கம் இராஜரட்ணம்



யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் ஓய்வு நிலை முதல் பணிப்பாளர் தர்மலிங்கம் இராஜரட்ணம் அவர்கள் 16.05.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கி ன்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் ..

**செ.மனோகரன் (ஓய்வு நிலைக்கணக்காளர்) க.இராஜேஸ்வரன் (ஓய்வு நிலைக்கணக்காளர்)**

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் உயர்தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப் பிரிவின் செயலாளரும், ஆயுட்கால அங்கத்தவரும் ஆகிய

# தர்மலிங்கம் இராஜரட்ணம்

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப்பிரிவும் யாழ். கிளையும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், வேலணைப்பிரிவு.**

## கண்ணீர் அஞ்சலி

**தர்மலிங்கம் இராஜரட்ணம்**

[ஓய்வுபெற்ற பணிப்பாளர் – உயர் தொழில்நுட்ப கல்லூரி,யாழ்ப்பாணம்]



எம்முடன் கடமையாற்றும் சக உத்தியோகத்தர் **திருமதி நர்மதா பிரதீபனின்** அன்புத் தந்தையாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

*முகாமையாளர், ஊழியர்கள்*
*தேசிய சேமிப்பு வங்கி, யாழ் . மேத்தரக்கிளை*

## மரண அறிவித்தல்

# சின்னத்துரை விசுவநாதன்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விசுவநாதன் நேற்று17.05.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நாகரத்தினஅம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காலாம்பிகை செந்தில்நாதன், கணேசலிங்கம், நவரத்தினம் மற்றும் அமிர்தாம்பிகை, விமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்றவர்களான தில்லையம்பலம்-இராசமுத்து (புன்னாலைக்கட்டுவன்) தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் தயானந்தன் காலஞ்சென்ற சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேஸ்வரியின் அன்பு மாமனும் கிருத்திகா, தர்சிகன், பதுசிகன், கிரிசிகன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர். 077 361 7908**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை செல்லையா



**தோற்றம் . 25.09.1935**
**மறைவு . 17.05.2017**

கந்தரோடையை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை செல்லையா அவர்கள் நேற்று (17.05.2017) புதன்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் 021 222 5053

தகவல்:
குடும்பத்தினர்

இரும்புக்...

உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மன்னார் வீதி, கற்பகபுரம் வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த க.சாந்தன் (வயது - 22) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும் அவரது அயல் வீட்டிலுள்ளவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியபோது அயல் வீட்டுக்காரர் கையில் இருந்த இரும்புக்கம்பியால் குறித்த நபரின் தலையில் தாக்கியதாக ஆரம்ப விசாரணைகளைக் கொண்டு பொலிஸார்தெரிவிக்கின்றனர். அவ்வாறு தாக்கப்பட்ட இளைஞன் மயங்கிச் சரிந்தார். தலையில் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் பயனளிக்காது திரும்ப வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்று முன்தினமிரவு அவர் உயிரிழந்தார் என்றுவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார்விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை, கொலைக் குற்றஞ் சாட்டப்படும் சகோதரர்கள் இருவரும் அங்கிருந்து தலைமறைவாகியிருந்தனர். தலைமறைவான சகோதரர்கள் இருவரும் நேற்றுச் சட்டத்தரணி மூலமாக நீதிமன்றில் சரணடைந்தனர் என்றும் அவர்கள் விளக்கமறியில்லவைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (த-4-101)

லொஸ் ஏஞ்ச..

இந்த நினைவுப் பேருரையை கொசோவோ பிரதிநிதி அலுஸ் காசி வழங்கவுள்ளார்.

கொசோவோவின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் இவர் முக்கிய பங்காற்றியிருந்ததோடு, கொசொவோவின் முதல் அரச தலைவரது முதன்மை ஆலோசகராகவும் இருந்துள்ளார். அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பல்கலைக்கழகத்தில் இன்று மாலை 6 மணிமுதல் இரவு 9 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெற இருக்கின்றது. நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன் உட்படப் பல பிரதிநிதிகளும் இதில் பங்கெடுக்கவுள்ளனர். (த-5)

## கூரிய...

சங்கக் கடை வீதி வீடொன்றில் நேற்று அதிகாலை இடம்பெற்றறுது.

அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தேவி சரஸ்வதி (வயது-68) என்பவரே உடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இட அவதானிப்புக்களில் இருந்து இது கொள்ளையர்களின் கைவரிசையாக இருக்கலாம் என்று பொலிஸாரும் பிரதேச மக்களும் தெரிவிக்கின்றனர்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் விவசாய பாட ஆசிரியராக இருந்த இவர் திருமணம் ஆகாத நிலையில் சிறுப்பிட்டிப் பகுதியில் தனியாக வசித்து வந்துள்ளார்.

இவரின் உறவினர்கள் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். வெளிநாட்டில் வசிக்கும் தாயார் அண்மையில் இவரை வந்து பார்த்து விட்டுச் சென்றார் என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணின் வீட்டு வளவைத் துப்பரவு செய்யும் வேலைக்காரப் பெண் நேற்றுக் காலை அங்கு சென்றுள்ளார். அவரைக் காணாததால் கூப்பிட்டுள்ளார். பதில் ஏதும் வராத நிலையில் அயல் வீட்டுக்குச் சென்று விடயத்தைக் கூறியுள்ளார்.

வேலைக்காரப் பெண்ணும் அயலவர்களும் உடனடியாக வீட்டின் உள்ளே சென்று பார்த்துள்ளனர். இதன்போதே அவர் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் குருதி வழிந்தோடிய நிலையில்தரையில்உடலமாகக்கிடந்துள்ளார். அங்கிருந்த ஆடைகள் சில வீசி எறியப்பட்டுக் காணப்பட்டன. அலுமாரிகளும் திறந்திருந்தன. இறந்தவரின் மருமகன் ஒருவருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவர் அச்சுவேலிப் பொலிஸாருக்கு அலைபேசி மூலம் விடயத்தைத் தெரியப்படுத்தினார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர்.

அதிகாலையில் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர்.

அங்கு விசாரணை மேற்கொண்டபோது, குளியலறையின் வெளிப் பகுதியில் ஏணி ஒன்று இருப்பதையும், வீட்டுக் கூரை ஓடுகள் சில அகற்றப்பட்டு இருந்ததையும், பக்கத்துக் காணியின் முள்ளுக் கம்பிகள் அகற்றப்பட்டுப் பாதை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதையும் பொலிஸார் கண்டு பிடித்தனர்.

ஏணி வழியாகக் கூரையில் ஏறி ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கி மூதாட்டியைக் கொலை செய்துவிட்டு கொள்ளையில் ஈடுபட்ட பின்னர் கொள்ளையர்கள் பக்கத்துக் காணியின் முட்கம்பி வேலியை வெட்டித் தப்பித்து சென்றிருக்கலாம் எனப் பொலிஸாரும் ஊர் மக்களும் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் இடது கழுத்துப் பகுதியிலும், தொடைப் பகுதியிலும் காயங்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டுள் ளது.

தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் கைரேகை ஆதாரங்கள் மற்றும் ஏனைய ஆதாரங்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுதல் நடத்தினர். குற்றவாளிகள் தப்பிச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட முட்கம்பி அகற்றப்பட்ட பாதையில் மோப்ப நாய் நுழைந்தது. பொலிஸார் நாயைப் பின் தொடர்ந்தனர்.

அந்த வளவினுள் பூட்டிய நிலையில் உள்ள வீடொன்றை நாய் இனம் காட்டியதை அடுத்துப் பொலிஸார் உள்ளே நுழைந்து சென்று பார்த்தனர். உள்ளே சில பொருள்கள் தூசு படிந்த நிலையில் காணப்பட்டன. கால் அடையாளங்களுடன் தண்ணீர் போத்தகள், வேறு சில குடிபானப் போத்தல்கள் என்பன அண்மையில் பயன்படுத்தப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. சந்தேகநபர்கள் இந்த வீட்டைச் சில காலம் பயன்படுத்தி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த நீதிவான் கருணாகரன் உடலத்தைப் பார்வையிட்டார். பின்னர் உடலம் சட்ட வைத்திய அதிகாரி பார்வையிட்ட பின்னர், உடற் பரிசோதனைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. (கு-4-ரி)

## கல்லுண்டாயில்...

பசு மாட்டை இறைச்சியாக்கி அதன் கழிவுகளைக் கொண்டுவந்து கல்லுண்டாய் வெளியில் கொட்டிய போதே யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர்களால் வாகனம் பிடிக்கப்பட்டது. சாரதி வாகனத்தை அந்த இடத்தில் கைவிட்டுத் தப்பித்தார். எனினும் அவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் காக்கைதீவு மற்றும் அதனை அண்மித்த கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் நீண்டநாட்களாக மாட்டு எலும்புகள் கொட்டப்பட்டன. அதே போன்று படி வாகனம் ஒன்று நேற்று இரவு 8 மணியளவில் அங்கு எலும்புகளை கொட்டுவதற்கு முயற்சித்தது. அதனை அறிந்த யாழ்ப்பாண மாநகர சபையின் ஊழியர்கள், உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் வருவதை அவதானித்த சாரதி வாகனத்தை அங்கிருந்து எடுப்பதற்கு முயற்சித்துள்ளார். எனினும் வாகனம் மண்ணினுள் புதையுண்டுள்ளது. இதனால் சாரதி அந்த இடத்திலேயே வாகனத்தைக் கைவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளார்.

வாகனத்தை சோதனையிட்ட போது, அதில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட பசு மாடுகளினுடைய எலும்புகள், குடல்கள், மண்டை ஓடுகள் உள்ளிட்ட கழிவுகள் மற்றும் கோழிக் கழிவுகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. மாநகர சபையின் ஊழியர்களால் பொலிஸாருக்கு தவகவல் வழங்கப்பட்டது. சிறிது நேரத்தில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர். விசாரணைகளை மேற்கொண்டனர்.

### பின்னணி

'யாழ்ப்பாணம் காக்கைதீவில் உள்ள ஓர் இடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு எரியூட்டப்படுகின்றன. யாழ் மாநகர சபையால் சேகரிக்கப்படும் கழிவுகள் குறித்த பகுதிக்கே கொண்டு செல்லப்பட்டு கொட்டப்படுகின்றன. ஆனால் காக்கை தீவு பகுதியில் ஓட்டு மடம் சந்தியில் இருந்து காரைநகர் செல்லும் வீதியின் இருமருங்கிலும் பரவலாக குப்பைகள் கொட்டப்பட்டன. படி வாகனங்ககள் மூலம் குறித்த பகுதிகளில் குப்பபைகள் கொட்டப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.



விலங்குகளிலுடைய எச்சங்களும் அந்தப் பகுதிகளில் அதிகமாகக் கொட்டப்பட்டன. இறைச்சிக்காக வெட்டப்பட்ட மாடுகளினுடைய எலும்புகள், மண்டை ஓடுகள் போன்றவை அங்கு வீசப்பட்டன. அவ்வாறு கொட்டப்படும் கால்நடைகளினுடைய எச்சங்கள் அங்கிருந்து அகற்றப்பாடாமல் துர்நாற்றம் வீசியது. இது தொடர்பாக உதயன் பத்திரிகையில் தொடர்ச்சியாக செய்திகள் வெளிவந்தன.

"காக்கை தீவுப்பகுதியில் இவ்வாறான களிவுகள் கொட்டும் போது அதை ஆதாரப்படுத்துவற்காக காவலாளிகள் கண்காணித்து வந்தனர். எனினும் மாட்டு எலும்புகளை கொட்டுவதை மாநகர சபையால் தடுக்க முடியவில்லை. எலும்புகளை கொட்டும் நபர்களைக் கூட மாநகர சபையால் பிடிக்க முயவில்லை" என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

"கல்லுண்டாய் வெளி மாநகர சபையால் கண்காணிக்கப்படுகின்றது விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் தெரிவித்திருந்தார். (வ-21)

## மைத்திரி...

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் இடையே நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஏப்ரல் 2ஆம் திகதியன்று மக்களுடைய பிரச்சினைகள், காணாமற்போனோர் விவகாரம், காணிகள் விடுவிப்பு, வேலைதேடும் பட்டதாரிகள் தொடர்பில் ஓர் நீண்ட கடிதத்தை அரச தலைவருக்கு எழுதியிருந்தேன். அதற்குப் பதிலளிக்கும் முகமாக நேற்று என்னை அரச தலைவர் மைத்திரிபால தமது இல்லத்துக்கு அழைத்திருந்தார். அங்கு பல அமைச்சர்களும் சட்டமா அதிபரும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்களும் வேறு பலரும் சமுகமளித்திருந்தனர்.

எம் சார்பில் கல்வி அமைச்சர் குருகுலராஜா, ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன், காணி ஆணையாளர் குகநாதன் மற்றும் காணித் திணைக்கள அலுவலர்கள் இருவரும் பங்கு பற்றியிருந்தார்கள்.

### காணாமற்போனோர் விவகாரம்

"பரணகம விசாரணைக்குழுவின் அறிக்கை உடனே பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும், பத்திரிகைகளில் அல்லது தொலைக்காட்சியில் அல்லது வேறு விதமாக காணாமற்போனோர் உயிருடன் இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டால், அவை சம்பந்தமாக அரசுக்கு அறிவிக்கப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அரச தலைவர் கூறினார்.

அரசதலைவர் மைத்திரிபால முன்னிலையில் சில குழந்தைகள் ஒரு கூட்டத்தின் போது இருந்ததாக அடையாளப்படுத்தப்பட்டார்கள் அல்லவா? என அவரிடம் வினவிய போது, "அவர்களை அவர்களது கல்லூரியில் நான் சந்தித்தேன். அவர்கள் சம்பந்தமாக வேறு எவையும் எனக்குத் தெரியாது. அவர்கள் காணாமற்போயிருந்தால் அவர்கள் என் முன்னிலையில் இருந்து படம் எடுத்த பின்னர் காணாமற்போயிருக்க வேண்டும். அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் அத்தத் தினத்துக்கு முன்னரேயே அவர்கள் காணாமற்போயிருப்பதாகக் கூறினால் அவை தொடர்பாக எமக்கு எதுவும் தெரியாது" என்று அரச தலைவர் பதிலளித்தார்.

### அரசியல் கைதிகள்

"தடுப்புக் காவலில் இருப்போர் சம்பந்தமாக ஏற்கனவே விவரங்கள் பெறப்பட்டுள்ளன. தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 57 தமிழ்க் கைதிகளே உள்ளனர். எந்த ஒரு அரசியல் கைதியும் நீதிமன்றில் பாரப்படுத்தப்படாது இல்லை" என்று சட்டமா அதிபர் ஜெயசூரிய கூறினார். அவ்வாறு இருந்தால் உடனே தனக்குத் தெரியப்படுத்துமாறு அரச தலைவர் கேட்டுக் கொண்டார்.

### காணமற்போனோர் அலுவலகம்

"காணாமற்போனோர் அலுவலகம் நடைமுறைப்படுத்தப்படாது இருக்க சில சட்டத் திருத்தங்களே காரணம். அதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்" என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச உறுதிமொழி வழங்கினார். அத்துடன் தவறான வழியில் எவரேனும் கைது செய்யப்பட்டிருந்தாலோ அவர்கள் தடுப்புக் காவலில் வைத்திருக்கப்பட்டாலோ உடனே மனித உரிமை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் நீதி அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

### காணி விடுவிப்பு

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் 3 ஆயிரத்து 800 ஏக்கர் மட்டுமே இராணுவத்தினர் வசம் உள்ளது. பாதுகாப்பு அளிப்பதற்காகத் தேவையானவற்றை மட்டும் இராணுவத்தினர் வைத்துக் கொண்டு மிகுதி மக்களுக்குத் திரும்ப வழங்கப்படும்" என்று பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

"கேப்பாப்பிலவில் மக்களின் காணிகளுக்குப் பதிலாக வேறு காணிகளை இராணுவம் வழங்கவுள்ளது. அதற்காக 50 இலட்சம் ரூபா நிதி மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனால் இராணுவத்தினருக்கு வழங்கப்படவுள்ளது. மக்களின் காணிகள் சம்பந்தமாக குறித்த பணம் கொடுக்கப்படவில்லை. வேறு காட்டுப் பகுதிக்கே இந்தப் பணத்தை இராணுவத்தினர் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்" என்று என்னால் தெரிவிக்கப்பட்டது. அது பற்றி ஆராய்வதாக அரச தலைவர் கூறினார்.

"தற்போது மொத்தம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் இராணுவத்தினரே நாடுமுழுவதும் கடமையாற்றுகின்றனர். புதிதாக எவரும் உள்ளீர்க்கப்படவில்லை. சிறிது சிறிதாக இராணுவத்தினர் குறைக்கப்படுகின்றனர்" என்று அரச தரப்பால் கூறப்பட்டது.

### மயிலிட்டி மீன்பிடித் துறை

"மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் இன்னும் சில மாதங்களில் கையளிக்கப்படும். இராணுவத்தினரிடம் இருக்கும் நீர் நிலைகள் விரைவில் திரும்பக் கையளிக்கப்படும்" என்று பாதுகாப்பு செயலாளர் ஹெற்றியாராச்சி கூறினார்.

"வடக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தினரை முழுமையாக வெளியேற்ற முடியாது. பிராந்திய, தேசிய பாதுகாப்புக்காக அவர்களை அங்கு வைத்திருக்க வேண்டும்" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

### வேலைதேடும் பட்டதாரிகள்

வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகளில் ஆயிரத்து 500 பேருக்கு உடனடியாக நியமனம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொலிஸ் சேவையிலும் ஆள்களை உள்ளீர்க்க முடியும். அவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்" என்று அரச தலைவர் கூறினார்.

சுற்றுலாத்துறையில் பட்டதாரிகளை உள்ளீர்க்க முடியும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறினார்.

### மணலுக்குத் தட்டுப்பாடு

"வடக்கு மாகாணத்தில் கிரவல், மணல் தட்டுப்பாடு உள்ளது. தற்போது ஒரு டிப்பர் மணலின் விலை ரூபா 40 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரை உயர்ந்துள்ளது. இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அரச தலைவரிடம் கேட்டுக் கொண்டேன்.

"மணலைப் பொதி செய்து வழங்குவது சிறந்தது. இதன்மூலம் மணல் வீண் விரயமாகாமல் பார்த்துக் கொள்ள முடியும். தேவையான மணல் சந்தையில் கிடைப்பதை உறுதி செய்து முடியும். மணல் அகழ்வு சம்பந்தமாக அரசு கண்காணித்துக் கொள்ள முடியும்" என்றும் அவரிடம் குறிப்பிட்டேன்.

மணல் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மணல் விநியோகத்தை மீண்டும் தனியார் துறையிடம் வழங்குவது பற்றிய ஆராயப்படுகிறது" என்று அரச தலைவர் உறுதியளித்தார்.

இதேவேளை, அரச தலைவருடனான சந்திப்பை அடுத்து சாதகமான பதிலுடன் முதலமைச்சர் எம்மை வந்து சந்திப்பார் என்று கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் நம்பிக்கை வெளியிட்டிருந்தனர். (வ)

## சைக்கிளில்...

இளைஞன் பரிதாபமாக உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தையடுத்து அந்தப் பகுதியில் ஒன்றுகூடிய நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பேருந்தை அடித்து நொறுக்கினர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலைக்காட்டுச் சந்தியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இளைஞர் ஒருவரை வீதியால் வந்த பேருந்து மோதித் தள்ளியது. விபத்தில் மெலிஞ்சிமுனைப் பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் அகிலன் (வயது-18) என்ற இளை ஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்தால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் விபத்தை ஏற்படுத்திய பேருந்தைச் சரமாரியாகத் தாக்கிக் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். இதனால் அந்த இடத்தில் பெரும் பதற்ற நிலமை ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் நிலமை யைக் கட்டுப்படுத்தியதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

பொலிஸாரின் விசாரணை களை அடுத்து பேருந்தைச் செலுத்தி வந்த சாரதி கைது செய்யப்பட்டார். அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த இளைஞனின் உடலம் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (கு-8-10-110-6)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் துடுப்பாட்ட, எல்லே அணிகளுக்கான ஜெர்சி கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஊடாக பழைய மாணவர் ஒருவரால் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான நிகழ்வு கல்லூரியில், கல்லூரி அதிபர் எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம)

# குறிஞ்சிக்குமரன் அசத்தல் வெற்றி

கரணவாய், மே 18

இறுதி நேரத்தில் அதிரடிக் கோலைப் பதிவுசெய்து உடுப்பிட்டி யுத்தின் வெற்றியைத் தட்டிப்பறித்தது குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

13 ஆவது நிமிடத்தில் யுத் சார்பாக முதல் கோல் பதிவானது. இரு அணிகளும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்தின. எனினும் மாற்றங்கள் எதுவும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. யுத்தின் ஆதிக்கம் இரண்டாம் பாதியில் நீண்டு சென்றது. இறுதி நிமிடத்தில் கோலைப் பதிவுசெய்து 1:1 என்றாக்கினார் குறிஞ்சிக் குமரனின் கஜந்தன்.

சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது குறிஞ்சிக் குமரன் அணி. (ம-108)

## 7 தடவைகள்

ஐ.பி.எல். தொடரில் நடப்பு வருடத்துடன் சேர்த்து மொத்தமாக 7 தடவைகள் இறுதியாட்டத்தில் விளையாடவுள் ளார் டோனி. மும்பைக்கு எதிராக நேற்று முன்தின ஆட்டத்தில் புனே வெற்றிபெற்றதன் மூலமே இந்த சாதனை அடைவுக்கு டோனி சொந்தக்காரர் ஆகியுள்ளார். முன்னதாக 6 தடவைகள் சென்னையின் அணித்தலைவராக இறுதிக்குள் அடியெடுத்துவைத்த டோனி, முதன்முதலாக சாதாரண வீரராக இம்முறை இறுதியில் விளையாடவுள்ளார். (ம)

# அம்பாள்-நியூட்டன் முன்னேற்றம்

கரணவாய், மே 18

கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகம் மற்றும் நியூட்டன் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றன.

கலைமதிவிளையாட்டுக்கழகம்யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இரண்டு ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலாவது ஆட்டத்தில் நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகமும் ஸ்மார்ட் ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. 7ஆவது நிமிடத்தில் அஜந்தன் முதல் கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்று சிறி அம்பாளின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 6 அவது நிமிடத்தில் ருபிந்தன் அம்பாளின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் சிறி அம்பாள் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில்சமரபாகுநியூட்டன்விளையாட்டுக் கழகமும் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகமும்மோதின. இதில்தொடக்கம்முதல் இறுதிவரை ஆதிக்கம் செலுத்திய நியூட்டன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)




# பிரான்ஸ் தொடரில் விலகினார் பெடரர்

களிமண்தரை ஆடுகளத்தில் நடைபெறும் பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் இருந்து காயம் காரணமாக சுவிற்சர்லாந்து வீரர் பெடரர் விலகினார்.

கடந்த வருடம் காயம் காரணமாக கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஓய்விலிருந்தார் பெடரர். நீண்ட இடைவெளியின் பின்னர் நடப்பு வருடத்திலேயே மீண்டும் களத்துக்குத் திரும்பினார். இந்த வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் கடந்த ஜனவரியில் நடைபெற்றது. பெடரர் சம்பியனானார். அதன் பின்னர் நடைபெற்ற சிறு தொடர்களிலும் ஆதிக்கம் செலுத்தினார். இந்த நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள பிரான்ஸ் தொடரில் இருந்து காயம் காரணமாக அவர் விலகினார்.

"தற்போழுது காயம் மிகவும் சிறிய அளவிலேயே உள்ளது. பிரான்ஸ் தொடரில் விளையாடினால் காயம் பெரிதாக வாய்ப்புள்ளது. எனவே தொடர்ந்து களமிறங்குவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் தொடரில் இருந்து விலகுகிறேன்" என்று அவர் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் தொடர் களிமண் தரையிலேயே நடைபெறும் இத்தகைய தொடர்களில் பெடரர் பெரிதளவில் சாதித்ததில்லை. எனவே அவர் விலகியமை தொடரில் விறுவிறுப்பைக் குறைக்காது. அதேநேரம் ஜூலை மாதம் ஆரம்பமாகும் மிகப்பெரிய தொடரான விம்பிள்டனில் களமிறங்குவதை பெடரர் உறுதிப்படுத்தினார். (ம)




# இந்திய கிரிக்கெட்டை எண்ணி கடும் அச்சத்தில் வில்லியர்ஸ்

"ஒரு தென்னாபிரிக்க வீரர் என்ற வகையில் இந்திய அணியின் தற்போதைய பலத்தையும் அதன் எதிர்காலத்தையும்எண்ணி மிகவும் அச்சமடைந்துள்ளேன்" இவ்வாறு தெரிவித்தார் வில்லியர்ஸ்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இந்திய அணியின் எதிர்கால வீரர்களாக பல இளம் வீரர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். பந்துவீச்சு, துடுப்பாட்டம், இலக்குக்காப்பு, என்று அத்தனை துறைகளிலும் இந்திய அணியை சரிவின்றி தொடர்ந்து பலப்படுத்தக்கூடிய வீரர்கள் உள்ளனர்என்றுகருதப்படும்நிலையில் இது தொடர்பில் தனது அச்சத்தை வெளியிட்டார் வில்லியர்ஸ்.

"நான் இந்தியகிரிக்கெட்டைப் பார்த்து பயப்படுகிறேன். ஐ.பி.எல். தொடரினால் இந்திய கிரிக்கெட் மேலும் மேலும் வலுவடைந்து கொண்டே வருகிறது. உலகின் தலைசிறந்த வீரர்களுக்கு எதிராக ஏற்படக்கூடிய அழுத்தங்களை, நெருக்கடிகளை சவாலுடன் சந்திக்கும் இளம் வீரர்கள் ஐ.பி.எல். தொடர் மூலம் மிகப்பெரிய அனுபவம் பெற்று வருகின்றனர். மற்றெந்த நாடுகளிலும் இது இல்லை. பிற நாடுகள் மெதுவாகவே முன்னேறி வருகின்றன. அவர்களும் இந்தியாவை எட்டிப்பிடிப்பார்கள் ஆனால் இப்போதைக்கு இந்தியா உச்சத்தில் இருப்பதாகவே கருதுகிறேன். இந்தியாவில் நிறைய, பெரிய கிரிக்கெட் திறமைகள் உள்ளன. எப்போதும் சிறந்த இளம் வீரர்கள் வந்தவண்ணமாக உள்ளனர். இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் இத்தகைய சிறந்த வீரர்களின் கையில்உள்ளது" எனவில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# ஆஸி. கிரிக்கெட் சபைக்கு வோர்ணர் மிரட்டல்



ஆஸ்திரேலிய வீரர்களுடனான ஒப்பந்தத்தை முறையாகவழங்கத்தவறினால், கிரிக்கெட்டில் ஆஸ்திரேலியா தனது பரம எதிரியாகக் கருதும் இங்கிலாந்துக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடரை வீரர்கள் புறக்கணிக்க வேண்டிவரும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு எச்சரிப்பு விடுத்துள்ளார் வோர்ணர். ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கும் சபைக்கும் இடையிலான ஒப்பந்தம் அடுத்த மாதம் 30 ஆம் திகதியுடன் முடிகிறது. புதிய ஒப்பந்தம் தொடர்பில் தற்போது பேச்சு நடத்தப்படுகிறது. வீரர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் ஒரு தொகையை உள்ளூர் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காக செலவிட ஆஸ்திரேலிய கிரிக்கெட்சபைதிட்டமிட்டுள்ளது. எனினும் இதில் உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்த நிலையிலேயே வோர்ணர் இவ்வாறு தெரிவித்தார். "ஆஷஸ் தொடர் ஆஸ்திரேலியாவில் நவம்பரில் தொடங்குகிறது. முறையான ஒப்பந்தம் வழங்கப்படாவிட்டால் ஆஷஸ் தொடரை புறக்கணிப்போம். தவிர வேறுசில முக்கிய தொடர்களையும் புறக்கணிக்க வேண்டிவரும்" என்று வோர்ணர் எச்சரிக்கை விடுத்தார். (ம)



# இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 18
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்றும் சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)




# சென். ஹென்றிஸ் அணி மாகாணத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 18
வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் இளவாலைசென். ஹென்றிஸ் அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென். சேவியர் அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் சென். ஹென்றிஸ் அணி வெற்றிபெற்று மாகாணச் சம்பியனானது.
அரையிறுதியில் சென். ஹென்றிஸ் அணி ஊர்காவற்றுறைசென். அன்ரனீஸ் அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இலகுவாக இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

பெண்கள் கால்பந்தாட்டம்

# மகாஜனா சம்பியன்

யாழ்ப்பாணம், மே 18
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது மகாஜனா. (ம-23)

# சென். பற்றிக்ஸ் அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 18
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூட்சியா அணி மோதியது. முதல் பாதியில் ஒரு கோலைப் பதிவுசெய்து 1:0 என்று முன்னிலை வகித்தது சென். பற்றிக்ஸ். இரண்டாம் பாதியில் பதிலடி கொடுக்க லூட்சியா பலமுறை முயன்ற போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பற்றிக்ஸ். (ம-23)





# எல்லே இன்று

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான எல்லே தொடர் இன்று முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன. ஆண்களுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும் பெண்களுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-108)

# கரவெட்டி இளைஞர் கழக இறுதியாட்டங்கள் நாளை

கரணவாய், மே 18
கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளன.
வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் இளைஞர் கழகமும் நெல்லியடி என்.சி.சி. இளைஞர் கழகமும் மோதவுள்ளன. தொடர்ந்து இடம்பெறும் ஆண்களுக்கான கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய இளைஞர் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் இளைஞர் கழகம் மோதவுள்ளது.
இளைஞர் கழகத் தலைவர் பி.பிரவிந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் விருந்தினர்களாக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரன், கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் எஸ்.ரஜீவ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2878 திகதி: 17.05.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
09 15 22 24 O
போனஸ் இல. 46
சனிக்கிழமை ஜக்பொட் ரூ.6,16,08,157/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.05.20 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## விற்பனை பிரதிநிதி தேவை

பிரபல தனியார் நிறுவனத்தின் யாழ். மாவட்ட விநியோக நிலையத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.

கல்வித் தகைமை - G.C.E. A/L
நேர்முகத்தேர்வு - இன்று 18.05.2017
காலை 10.00 மணி தொடக்கம் 12 மணிவரை

**லக்ஷ்மி ஏஜென்சி**
**23/11, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.** **021 222 7167**

[29836]

## மரண அறிவித்தல்

### திருமதி யோகரட்ணம் சந்திரகுமாரி (சாந்தி)



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகரட்ணம் சந்திரகுமாரி (சாந்தி) நேற்று (17.05.2017) புதன்கிழமை கால்மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் யோகரட்ணத்தின் அன்பு மனைவியும் சந்திரா, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராஜ் - சுவாசினி, மதுரா - பால்ராஜ், ஜனனி - தயாபரன் ஆகியோரின் மருமகளும் மருமக்களும் பாலலக்சன், யதுசன், விதுசா(லண்டன்), லக்ஸ்மன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கலைவாணி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி மக்சன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலைவாணி வீதி,**
**கோண்டாவில் வடக்கு.**


தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 996 3945 (மகன்-ராஜ்)**

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் இராஜரட்ணம்

(ஓய்வு நிலைப் பணிப்பாளர், உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம்)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்டிருந்த தர்ம லிங்கம் இராஜரட்ணம் 16.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா அன்ன ரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சித்ரா (ஓய்வு நிலை பிரதி அதிபர், யா/ திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு கணவரும் நர்மதா(தேசிய சேமிப்பு வங்கி), Dr.சுரனுதா (Add. M.O.H குண்டசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபன் (தேசிய சேமிப்பு வங்கி தலைமையகம்) Dr.A.சுதாகரன் (தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் இலட்சுமிப்பிள்ளை(கனடா) அமரர்களாகிய கந்தையா, நாகம்மா, பூபதி மற்றும் இராமச்சந்திரா (ஓய்வு நிலை விவசாய பண்ணை முகாமையாளர்), திலகம் பாலகுமாரன் (ஓய்வு நிலை ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சத்தியபாலன்(கனடா), இளங்கனி (கனடா)ஆகியோரின் ஸ்மைத்துனரும் ஆதிரா, ஆதிரன், ஆத்மயன் ஆகியோரின் அன்புத் தாத்தாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18.05.2017 வியாழக்கிழமை மு.ப 11.30 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 222 6803**

### உடனடி விற்பனைக்கு

சிறிய, பெரிய கண்ணாடி அலுமாரிகள், சோக்கேஸ், விறாக்கைகள் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். புடைவைக் கடை, பான்சி, புத்தகக் கடைகளுக்கு உகந்தது.

**077 666 0211-நீர்வேலி**

Galaxy Star
வெற்றி வாரம் 160 திகதி 17.05.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 15 29 41 50
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,210,056/-
21.05.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

DLB
CAR PLUS
சீட்டிழுப்பு வாரம் 06
சீட்டிழுப்பு திகதி 2017.05.17
வெற்றி இலக்கங்கள்
10 11 51 Q வெள்ளி
ஆங்கில எழுத்து
அதிஷ்ட நாள்
- 17
4,127,300/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்



### தம்பிராஜா மகாலிங்கம்

உடுவில் கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராஜா மகாலிங்கம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா சிவகெங்கை தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் (சந்திரா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற நல்லையா - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், அன்னலட்சுமி மற்றும் கமலாதேவி, யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் கமலாதேவி காலஞ்சென்ற தம்பிராசா, மற்றும் ஜெயபாலசிங்கம் பரமேஸ்வரி, இராஜேஸ்வரன், இராசேந்திரன், புவனேந்திரன், இராஜேஸ்வரி, நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஜிதா, விஜிந்தன், லேந்தினி, கதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரராஜா, அருள்மதி, ராஜ்மோகன், அனுஷா ஆகியோரின் மாமனாரும் பொமிலா, கோபிநாத், டிவாகர், தாரணிகா, கபிசனா, வர்ஷிகன், விதுஷா, சனுஷா, தனுராஜ், பவதீசன், பவதீசனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2017) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடிதெற்கு,**
**மாரிதோட்டம், யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற விலகலாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 7 இலக்குகள் இழப்புக்கு 128 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பின்னர் மழை தொடர்ந்து குறுக்கிட்டமையால் நள்ளிரவு 11.40 மணிவரை கொல்கத்தாவின் இன்னிங்ஸ் ஆரம்பிக்கப்படவில்லை. (ம)

# குக்கை விடவும் ரூட் சிறந்தவர்

## சொல்கிறார் வோர்ண்

"தலைமைத்துவத்தில் அலிஸ்டர் குக்கை விட ஜோ ரூட் சிறப்பாகச் செயற்படுவார்" இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் வோர்ண்.

இங்கிலாந்து அணி இறுதியாக இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடிப் படுதோல்வியடைந்தது. இந்தத் தோல்வியை அடுத்து அணித் தலைவர் அலிஸ்டர் குக் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதையடுத்து அவர் பதவி விலகினார். புதிய தலைவராக ரூட் நியமிக்கப்பட்டார். எனினும் ஓர் தலைவராக ரூட் இன்னும் ஓர் ஆட்டத்திலேனும் விளையாடவில்லை. அவரது தலைமைத்துவம் தொடர்பில் பல எதிர்பார்ப்பு நிலவியுள்ள நிலையில் குக்கை விட ரூட் சிறப்பாகச் செயற்படுவார் என்று நம்பிக்கை தெரிவித்தார் வோர்ண்.

"அலிஸ்டர் குக் ஓர் துடுப்பாட்ட வீரராகவும், அணித்தலைவரா கவும் கடந்த மூன்று வருடங்களாக தடுமாற்றத்தை எதிர்கொள்கிறார். ஆனார் ரூட் அணியை வெற்றிபெற வைக்க ஒவ்வொரு ஆட்டத்திலும் கடும் முனைப்புக் காட்டுகிறார். அவரிடம் சிறந்த தலைமைத்துவமும் உள்ளது. அவர் உபதலைவராக செயற்பட்டுள்ள படியால் தலைமைத்துவம் பெரும் சுமையாக இருக்காது. அலிஸ்டரை விடச் சிறப்பாகச் செயற்படுவார்" என வோர்ண் மேலும் தெரிவித்தார். (ம)



## மரண அறிவித்தல்



### திருமதி மகாலக்சுமி செல்வரட்ணம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலக்சுமி செல்வரட்ணம் (17.05.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரட்ணத்தின் (செல்வம் Motor Works, கோண்டாவில்) அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் பாசமிகுமகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான அரியரட்ணம், இராஜரட்ணம், திருஞானம் மற்றும் குணரத்தினம், கணேசரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜெகத்ஜெனன் (UK), விலாசினி, இன்பா (USA), ரசிகா ஆகியோரின் பாசமிகுதாயும் கலா (UK), பஞ்சரட்ணம் (Manipay Rice Mill ), Dr.சிவகுமாரன் (USA), இராசகுலேந்திரன் ஆகியோரின் மாமியும் சங்கீத், துஷிதா, சிவானுஜா, பிரகலாத்(Cargills Bank), ராகவன், ரதீஷ், சுஜாந்தி காலஞ்சென்ற இஷானி ஆகியோரின் பேர்த்தியும் அபர்ணா, கீர்த்தனா, ஆறியன் ஆகியோரின் பூட்டியும் சரஸ்வதி, ஜெயமணி காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கணநாதன் மற்றும் வாலை ஆனந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பஞ்சரட்ணம் (மருமகன்)**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.